உ

சிவமயம்.

சுந்தரசேகரத்திற்கு

இரண்டாம்பாகமாகிய

தியாகராஜசேகரம்.

இஃது

திரிசிரபுரம் ஆண்டார்வீதி

சோதிடவித்வான்

தியாகராஜபிள்ளையவர்களால்,

பலநூல்களிலிருந்துசேகரிக்கப்பட்டது.

இதை,

ஷை யூர் சின்னக்கடைத்தெரு

ஜோசியம். நா- இரங்கசாமிபிள்ளையவர்களால்

பரிசோதிக்கப்பட்டு,

இந்நூலாசிரியர் மருகராகிய

திரிசிரபுரம்

புஸ்தகவியாபாரம்

தி. சபாபதிபிள்ளையவர்களால்

தமது

சென்னை

ஸ்ரீமட்டுவார் குழலம்பாள் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1903

Registered Copy Right.

உ

விளம்பரம்.

இதனால் சகலமானவர்களுக்குந் தெரிவிப்பதுயாதெனில், திருச்சினுப்பள்ளி ஆண்டார் தெருவில் வசித்த சோதிடவித்வான் தியாகராஜபிள்ளையவர்கள் பலநூல்களிலிருந்து சேகரித்துத் தன்பெயர் புத்தகரூபமாக விளங்கும்பொருட்டு "தியாகராஜசேகரம்" எனப்பெயரிட்டு வைத்திருந்த இந்த சோதிடநூலை, தஞ்சாவூருக்கடுத்த இளங்காடு கணிதசோதிடப்புலவர் சண்முகவய்யரவர்களும், ஷெ யார் மாணுக்கர் உத்தமனூர் புதுவூர் சோதிடம் நீலகண்டஅய்யரவர்களும், வாழையூரிலிருக்கும் சோதிடம்-ஆறுமுக அய்யரவர்களும் இன்னும் சில சோதிடர்களும் கேட்டுக்கொண்டபடி இந்நூலாசிரியர் மருகர், திரிசிரபுரம் புஸ்தக வியாபாரம் தி. சபாபதிபிள்ளை யவர்களால் தமது சென்னை ஸ்ரீ மட்டுவார் குழலாம்பா ளச்சுக்கூடத்தில் அச்சிட்டு மகா கனம் பொருந்திய கவர்ன்மெண்டாரின் 1867-ம் ௵ த்திய 25-வது ஆக்ட்டு 20-வது பிரிவு 6-வது விதியின்படி காப்பிரைட் என்னும் சுதந்தரம் பெற்று ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருப்பதால், இதை எந்த அச்சுக்கூடத்தலைவர்களும் மற்றவர்களும்ஷெயார் அனுமதியன்னியில் அச்சிடக்கூடாது. அப்படி அச்சிடுவாராகில் சட்டப்படி நடத்தப்படும்.

இப்படிக்கு.
திரிசிரபுரம்-சின்னக்கடைத்தெரு.
சோசியம்
நா. இரங்கசாமிப்பிள்ளை.

சோதிடக்கடலகராதி.

இதுவரையில் சோதிடசாஸ்திரத்திற் கென்று தனிமையாக ஓர் அகராதி ஏற்படாமல் ஷெ சாஸ்திரச்சொற்களை யெல்லாம் விரிவகராதி நிகண்டு முதலியவைகளைப்பார்த்து தெரிந்துக்கொள்வது கஷ்டமாயிருக்கிறதென்று அநேக சோதிடர்கள் கேட்டுக்கொண்டபடி, திரிசிரபுரம் - சின்னக்கடைத்தெரு ஜோசியம் **நா. இரங்கசாமிபிள்ளை**யவர்களால் ஷெ அகராதி முதலான பற்பலசாஸ்திரங்களிலிருந்து சோதிடச்சொற்களைமட்டும் ஆராய்ந்தெடுத்து "**சோதிடக்கடலகராதி.**" என்றுபெயரிட்டு அச்சிடப்பட்டிருக்கிறது. இது சோதிடர்களுக்கு மிக்க உபயோகமாகவிருக்கும். வேண்டியவர்கள் தஞ்சாவூர் புதுமார்க்கட்டில் தி. ச. கிருஷ்ணசாமிப்பிள்ளை புஸ்தகக்கடையிலும், புதுக்கோட்டை தி, ச. இரங்கசாமிநாயுடு புஸ்தகக்கடையிலும், என்னிடத்திலும் நேரிலும் வி. பி மூலமாயும் பெற்றுக் கொள்ளலாம்,

இப்படிக்கு,
தி. சபாபதிபிள்ளை.
புஸ்தகவியாபாரம்
திருச்சிராப்பள்ளி.

கடவுள் துணை.

முகவுரை.

திரிகாலக்கியானிகளாகிய மகரிஷிகளாலியற்றப்பட்ட எண்ணிறந்தசோதிட நூற்களைக் கற்றுணர்ந்த சோதிடவல்லவர்கள் அநேகர்களால் வெவ்வேறுகவிகளாக இயற்றப்பட்டிருந்தும் அவைகள் பெரும்பான்மையும் சோதிடம் கற்றவர்களுக்கன்றி மற்ற யேனையோர்களுக்கும் புலப்படாவாகையால் யாவரும் எளிதில் உணருமாறு வசனரூபமாக சுந்தரசேகரமென்னும், — சோதிடநூல் ஏற்பட்டிருந்தாலும் அது முதலில் சோதிடம் கற்றுக்கொள்பவர்களுக்கு மாத்திரம் உபயோகமேயல்லாமல் ஓர் ஜாதகத்தின் கிரக நிலைகளை யறிந்து பலாபலன்களை விவரமாக அறிந்துகொள்ளும் விதத்தை அதில் கூறாமல் நிறுத்திவிட்டமையால், அதற்கு இரண்டாம்பாகமென்று சொல்லும்படியாக சாதக அலங்காரம், சிந்தாமணி, சிகாமணி, சூடாமணி முதலிய நூற்களை அனுசரித்து துவாதச பாவகபலன்களையும் தசவர்க்கம் துவாதச இலக்கினம் அஷ்டவர்க்கம் முதலிய கணித விதங்களையும் யாவரும் சுலபமாய் அறிந்துகொள்ளும் பொருட்டு உலோகோபகாரமாய் "தியாகராஜசேகரம்" என்னும் இந்தநூலை வசனரூபமாக வெளியிடப்பட்டது.

முதலில் ஓர் ஜாதகத்தின் ஆயுட்பாவம் அறியும் விவரம்.

ஜென்ம இலக்கினத்தையும் இலக்கினதிபதியையும் அட்டமாதிபதியையும் பத்தாமிடத்துக்குடையோனையும் கவனித்துப்பார்த்து இம்மூவர்களுக்கும் ஏற்பட்ட வலிமை உறவுகளையும், இவர்கள் எவ்விடமிருந்து ஒருவருக்கொருவரடைந்திருக்கும் சர திர உபயங்களாலும் ஒவ்வொருவர்களும் தங்கள் தங்கள் தானத்தைவிட்டு தனக்கு எத்தனையாம்வீடு பெற்றிருக்கிறார்களென்றும், அவரவர்களுடன் சேர்ந்தவர்கள் அல்லது பார்த்தவர்களுடைய குணம், ஆதிபத்தியம், உறவு, பகை, நீச்சம், ஆட்சி, உச்சம் இவைகளை அறிந்தபின் இவ்வாறேசந்திரனிருக்கும் இலக்கினத்தையும், சனி இருக்கும் இலக்கினத்தையும் முக்கியமாய் கவனித்து இவைகளால் அல்ப மத்திம தீர்க்கமென்பதை நிச்சயித்துக்கொண்டு அப்பால்பாலாரிஷ்டம் உடல்த்திசை உயிர்த்திசை காலச்சக்கிர திசை இவைகளை செவ்வையாக உணர்ந்துதன் அறிவும்சேர்த்து ஆயுட்பாவகம் அறியவேண்டியது: இன்னும் ஆயுட்பாவகத்தை வெவ்வேறு விதமாய்ப்பார்க்கக் கூடியதை இவ்விடத்தில் விரிக்கிற் பெருகுமென்று இம்மட்டே விடுத்தனம்.

பலன் அறியும் விவரம்

ஒன்றுமுதல் பனிரெண்டு பாவக பலன்களில் எத்தனையாமிடத்து பலனறியவேண்டுமோ அந்தந்தவிடத்து பலன்களுக்கு அந்தந்த இடத்தையே இலக்

கினமாக வைத்துக்கொண்டு அவ்வீட்டுக்குடையவன் அவ்விடத்திலிருந்து எத்தனையாம்வீடு பெற்றிருக்கின்றனனோ அதையும் அது ஜென்மலெக்கினத்திற்கு எத்தனையாமிடமென்றறிந்து அவனோடு சேர்ந்த அல்லது பார்த்த கிரகம் ஜென்மலெக்கினத்திற்கும், நாம் பலன்வேண்டிய கிரகத்தின் வீட்டுக்கும் எத்தனையாமிடத்திற்குடையவர்களென்று மறிந்து, அப்பால் நாம் பலன் பார்க்கவேண்டிய கிரகத்தின் வலிமையை அதாவது தசவர்க்கம் அஷ்டவர்க்கமுதலியவைகளில் அந்தந்த கிரகத்திற்கு மேற்பட்ட வலிமை யின்னதென்று அறிந்து ஜாதகத்தில்நடந்துவரும் திசாபுத்திகளையும் தற்காலம் நடக்கும் கோட்சாரபலன்களையுமறிந்து பலனறியவேண்டுமென்பதாம்.

இலக்கின மாதியாக பனிரெண்டு பாவகபலன்களையும் பிரித்து ஒவ்வொரு பாவகங்களுக்குள்ள பலாபலன்களை பொதுவாக இந்நூலிற் கூறுவதுகாண்க.

சுந்தரசேகர முதற்பாகம்.

அநேக விஷயங்கள் சேர்த்து அச்சிட்ட மூன்றும் பதிப்பு.

ஜனனகால ஜாதகக்குறிப்பு எழுத ராசி லக்கினம் நவாம்சலக்கினம் ருசிச்சக்கிரங்களில் கிரகங்களை அமைக்கவும் ஆட்சி உச்சம் நட்பு பகை நீசம் மூலத்திரிகோணம் சரம் ஸ்திரம் உபயராசிகளைத்தெரிந்துக்கொள்ளவும் ராசிகளிலிருந்து கிரகங்கள்பார்க்கும் இடங்களும் அவரவர்களுக்கு ஏற்பட்ட பாவ சுபஸ்தானங்களையும் தெரிந்துக்கொண்டு யோகபலன் ஆயுள்பலன் முதலிய பலன்களையும் மற்றும் அநேகம் தெரிந்துக்கொள்ளும் விஷயங்களையும் சுந்தரசேகர முதற்பாக முதற் பதிப்பில் விபரமாய்த் தெரிந்துக்கொள்ளலாம் என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே. இத்துடன் துவாதசபலன் புத்திரபாவபலன் மேற்படி தோஷ நிவர்த்தி காலச்சக்கிர திசை புத்தி பாச்சல் அஷ்டவர்க்கம் மாரகதிசை முதலிய அருமையான அநேகவிஷயங்கள் நூதனமாய்சேர்த்து மூன்றும்பதிப்பு அச்சிட்டிருக்கிறது. விலை அணா 8,

வேண்டுவோர் திருச்சினுப்பள்ளி·தஞ்சாவூர் புதுக்கோட்டை இவ்வூர்களிலுள்ள மேற்படி திரிசிரபுரம் ம-ா-ா- ஸ்ரீ தி. சபாபதிபிள்ளை யவர்களது புஸ்தகக்கடைகளில் நேரிலும் வி. பி. மூல்மாயும் பெற்றுக்கொள்ளலாம்.

நா-பெ.

உ

கடவுள் துணை.

சுந்தரசேகரத்திற்கு

இரண்டாம்பாகமாகிய

தியாகராஜ சேகரம்.

அறுசீர் விருத்தம்.

சீர்மருவு சோதிடத்தின் சாரமெலாம் பாகுபெறத் திரட்டியொன்றுய்ப்
பார்மருவு பலர்புகழ சுந்தரசேகரத்திரண்டாம் பகுதி யென்னத்
தார்மருவு தியாகராசச்சேக ரம்மெனுநூற் றமியேன் சொல்ல
கார்மருவு கஜமுகனின் கருதரிய பூங்கழல்கள் காப்பதாமால்.

இலக்கின பாவகம்.

இலக்கினத்தில், சூரியனிருந்தால்—பயித்தியசரீரம், ஆரோக்கியவான், கண் நீலவர்ணமாயிருக்கும், சூரத்துவமுண்டு, கொஞ்சம் நேத்திரரோகம்.

,, சந்திரனிருந்தால்—கண் உன்னிதமாயிருப்பான், வியாதியுள்ளவன், மூக்கில் ஜலம் வடியும், நீர்விழு ரோகமுண்டு, பெண்கள் சகோதரமுண்டு, வாதசரீரம், பயிர்செய்வான், கண்டத்திலே ரோகமுண்டு, குய்யத்திலே வியாதியுண்டு கொஞ்சம் கருணை, ரோகம், அதிக மூர்க்கன், தயாபரன், திர்க்காயுள், ஞானியாயிருப்பான்

,, செவ்வாயிருந்தால்—சரீரஉஷ்ணம், மேகசரீரம், திருட்டுப்புத்தி, கழுத்து பெரிதாயிருக்கும், சிவந்தசரீரன், பாலவயதில் பிதிருக்குப் பீடை யுண்டு, ராஜசாமார்த்தியன், கோபமுடையவனுகவும் படிப்பில்லாதவனுகவுமிருப்பான்.

,, புதனிருந்தால்—சரீரபூஷணன், மந்திராலோசனை உச்சாடனமுள்ளவன், பந்துக்கள் உண்டு, சோதிடசாஸ்திரம் அறிவன், வித்தையுண்டு, காவிய கணிதமுடையவன், ஞானவான், இராஜசன்மான முடையவன், தனவான், வாச்சாலகன், தீர்க்காயுள்.

,, வியாழனிருந்தால்—தன்வீட்டிலே க்ஷேமமுமுண்டு; தர்க்கசாஸ்திரமறிவன், புத்திவான், சுகமுடையவன், சேனாதிபதி, இராசபூச்சியன், சதுரங்கவுபாயன், அழகுண்டு, ஞானி, தீர்க்காயுள்.

,, சுக்கிரனிருந்தால்--அதிகாரமுடையவன், கணிதமுடையவன், வாசனையுடையவன், பெண்சாதிபிறியன், வஸ்திர அலங்காரப்பிறியன், சந்தன புஷ்ப பிறியன், காமப்பிறியன், சுகசரீரன், நேத்திர அழகுள்ளவன், தீர்க்காயுளுண்டு.

,, சனியிருந்தால்—புத்திரவாதனையுண்டு, துர்ப்புத்தி, துர்விசாரன், ராஜகோளன், பெரியமனிகன், வாதசரீரன, உச்சாகமுடையவன், கிராமாதிகாரமுடையவன், வித்துவான், மௌனமுடையவன், ரூபவான், ரோகி, ஆட்சி உச்சமாகில், ஞானவானுமாய் தனவானுமாய் தீர்க்காயுளுடையவன்.

,, இராகு அல்லதுகேதுவிருந்தால்—வியாதி யுடையுவன், திரவியமுடையவன், விதிகளை தீர்க்கவகையறியவல்லவன், விஷப்பரிக்ஷை பார்க்க வல்லவன், புத்திரனுள்ளவன், எளியவன், அற்பாயுளுள்ளவனாகவிருப்பான்.

மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, மகரம், இராசிகளில், ராகுவிருக்கிறபோது பிறந்தால்-யோகவான், போகியாயிருப்பான், தயையுள்ளவன், தீர்க்கபுத்தி, ஸ்திரீ வாஞ்சை, தன்குலத்திற்கு பிறபலமாகவிருப்பான், செவ்வாய்சந்திரன் கூடிநிற்கில் மாதர்தோஷம், சூரியன் செவ்வாய் சனி கூடிநிற்கில் பிதாவுக்கு தோஷமுண்டு.

மேஷம்-திரவியவான்	துலாம்-புத்திரன்தங்காது
ரிஷபம்-சங்கிதப்பிரியன்	விருச்சிகம்-துர்க்குணமுடையவன்
மிதுனம்-தனவான்	தனுசு-மனைபீடையுள்ளவன்
கடகம்-கோபி	மகரம்-நித்திரையுடையவன்
சிம்மம்-மாலைக்கண்ணன்	கும்பம்-சுகுணவான்
கன்னி எழுதவல்லவன்	மீனம்-வெகுதாரன்

இலக்கினத்திற்குமுன் சுபர்நிற்க தனவான், கிழவரையுள்ளவன்.

,, பின்னே சுபர்நிற்க, தனவான் சற்குணமுள்ளவன்-கீர்த்திமான் தர்மசிந்தனையுள்ளவன்.

,, இருபுறமும் சுபர்நிற்க, இராஜயோகம். இருபுறமும் பாபர்நிற்க தரித்திரயோகம்-தனவீனமுடையவன்-துஷ்டன்-பிரதேசங்களில் ஜீவனம்பண்ணுவான் அற்பவயதுள்ளவன்.

,, இலக்கினத்தில் சனியிருந்து சந்திரனாவது சுக்கிரனாவதுஏழில் நிற்க, அழிந்துபோனவளுக்கு பர்த்தாவாவான்.

இலக்கினாதிபதியுடன் புதன்கூடினால், முந்தினபிள்ளை பெண் பெறுவன்.

,, இலக்கினாதிபதி பாபருடன் கூடி ராசியிலாவது எட்டிலாவது யிருந்தால், சரீரத்தில் சிரங்கு கொப்பளம் அரையாப்பு கிரந்தி இரணமுண்டாம்,

இலக்கினாதிபதி, சூரியன் செவ்வாயாகில், சுடுசாதத்தின்மேற்பிறியன்

,, சந்திரனாகில், தித்திப்பில்விருப்பன்

,, புதனாகில், புளிப்பில்விருப்பன்

,, வியாழமாகில், தயிரில் விருப்பன்

,, சுக்கிரனாகில், சம்புசிப்பு

,, சனியாகில், காட்டுக்கீரைமேல் விருப்பம்

இலக்கினாதிபதியுடன் இராகுகேது கூடினால்—சத்திபூசை செய்து மாமிசம் புசிப்பான்.

இலக்கினம் மகரகும்பமாகில், அதில் சனியிருந்தால் சகல பாக்கியமுண்டு.

இலக்கினம் கடகமாகில், அதில் சந்திரனிருந்தால் பூமிபாலகனாகவும் யோகவானாகவு மிருப்பான்.

இலக்கினாதிபன் பத்துக்கதிபன், இவர்கள் பெலத்திருந்தால் உத்தியோகம் செய்வான்,

இலக்கினாதிபதி பெலவீனமாய் ஆறு எட்டு பன்னிரெண்டிலிருந்தால் சேவகாவிருத்தி அல்லது கூலிஜீவனம் பண்ணுவான், மற்ற கிரகங்களின் பலாபலன்கள் பார்த்து அறிந்து சொல்லவும்.

இலக்கினாதிபனிருக்கிற ராசிக்கதிபன், ஆட்சியுட்சம் கேந்திரமும் திரிகோணங்களிலுமிருந்தால், அவன் பருவதங்களிலே மூலிகை மந்திரமறிந்து சித்துபுருஷனாகவிருப்பான்.

இலக்கினாதிபதி இலக்கினத்திலிருந்து பத்துக்குடையவன் கேந்திரம் திரிகோணங்களிலிருந்தால், தன்குலத்திற்கு பிரபலமாய்வெகு ஜனங்களுக்கு உபகாரியாய் பாக்கியவானாயிருப்பான்.

இலக்கினுதிபனும் ராசிக்கதிபனும் சூரியனும் ஏழுக்கதிபனும் நட்ட விருக்க அவன் தீர்க்காயுள் பெறுவன்.

இலக்கினுதிபன் நாலில் நாலுக்கதிபன் இலக்கினத்திலு மிருந்தால், அ ன் தகப்பனுக்கு மேலான அதிக அயிஸ்வரியமுள்ளவனு விருப்பான்.

நாலில் ஒருத்தரும் இல்லாவிட்டால், அவன்பிறந்தவீட்டிற்கு சமீபத் தில் பாழாயிருக்கும்.

நாலாமிடத்திற்கு முன்னே பாபரிருந்தால் பிறந்தவீட்டிற்கு மேற்கே பாழாயிருக்கும்.

இலக்கினத்திற்கு உ-ச-க0-கஉ இந்த ராசிகளில் எத்தனை கிரகங்களி ருந்தனவோ அத்தனைபேர்கள் அவன் பிறந்தவீட்டிலிருந்த பேர்கள் என்று அறியவும்.

அதில் சனியிருந்தால் அன்னியஸ்திரீ ஒருத்தியென்று சொல்லவும்.

சுக்கிரன் சந்திரனிருந்தால் சுபமங்கலியென்றும் செவ்வாய் புதனிருந் தால் அமங்கிலியென்றும் சொல்லவும்.

மேஷம் ரிஷபம் சிம்மத்தில் சூரியன் நிற்க, மற்றகோள்கள் உபயராசி யில் பலமாய் நிற்க, பிறந்த குழந்தை இரட்டையாகும் அங் காரகன் ஏழாமிடத்திலும், ஆதித்தன் எட்டாமிடத்திலும் நிற் க, மற்றக்கோள்கள் சரராசியிலிருந்தால் ஒருபலனு மில்லை யென்று அறியவும்.

இலக்கினத்தில் நாலாமிடத்தோனும், பாக்கியாதிபதியுங்கூடி சுபக்கிர கங்கள் பார்க்கப் பிறந்தவன் இராஜபூஜிதன் சனிக்குஒன்றுஏ ழாமிடத்தில் செவ்வாய் நிற்கவும், சுக்கிரன் சந்திரன் புதன் இவர்கள் பன்னிரண்டாமிடத்தில் நிற்கவும் பிறந்தவன் தன் தகப்பனுடைய தேசத்தில் வாழ்ந்திருப்பானென்று அறியவும்.

இலக்கினத்தைச் சந்திரன்பாராதிருக்க, சந்திரனிருந்த ராசி சரராசி யாக விருந்து அங்கிசமும் சராங்கிசமாகவிருக்க பிறந்த பா லன் தகப்பனைதேசாந்திரம் திரியவைப்பானென்று அறியவும்.

சூரியனுக்கு இரண்டாமிடத்தில் பாவக்கிரகங்கள் நின்று அதுவும் பா வர் வீடாகில் தந்தை தேசாந்திரியாவான். பாவக்கிரகங்கள் பாவராசியில் நின்று சூரியனுக்கு ஐந்தாம் ஏழாம் ஒன்பதாமி டத்தில் பாவக்கிரகம் நின்றால் தந்தைபரதேசத்திற்சிறைப்படு வானென்று அறியவும்.

அங்காரகனுக்கு பதினோராமிடத்தில் சந்திரனிற்க, பிறந்தகுழந்தைக்கு தோஷமுண்டு சுபக்கிரகங்கள் அதைப்பார்கில் அந்தக் குழந்தையை இன்னொருவர் வளர்ப்பார், பாபக்கிரகங்கள் சந்திரனைப்பார்க்கில், குழவி சேதமாகும். பாக்கியாதிபதி சந்திரனைப்பார்க்கில் தகப்பன் வாழும் மனையில் ஜனனமாகுமென்று அறியவும்.

நீசஸ்தானத்தில் சுபக்கிரகங்கள்நின்று சந்திரனைப்பார்க்கில், மரத்தின் கீழ் ஜனித்த பிள்ளையென்று அறியவும். பாபக்கிரகங்கள் நீச்சம்பெற்று சந்திரனைப் பார்த்தால், நீசர் வீட்டில் ஜனித்தப் பிள்ளையென்று அறியவும்.

சந்திரனும், சுபக்கிரகங்களும், ஒருஇராசியிலிருக்க அல்லது ஒன்றை ஒன்று பார்க்கப் பிறந்தசேய் மனிதரில்லாத வீட்டில் ஜனித்ததென்றறியவும். சந்திரனுக்கு ஏழாமிடத்தில் சனிநிற்க, சனிக்கு ஏழாமிடத்தில் செவ்வாய் நிற்கப் பிறந்த குழந்தையின் பெற்றோருக்கு அரிட்டமென்று சொல்லப்படும்.

சனிக்கு ஏழாமிடத்தில் செவ்வாய் நிற்கப் பிறந்தகுழவி ஈனமாம், இலக்கினாதிபதி பாவர்களோடுங்கூடி ஆறும் எட்டாம் பன்னிரண்டாம் இடங்களில் நிற்கப் பிறந்தவன் ரோகவானாயிருப்பானென்றறியவும். ஜன்மலக்கினாதிபதி பலமில்லாதவனாயிருந்தால் நோயுடையவனென் றறியவும்.

இலக்கினத்திலானாலும் கூ-மிடத்திலானாலும் சு-க்குடையவனும், உ-மிடத்துக் குடையவனும், செவ்வாயும் கூடியிருந்தால், காது அறுந்து போகும். அல்லது செவியில் ரோகமுண்டாகும். புதன்வீட்டில் சனி நிற்கில் நபுஞ்சகனாகப் பிறப்பானென்று அறிந்து சொல்லவும்.

இலக்கினம் புதன்வீடாக புதன் ஆறாமிடத்தில் நிற்க ஆறாமிடத்ததிபன் இலக்கினத்தில் நிற்க அலியாவன். சந்திரன் ஜன்மாதியோடும் புதன் சனியுடன் கூடினால் ரூபத்தில் குள்ளனாகவும் இருப்பான்.

மேஷ விருச்சிகத்தில், செவ்வாயிருக்க, சனி இலக்கினத்தில் நிற்க, கூ-ம் இடத்தில் சுக்கிரன் நிற்கில், உடல் சிறுத்துக் குள்ளனாக

இருப்பான். அங்காரகன் இலக்கினத்திலும், சனி திரேகாண இலக்கினத்திலும், இருக்கில் சிறைப்படுவான்.

இலக்கினம் ஏழு எட்டு வியதில் சந்திரன் பாவருடனே கூடிசுபக் கிரகங்கள் பார்வையில்லாமல் நிற்க கேந்திரத்தில் சுபர்களில் லாதிருக்க பிறந்தசேய் குருடாகும். வியம் ஆறு எட்டுக்குடை யவர்கள் பாவர்களாகி எங்கிருந்தபோதிலும் பிறந்தசேய் துர்ப் பலனுடையவனும். ஜென்மாதிபதிபாவியாகி ஆறு எட்டு பன் னிரண்டில் நிற்கில் நன்மையுண்டாமெனச் சொல்லுவர்.

இலக்கினத்தில் பாவக்கிரகங்களும், ஜன்மாதி பலமின்றிப்போக கேந் திரகோணத்தில் பாவர்கள் வந்துற்றால் கோபியாவன். ஜன்மத் தான்நின்ற வீட்டோன் ஆறு எட்டு பன்னிரண்டில் இருந்தி டில் துர்ப்பலன். ஜன்மாதிபதி கன்மாதிபதி, எட்டாமிடத் தோன். சனி, இந்நால்வர் திசை நடக்கும்போது துர்ப்பலன் நடக்கும். சனி சஞ்சாரகாலத்தில் அரிட்டம் வருமென்றும் சொல்லுவர்.

இலக்கினத்தில் சனி பாம்புகளும், அங்காரகன் நான்கிலும், சூரியன் ஏழிலும், வருங்காலத்தில் குழவிக்கு அரிட்டம். சந்திரனுக்கு இரண்டுபக்கத்திலும் பாவக்கிரகங்கள் நிற்க, குழந்தையுடன் தாயாருக்கும் அரிட்டம்வரும். சுபராசி இலக்கினமாகி மூன் றாமிடத்தில் தீயோர்களும், பன்னிரண்டாமிடத்தில் சுபக்கி ரகங்களும் நிற்கில் தீதுண்டாகுமென்றும், ஆறாமிடத்தில் சூரியன் நிற்க, அதற்கேழாமிடத்தில் சனி செவ்வாய் நிற்க, அரிட்டமாகும்.

இலக்கினதிபதி பாவனாகி ஆறு எட்டு பன்னிரண்டில்நிற்க, நன்மை யும் சவுக்கியமுமுண்டாம். இலக்கினதிபதி சுபக்கிரகமாகி ஐந்து ஒன்றில் நிற்க நன்மையுண்டாம்

சரீரகாரகனாகிய சூரியன் ஆறு எட்டு பன்னிரண்டில் சனிவீட்டில் நிற் க, உருவு குறைந்து சரீரத்தை ஊனப்படுத்துவான், ஒன்பது பதினொன்று இரண்டில் நின்றாலும் அல்லது சிங்கத்திலானா லும் மேஷத்திலானாலும் நிற்க திரேக சவுந்தரியனாவன்.

ரிஷபம், மேஷம், கடகம், இம்மூன்று ராசியும், இலக்கினமாக அதில் இராகுவிருந்தால் உத்தமமென்று அறியவும்.

இலக்கினாதிபதி இரண்டாமிடம் பத்தாமிடத்திலாவது நிற்க, அல்லது இலாபாதிபதி பத்தாமிடம் இரண்டாமிடம் நிற்க, இருபதுக்குமேல் சுகமுண்டாகுமென்று அறியவும்.

ஜன்மலக்கினம் சரராசியாகத்தோன்றினால் லாபாதிபதியும் திரராசியானால் பாக்கியாதிபதியும் உபயராசியானால் சப்தமாதிபதியும் இவர்கள் திசை நடக்கும்போது திரேகத்துக்கு வாதை செய்விக்கும். இந்த மூவர்கள் போய் நிற்கிற இராசியாதிபத்தியமும் தீதாகும்.

ஜனனகாலத்தில் சூரியன் இலக்கினத்திற்கு எட்டாமிடம் நிற்கில் சுரங் காணும், சந்திரன் நிற்கில் ஜலகண்டம்வரும், அங்காரகன்நிற்கில் ஆயுதத்தால் பீடையுண்டாம், புதன்நிற்கில்வியாதி, வியாழன் நிற்கில் மிருத்யு, சுக்கிரன் நிற்கில் தரித்திரமாம், சனி நிற்கில் தாயாருக்கு தோஷமுண்டாகும், ஒருவரும்நிற்கலாகாது என்று கூறவும்.

இலக்கினாதிபதி உச்சமாகி கேந்திரமேறி சுபக்கிரகங்களுடன் கூடி சுபர்மனேயி விருந்தால் நிறைந்த ஆயுளுண்டென்பது நிச்சயம்,

ஜன்மாதிபதி ஸ்திரலக்கினத்தும் ஸ்திர அங்கிசமும் பெற்று அவையே கேந்திரமாகவுமிருந்தால் அவனிருக்கும் சொந்த ஊரில்தானே வெகுபலன்களை யடைவன், அந்த இராசிகளே சுபாங்கிசமாயிருந்தால் அவன் சிவபரியந்தம் ஆபரணங்களோடு வாழ்வன் ஜன்மாதிபதி பலமற்று கேந்திரத்தில் நிற்க, அதிக கோபமுடையவனாகி வியாதிப்படுவனென்றறியவும்.

ஜன்மாதிபதி பத்தாமிடத்திலிருக்க, பத்தாமிடத்ததிபன் பலவீனனாக ஆறு-எட்டு-பன்னிரண்டில் சுபர் நோக்கம் பெற்று நின்றால் தத்துபுத்திரனாவான், வயதுபூரணமுடையவன், இலக்கினத்தில் பாவர்கள் நிற்க, ஜென்மாதிபதி பலவானாகயிருந்தால் திரேகத்தில் வியாதியுள்ளவனாவன், ஜன்மத்தைசுபக்கிரகம் பார்க்கில் சவுக்கியமாம் அந்தப்பிணி கொடுமை செய்யாதென்றறியவும்.

புதன் பாவாங்கிசத்திலாவது உபயவங்கிசத்திலாவதுநின்றால் குழந்தை இரட்டைப்பிள்ளையாவார்கள். தனுர்லக்கின்மாகிபிறபாதி

யாகில், அதில் நின்றவர் சிங்காங்கிசம்பெற புதன் சனி வீட்டைப்பார்க்கவும் இரட்டைப்பிள்ளையாகும்.

ஜன்மலக்கினத்தில் சூரியன்-புதன்-சுக்கிரன்-குரு இவர்கள் நின்றால் வலதுபக்கத்தில் மச்சமுண்டாம், அங்காரகன் சநிசந்திரனிவர்கள் இலக்கினத்தில் நின்றால் இடதுபக்கத்தில் மருவுண்டென்றறியவும், அதன்விவரமாவது சூரியனுக்கு வயற்றிலும் சந்திரனுக்கு சிரசிலும், செவ்வாய்க்கு இருப்பிடத்திலும், புதனுக்கு விலாப்பக்கத்திலும், வியாழனுக்கு முகத்திலும், சுக்கிரனுக்கு தொடையிலும்,சனிக்குக் காலிலும்,இவ்விதமாகக்கோள் நிலையைக்கண்டு மருவின் இருப்பிடங் கண்டுசொல்லவும்.

சூரியன் தனுசில்நிற்கப்பிறந்தவன் வார்த்தைப்பிரசண்டனும் சூரனும், கலையீனனுமாகி தனமில்லாதவனு யிருப்பன்,சிங்கத்தில் நிற்க, இராக்ஷசசமானன், மேடத்தில நிற்கப் பிறந்தவன் கண்டமழகன் தனமதிகமாய் சம்பாதிப்பன், கடகராசியே இலக்கினமாய் அதில் சூரியன்நிற்கப்பிறந்தவன் விழியுன்னதமாகயிருக்கும் திரவியவான், துலாம் இலக்கினமாக சூரியன் நிற்கப்பிறந்தவன் தனசம்பாத்தியமில்லாதவனுயிருப்பான்.

மேஷம்-ரிஷபம்-சிம்மம்-இவை ஜன்ம இலக்கினமாகி, சனியும் செவ்வாயும்கூடி அதைப்பார்த்தால், இரண்டு கொடிசுற்றி குழந்தை பிறந்திருக்கும், செவ்வாய் ஒருவன்பார்க்கில் ஒரு செங்கொடிசுற்றிப்பிறக்கும், சனி பார்க்கில் ஒரு கறுப்புக்கொடி சுற்றிப் பிறக்குமென்றறியவும்.

பாம்பினேடு ரவி கூடிநிற்கில் கொடி தலையில் சுற்றிப்பிறக்கும், ஜென்மாதிபதியும் அட்டமாதிபதியும் அவர்களோடு சேர்ந்தால் ரோகவானும், செவ்வாயும் சனியும் ஜென்மத்தைப்பற்றி நிற்கில் கலவடிப்படுவன் நித்திரைப்பிரியனுமாயிருப்பன்.

ஜன்மம் திரராசியாகி அதில் ஜன்மாதிபதி நிற்கப்பிறந்தவன் அந்த ஊருக்குக் கிராமாதிபதியாவான், அட்டமம் திரராசியாகில் பிறந்தவிடத்திலேயே மரணம்வரும், ஜன்மம் சரமாகில் தேசசஞ்சாரந் திரிகுவனென்றறியவும்.

ஜன்மம் உபயராசியாகில் சிலநாள் தேசந்திரிகுவன், சூரியன் ஜன்மாதிபதியாகில் மலையிடத்து சஞ்சாரஞ்செய்குவன், சிரசு நோய் கொஞ்சமுள்ளவன், செவ்வாய் இலக்கினதிபதியாகில் ஆயுதத்தாலும் அக்கினியாலும் நோய்களாலும் வாதனையடைவன்

புதன் ஜன்மாதிபதியாகப் பிறந்தவன், வித்தையும் கணிதமும் வியாபாரமும் பலிதமுடையவனுவான், வியாழம் வெள்ளி வீடாகில் சாஸ்திரமறியக் கூடியவனுயும் தனவானுகவும்தான் பிறந்தவிடம்விட்டு நீங்கான் சுபகாரியங்களுக்குத் தலைவனுகயிருப்பானென்று அறியவும்.

சந்திரன் ஜன்மாதிபதியாகப் பிறந்தவன், சரீரக்காந்தி யுள்ளவன், சுகவான், நல் வியாபாரங்களைச்செய்வன், சந்திரன் இலக்கினத்தைப்பார்க்கில் தகப்பன் அருகிலிருக்க ஜனித்தவனென்று அறியவும், சரத்தில் சந்திரன் நிற்கப் பிறந்தவனுக்கு தந்தையருகில்வர வழிநடையிலிருந்தவனென்றும் சொல்லப்படும்.

சுக்கிரனுக்கும் புதனுக்கும் நடுவில் சந்திரன் நிற்க, பிறந்தவனுக்கு தந்தை அருகே யிருந்திடுவன், சூரியன் சரத்திலும், சந்திரன் பத்திலு மிருக்கப் பிறந்தவனுக்கு பிதாவுடைய தலத்திற் பிறந்தவனென்று அறியவும், சனியாகிலும் செவ்வாயாகிலும் ஜென்மத்திலாவது ஏழிலாவது நின்ருல் பிதாவின் தேசத்தில் பிறந்தவனென் றறியவும்.

மிதுனம்-கன்னி-துலாம்-கும்பம் இவை இலக்கினமாகி, அங்காரகன் பார்க்க ஜனித்தவன் ஆசாரகிருத்தியங்கள் செய்யக்கூடியவனுவன். சனி-செவ்வாய் இவர்களுக்கு திரிகோணத்தில் சந்திரன் நிற்க, பிறந்தசேயை தாயார் எறிந்துவிடக் கூசமாட்டாள். சந்திரனை குருபார்க்கில் குழந்தையைக் கைக்கொள்வாளென் றறியவும்.

சந்திரன் பாவராகி ஜன்மத்திலிருக்க, சனி செவ்வாய் ஏழில் நிற்க, இவர்களை வியாழன் பார்த்தால் ஒருவரெடுத்து வளர்க்கப்பட்டவனுவன், பாம்பு-புதன்-குரு-சந்திரன் இவர்கள் சேர்ந்து ஜன்மத்திலிருக்க, பிறந்தபிள்ளை வம்மிசத்தைக் கெடுப்பானென்று அறியவும்.

ஜன்ம இலக்கினத்திலும் சந்திரலக்கினத்திலும் தூமன் இருந்திட வாழ்நாள் குறைந்திடும். விதிபாதனிருக்கில் புகழ்நாசமாகும். பரிவேடனின்ருல் புத்தி குறைந்துபோம், சுக்கிரபானு நின்ருல் குலங்கள் நசியும், துஜனிருந்தால் தனம்போமென் றறியவும்.

கடகம் மீனம் இதில் பிறந்தவர்கள் இராகுதிசை வரும்போது பாக்கியமோடு சோபனுதி யாடையாபரணங்களை யடைவார்களென் றறியவும்.

மகரம் கன்னி இதில் பிறந்தவர்களுக்கெல்லாம் கேது திசை வரும்போது இராஜசமானமான யோகத்தை அனுபவிப்பார்களென்று அறியவும்.

ஜன்மம் சரராசியாகி சராதிபனும் சரராசியேறி நிற்க அல்லது பார்க்க தூலசரீர முடையவனவன், இலக்கினம் சரமாக அவ்வீட்டோன் சரத்தில் நிற்க தன் தேசத்தைவிட்டு அயல்தேசந் திரிகுவானென்றும் அறியவேண்டியது.

முதலாவது இலக்கினபாவகபலன்

முற்றிற்று.

இரண்டாம்பாவகம்.

இரண்டாமிடத்தில் சூரியனிருந்தால் முகரோகம்-பெரிய மூஞ்சி-ராஜதண்டம்-சம்பாராதனை-திரவியசேதம் -நேத்திர ரோகம்-வித்தை மந்தம்-ராஜப்பிரியன் பரமாயிசுண்டு.

சந்திரனிருந்தால் நல்ல சுபசோபனமுண்டு, பாலியத்தில் விவாகமுண்டு-தனவான்-புத்திவான்-ராஜாவிடத்தில் கீர்த்தி யுண்டு வித்தையுண்டு-நல்ல ஸ்திரீயும் என்னேரமும் போகஸ்திரீகளுடன் கேளிவிலாசத்துட னிருப்பான் - மிருது வசனமும் வாக்கு உதாரணமும் நேத்திரம்பெரிதாயுமிருக்கும்விகடமுள்ளவன்-பிரதாபசாலி-அற்ப ஆயுள்.

செவ்வாயிருந்தால் அதிக கோபி-துஷ்டன்-வாக்குவாதி-ஆகாத செலவு பண்ணுவான்-பிதுர் திரவியம் வைத்திருப்பான்- பூமி லாபமுண்டு-கண்ணேய் உண்டு-அல்பவித்தை-பாலியத்தில் விவாகம்-தனலாபமுண்டு-துற்போதனை யுடையவன்-மித்திரபேதம் பண்ணுவான்-கோட்சொல்லுவான்-சுபகாரியப்பிரியன்.

புதனிருந்தால் வேதசாஸ்திரம்படிப்பான்-மிருது வசனி-புத்திரருண்டு இராஜகாரியத்தில் வித்வானுயிருந்துகொண்டு தொடுத்த காரி

யம் ஜெயம் பண்ணிக்கொண்டு இருப்பான். தனத்திற்குக் கர்த்தனயிருப்பான்-திரவியம் புதைத்து வைத்திருப்பான்-தானிய சம்பாதனே யுண்டு-பந்துவாகன முடையவன், தனம் சம்பாதிப்பன் ஆண்பெண் சகோதரமுள்ளவன்.

வியாழனிருந்தால் தனம் வந்துகொண்டே யிருக்கும் - தர்ம்முடையவன் சுபசோபனவான்-புத்திமான்-நல்லவிஷய முடையவன்-நல்ல புத்திரருண்டு - மிருதுவசனமாய் பேசுவான்-நீதிமான்-வெகுதனத்திற் கதிகாரி திரவியம் புதைத்துவைத்திருப்பான்-இராசவசீகரமுள்ளவன்-பாலியத்தில்விவாகமுண்டு-நேத்திரம் அழகுண்டு-ஸ்திரீவசீகரன்-இப்பலன்கள் ஆட்சியுச்சம் நட்பில் பாவர் கூடாதிருந்தால் இவை நடக்கும்.

சுக்கிரனிருந்தால் சோபனவான்-வெகு குடும்பாதிபதி-போசன சவுக்கியன் உத்தமபெண்சாதியுண்டு-பெரிய நேத்திரமுண்டு முக சவுந்தரமுள்ளவன் சுகசரீரன் ஸ்திரீபிரியன்-வித்தை விரையன்-திரவியமுண்டு-கபடன் வித்தையுண்டு-ஸ்திரீ வசப்படுவோன் காமி ஸ்திரீகள்ளன்.

சனியிருந்தால் விவாகம் இரண்டு-திரவியம் உண்டு-அற்ப நேத்திரம் முகரோகம்-வித்தையினலே விசனம் - நீசபயம் - அற்பாயுள் பிதுர் சம்பாதனே சேதம்பண்ணுவான் ஸ்திரீகளாலே விரோதம்-மாதா பிதாவுக்கு விஷமானவன்-பிரட்டு வசனமுள்ளவன்-கோரம் பண்ணுவான் சத்தியம் சர்ச்சனையில்லை.

இராகு கேது விருந்தால் சரீரவிருத்தி உண்டு தயவில்லாதவன் புத்திரன் அற்பன்-சோம்பல் சாம்பல்நிறமான நேத்திரம்-கொஞ்சம் முகரோகமுண்டு விவாகமிரண்டு மனக்கிலேசம் ரோகம், வித்தை அற்பம்-நடுவயதில் திரவியம் பாக்கியமுண்டு, கொஞ்சம் புத்தி உண்டு-சிறுவயதில் கஷ்டம்-அமர வயதில சவுக்கியம். விஷவாக்குள்ளவன்.

இரண்டாமிடத்தில் சுபக்கிரகம் நிற்கில் வெகுதிரவியம் வித்தையும் உண்டு. சுபக்கிரகங்களுடனே சூரியன் கூடி இரண்டில் இருந்தால் திரவியநாசம்-செவ்வாய்கூடினல் ஞானமும் செல்வமும் உண்டு. சூரியன் சனிகூடினல் அற்பதிரவியமுண்டு. சுக்கிரன் வியாழன் கூடினல் குலத்திற்கும் திரவியத்திற்கும் அதிபதியாவான்.

இரண்டாமிடத்து வியாழத்தை புதன்பார்க்கில் குடும்பதிரவியநாசம் அமரபட்சத்து சந்திரன் இரண்டில் நிற்க திரவிய வாதனை யுண்டு. வாக்கில் சந்திரனுடனே பாபர் கூடிநிற்கில் தரித்திரவான் சுக்கிரன்நிற்க அவனை சந்திரன் பார்க்கில் அந்தகனுவான் இரண்டுக்கதிபன் எந்தராசியிலிருந்தானோ எந்த அம்சம் ஏறியிருந்தானோ அந்த திக்கிலே திரவியமும் ஸ்திரீயும் வரும்.

இரண்டுக் கதிபனோடு இராகு கேது கூடி இரண்டிலிருந்தால் அவன் கொஞ்சவயதில் பலாஈனமாவான்.

இரண்டுக்கதிபதி ஆறிலிருக்கில் அவன் திரவியம், சத்துரு கொள்ளுவான்

ஆறுக்கதிபன் இரண்டிலிருந்தால் சத்துருதேடின திரவியம் இவனுக்கு வரும்.

ஒன்பதுக்கதிபன் பன்னிரண்டுக்கதிபனோடு இரண்டில்நிற்க, மூன்றில் பாபிசேர அவன் பாபியாம் பரதாரகமன முடையவனாய் ஈனத்தொழில் செய்துக்கொண்டு கஷ்டப்படுகிறவனுமாய் ஒருவனிடத்தில் யாசகம் பண்ணி சோம்பலாய்த் திரிவன்.

இரண்டில் செவ்வாய் சனி இருந்து இரண்டுக்கதிபனும் கூடியிருந்தால் தெலுங்கு கன்னடயநீசபாஷை முதலானவையும்வரும்.

இலக்கினத்திற்கு -2 4-7-ல் சூரியன் புதன் சுக்கிரன் இவர்கள் இருந்தால் எததனை மந்திரிக ளிருந்தாலும் அவாளுக்கெல்லாம் மேலாய் கீர்த்திமானாய் யோகவானாயிருப்பான்.

2-7-9-க் கதிபன் இவர்கள் ஆறுக்குமேல் மூன்றுராசிக்குள்ளே யிருந்தால் ஆறுக்கதிபன் ஈனமாயிருந்தால் அவன் ஊமையாவான்

ஆறு ஒன்பதுக்கதிபனும் மூன்றுக்கதிபனும் கூடி ஆறு எட்டிலிருந்தால் இலக்கினாதிபன் இவர்களை சனி பார்த்தாலும் கூடியிருந்தாலும் ஊமையாவான்.

இரண்டுக்கதிபனும் இலக்கினாதிபனும் கூடி ஆறு எட்டு பன்னிரண்டிலிருந்து சுபர் பார்க்காமல் இருக்கில் அவன் மரணகாலத்தில் தனம் பொருள் இருந்தும் உதவாமல் அன்னியர் பொருளால் அவன் பிரேதம் எடுபடும்.

இரண்டேக்கதிபனும் இராசிக்கதிபனும்-ஏழுக்கதிபனும்- ஏழிலிருந்தால் அவன் பலவித வேஷம்போட வல்லவனுவான். இவர்களோடு இராகு-கேது-குளிகன் கூடினுல் விகடகவிப் பிரசங்கம் செய்வான்.

நேத்திரஸ்தானுதிபதி பாவியாகி எட்டாமிடத்தில் சனியும்-சந்திரனும் கூடி நிற்க, ஆருமிடத்தில், சூரியனும் நிற்க, பிறந்தபிள்ளைக்குப் பூனைக்கண்ணும் நேத்திரஸ்தானுதிபதி பாவனுகிஇலக்கினுதிபதியைமேவி-ஆறு-எட்டு-பன்னிரண்டில் நிற்கப் பிறந்த குழந்தை பிறக்கும்போதே குருடாகப் பிறக்குமென் றறியவேண்டியது.

சுக்கிரன் நேத்திராதிபதியாகத் தோன்றி எட்டாமிடத்தில் நிற்க, சூரியன் ஆருமிடத்தில்நிற்கப், பிறந்தவர்களுக்கு பிற்காலத்தில் கண்ணுக்கு நோய் உண்டாகும். மேஷத்திலாவது-சிம்மத்திலாவது சனியும் செவ்வாயும் நிற்க, பிறந்த குழந்தை ஊனமாகக் கொடிசுத்திப் பிறக்குமென்று அறியவும்.

இலக்கினுதிபதியோடு இரண்டாமிடத்ததிபனும் சுக்கிரனுங்கூட,மூன்ருமிடத்தில் சூரியன்நிற்க, பிறந்த சேய்க்கு கண்ணிராது, சூரினில்லாமல் சந்திரன் நிற்கில், மாலைக்கண்ணுகுமென்று அறியவும்.

நேத்திராதிபதியும்,சுக்கிரனும். இலக்கினுதிபதியுங்கூடி, மூன்ருமிடத்திலநிற்க, நேத்திரநோயுண்டாம், இலக்கினுதிபதியும் இரண்டாமிடத்ததிபனும்-சுக்கிரனும், ஒரிடத்தில் நிற்கில் அந்தகனுவானென்றும் அறியவேண்டியது,

நேத்திரஸ்தானுதிபதி சுக்கிரனுகி ஜன்மாதிபதியைக்கூடி மூன்றில்நிற்க நேத்திரரோகம் வரும். நேத்திராதிபதி-சந்திரனுகி,சுக்கிரனுடனே இரண்டில்நின்ருல் நேத்திரம் இரவில் தெரியமாட்டாது. கடகம் இலக்கினமாகி நேத்திராதிபதியும்-சந்திரன், சுக்கிரன் இவர்கள் கூடிநின்ருல், பிறவிக்குருடனுவானென்றும் அறியவேண்டியது.

சிங்கம் நேத்திரஸ்தானமாக சூரியனும், சுக்கிரனுங்கூடி சிங்கத்தில் நிற்க, அவரோடு எந்த ஸ்தானுதிபதியேனும், எந்தக்காரகனுகினும் கூடில், அந்தந்த காரகர்களுக்கு நேத்திரநோயுண்டாம்.

தனது வீடாயிருந்து உச்சமானாலும், நன்மை. சந்திரன்-விய ஸ்தானத்தில் நிற்க, ஒருகண் ஊனம். அவனோடு சூரியனும் கூடில், இரண்டுகண்ணும் ஊனமாகுமென் றறியவும்.

இலக்கினத்தில் செவ்வாய் நிற்க, அஷ்டமாதிபதி கேந்திரத்திலிருக்க அஷ்டமத்தில் பாவர்கள்நிற்க, நேத்திரரோ யுண்டாகுமென்று முன்னோர் கூறுகின்றனர்.

சுக்கிரன்-சன்மாதிபதி-சந்திரன் இவர்கள்கூடிஆறு-எட்டு-பன்னிரண் டில் பலமற்று நிற்கில், மாலைக்கண்ணாகும். சூரியனும்; ஜன்மா திபதியும், இரண்டாமிடத்தோனும்; சுக்கிரனும்,ஒன்றாய்க்கூடி ஆறு-எட்டு-பன்னிரண்டில் நிற்க, பிறவிக் குருடனாமென்றும் சொல்லுவாயாக.

நேத்திரபலன்-சொல்லவேண்டுமானால், நேத்திராதிபனையும்-அதிலிரு ப்பவரையுங்கொண்டு சொல்லவேண்டும். அதில்சூரியனுக்கும்-செவ்வாய்க்கும் - மேற்பார்வையாம். சந்திரனுங்-குருவுமாகில்-சமபார்வையாம். சுக்கிரன்-புதனாகில்-பக்கப்பார்வையாம்,சனி இராகுவாகில்-கீழ்ப்பார்வையென்று சொல்லப்படுகிறது.

ஜன்மாதிபதியை சனிபார்க்க, கண்ணுக்கு நோய் உண்டாகும். இரண் டாமிடத்தோனுடன் சூரியன் கூடிநிற்க குளிகனோடு-சனியும், நின்றுபார்க்க கண்ணுக்குநோய் உண்டாகும். அந்த வீடுகள் சலராசியாகில் அவன் நேத்திரத்தில் நீர்பாவி துளிக்குமென் றறியவேண்டும்.

சூரியன்-பாவருடன்கூடி பலமற்று வியஸ்தானத்திலிருக்க, வலதுகண் போகும். செவ்வாய் பலமற்று வியஸ்தானத்திலிருக்க, இடது கண்போகும். மேற்கண்ட இருவர்களுங்கூடி வியஸ்தானத் தில் நிற்க, இரண்டுகண்களுந் தெரியாதென்று கூறவேண் டியது.

சனியுஞ் செவ்வாயுங்கூடி இரண்டு பன்னிரண்டில் நிற்கில், விழிக்கூ னமாம். சூரியனும்-சந்திரனும் வியத்தில் நிற்க, விழி நோயுண் டாம். சூரியன்-சந்திரன்-செவ்வாய்-குரு-சுக்கிரன்-இவர்களைக் கொண்டு முழுக்குருடனாகும் வகையை சொல்ல வேண்டு மென்பதாம்.

சூரியன்-சுக்கிரன், பலமில்லாதிருக்க அவருடனே ஜன்மாதிபன்கூடி ல் பிறவிஅந்தகனும்.ஐந்தாமிடத்தோனும்;ஆறாமிடத்தோனும்

ஜன்மத்திலிருக்க சுக்கிரன் இரண்டாமிடத்தோனைக்கூடிநிற்க, இரண்டுகண்ணும் பிடுங்கப்படுமென்று சொல்லப்படுகின்றது.

சூரியன்-செவ்வாய்-சந்திரன்-சனி-இவர்கள் இரண்டு-ஆறு-எட்டு-பன்னிரண்டில் நிற்க, கண் ரோகமுண்டாம். இரண்டு-பன்னிரண்டில் சந்திரனும்-சூரியனுங்கூடி நிற்க, இரண்டு எட்டில்பாவக்கிரகங்கள் நிற்க,கண்ணேயுண்டாமென்று சொல்லவேண்டும்.

வாக்குஸ்தானபலன்.

குடும்பஸ்தானாதிபதியோடு புதன்கூடி ஆறாமிடத்தில் நிற்கப் பிறந்தசேய் ஊமையாகும். மூன்றாமிடத்தோனும், இலக்கினாதிபதியுங் கூடினாலும் ஊமையாகுமென்று அறியவேண்டும்.

வாக்குஸ்தானாதிபதியோடு புதன்கூடி இலக்கினம் மூன்று-ஆறு இவ்விடங்களில் நிற்க, ஊமையாம். இவருடன் எந்தத் தானாதிபதியானாலும், காரகரானாலும், வக்தூற்றால் அந்தந்தகாரகர்கள் ஊமையாவார். அப்படிவந்த கிரகங்களுக்கு அவ்வீடு ஆட்சி அல்லது உச்சமாகில் அப்போது அத்தோஷம் நீங்கி வாக்கு ஊனம் மாறிப்போகுமென் றறியவேண்டும்.

புதனோடு வாக்குஸ்தானாதிபதிகூடி ஆறு -எட்டு-பன்னிரண்டில்-நின்றால் ஊமையாம். தந்தை-தாயார்-ஸ்தானத்திலும் இவ்வாறிருக்க ஊமையாகுமென்று நிச்சயமாய் அறியவேண்டியது.

இலக்கினாதிபதியும்-சுக்கிரனும்கூடி ஆறு-எட்டு-பன்னிரண்டில் நிற்க, ஊமையாம். இரண்டாமிடத்தோன் அவருடன்கூடினால் ஊமையாம். மற்றக்கிரகங்கள் கூடினும் ஊமையாகத்திரிவானென்றும் சொல்லவேண்டியது.

வித்தியா பலன்

குருவும்-சுக்கிரனும்-இரண்டாமிடத்தில் நின்று, புதன் கேந்திரமூலத்திரிகோணத்தில் நின்றால் வித்தை அதிகமுண்டாம். இவர்கள் ஆறு - எட்டாமிடத்தில் நிற்க, வித்தை லாபமில்லை. புதன் உச்சம் பெற்றிருந்தால் வித்தை பலிதமுண்டாம்.

புதனும்-ஏழாமிடத்ததிபனும், குருவுங்கூடி கேந்திர திரிகோணம் பெற்றாலும் அல்லது-தனது வீடாயினும்-இரண்டாம் வீடாயினும்-பகையில்லாதிருக்கில், தீர்க்கமுள்ள வித்துவானாவான்.

புதன் ஒன்று-நான்கு-ஏழு-பத்திலிருக்க இரண்டாமிடத்தோனும் உச்சம்பெற-சுக்கிரன்-உபயராசியிலேற மூன்றுமிடத்தில் சுபக்கிரகங்கள் நிற்க. சுக்கிரன்-உச்சமாகில் இந்த ஜாதகன் சோதிட சாஸ்திரத்தில் வல்லவனுவான்.

இரண்டாமிடத்தோனும்-குரு-சுக்கிரனும் மூலத்திரிகோணம் அல்லது உச்சமாய் நிற்க, அவர்களை பாவர் பாராதிருந்தால் தர்க்கசாஸ்திரத்தில் வல்லவனுயிருப்பான்.

இலக்கினத்திற்கு திரிகோண கேந்திரத்தில் புதன் இருந்தால் தமிழ் வித்தைபெருகும் செவ்வாய் இருந்தால்-தெலுங்கு வித்துவானுவான். ஷ ஸ்தானத்தில் இராகு இருந்தால் துருக்கர் ஆரியர் நீச்சபாஷையில் நிபுணவித்துவானுக இருப்பான். சுக்கிரன் - வியாழன்-இவர்கள் இருந்தால் சாஸ்திரங்களையு மறியக்கூடியவித்துவானுக இருப்பான்.

இரண்டாமிடத்திற் குடையவனும் புதனும் உச்சமாகியும்-இலக்கினத்தில் குருவும், சனி ஒருவனுமாய் எட்டாமிடத்தில் நிற்கப் பிறந்த ஜாதகன் கணிதவித்துவானும். இவனுக்கு கோபுராங்கிசத்தில் சனிநிற்க, செவ்வாய் அங்கிசத்தில் குருநிற்க, சாஸ்திரங்களை ஓதுவான், இரண்டாமிடத்தோன்-சூரியனுக, அவரை புதன் பார்க்க, தர்க்க சாஸ்திரவல்லவனுக இருப்பான்.

ஜன்மலக்கினத்தில், சுக்கிரனுங்-குருவுங்கூடி நிற்க, அல்லது குருவும் சூரியனும் கலந்து சிங்காங்கிசத்தில் ஏறி நிற்க, சுக்கிரன் கடகவாங்கிசமேற, இப்படி நிற்கப் பிறந்தவன் சகல சாஸ்திரமுங் கற்று, கீர்த்தி யுடையவனுக இருப்பான்

ஜன்மலக்கினத்தில், புதன்-சூரியன்-குரு-இவர்கள்கூடி நிற்கில், தனமுடையவனுகவும், புலவனுகவு மிருப்பான். சூரியனும்-சுக்கிரன், -புதன்-சந்திரன்-சனி-வியாழன்-இவர்கள் ஜன்மத்தில் ஒரு வீட்டில்கூடி நிற்கில் பிறந்த ஜாதகன் பிரபல வித்துவானுகவும் தனவானுகவும் இருப்பான்.

தனபலன்.

இலக்கினுதிபதிக்கு இரண்டாமிடத்தில் சுபக்கிரகமும், மூன்றுமிடத்தில் பாபக்கிரகமும், நான்காமிடத்தில் சுபக்கிரகமும், நிற்கப் பிறந்தவன் தனவானுவன். இலக்கினுதிபதி உபயத்திலிருந்தாலும்தனவானும். இரண்டாமிடத்தில் பாக்கியாதிபதி;

இலாபாதிபதி, பார்க்கில் நிற்கில் பிறந்த ஜாதகன் குறைவில்லாத தனவானாக இருப்பான்.

இலக்கினமுதற்கொண்டு இலக்கினாதிபதியிருக்கும் வீடளவும் எண்ணிக்கண்ட தொகையை இலக்கினாதிபதியைத்தொட்டு எண்ணிவருகையில் அந்தவீடு பாவர்வீடாகில், தரித்திரயோகமென்றும் சுபர்கள் வீடாகில், தனவானாகவு மிருப்பன், ஜன்மலக்கினத்திற்கு, இரண்டு-ஐந்து பன்னிரண்டு இந்தவிடங்கள் சுபர்வீடாகில் தனவானுமாவான்.

ஜன்மத்தில்-சனியும், நாலாமிடத்தில் - சந்திரனும், ஏழாமிடத்தில் செவ்வாயும்-பத்தாமிடத்தில் சூரியனும், குருவும், புதனும், சுக்கிரனும் இவர்கள் கூடி ஒருவீட்டில் நிற்கப் பிறந்தஜாதகன் இராஜயோகத்தை அனுபவிப்பான்.

எட்டு - ஆறில் - பாவக்கிரகங்களிருந்து, இலக்கினத்தைப் பாராதிருக்கப் பிறந்தசேய்க்குச் செல்வமுண்டாம். அல்லது மேற்சொல்லிய நால்வரும் மேற்கண்ட இராசிகளில் நீசராகி அல்லது மேற்கண்ட ஸ்தானங்களில் நீச்சமானவர்களோடு சேர்ந்திருந்தாலும் தனவானவான்.

சந்திர இலக்கினத்திற் கதிபதி உச்சராசியிலாவது அல்லது நீச்சராசியிலாவது இருக்கில் தனவானும், சந்திரனோடு உச்சம் பெற்ற நற்கோள்கள் சேர்ந்திருக்க குடும்பஸ்தான முச்சமாகி, சுபக்கிரகங்கள் நிற்க, பிறந்தசேய்க்குச் செல்வ முண்டென்றறியவும்,

பத்தாமிடத்ததிபனும், இலக்கினாதிபனும், குடும்பஸ்தானாதிபதி யேறிய அங்கிசாதிபதியும ஒன்று-நாலு-ஏழு-பத்தில் சுபர்பார்க்க நின்றால் சிறுவயதுமுதல் தனபாக்கியனாவான்.

ஜன்மாதிபதியும், மூன்றாமிடத்தோனும் பலவானாகவிருக்க புருஷக்கோள் நோக்கவும், மூன்றாமிடத்தோன் ஏறிய இராசியாதிபதி அவரைப்பார்க்க அண்ணன்-தாய் தம்பி-மாமன்-இவர்கள்தனமும்வந்து சேரும்.

இலக்கினத்திற்கும்-சந்திரனிருக்கும் வீட்டிற்கும் இருபுறத்திலும் சுபர்கள நின்றால் தனவானவன். ஒருவீட்டிற்கு இருபுறத்தில் நின்றால் பாதிபலனும். ஒரு வீட்டில் ஒருபுறத்தில் சுபர் நின்றால் காற்பலனாகும்,

மூன்றாமிடத்தோன் ஒன்பதாமிடத்தோனோடு இருவரும் நட்பாயிருக்கில் பிறந்தசேய்க்கு தமயனுடைய பொருள் கிடைக்கும்.

இலக்கினத்திற்கும்-சந்திரனுக்கும் பத்தாமிடத்து கிரகங்களைக்கொண்டுப் பொருள்வரும்விபரம் அறியவேண்டியது. அது சூரியனாகில் தகப்பன்பொருளும் சந்திரனாகில் தாயார்சொத்தும், செவ்வாயாகில், தனதுபொருளும், புதனாகில் பகைவர் பொருளும் கிடைக்கும். குருவாகில்-நல்ல உறவோர் பொருள்கிடைக்கும் சுக்கிரனாகில்-மனைவியால் பொருள்கிடைக்கும். சனியாகில் தனது வேலைக்காரர்களால் பொருள்கிடைக்கும். இந்தப்பலன் கூறுவது எவ்விதமெனில், ஜன்மலக்கினமும் சந்திரலக்கினமும் பத்தாமிடங்கொண்டு ஸ்தானம்விட்டு ஸ்தானம் மாறும் கிரகங்களைக்கொண்டு சொல்லவேண்டும்.

பதினோராமிடத்திற் குடையவன் ஒன்பதாமிடத்தோனைக் கூடிநிற்க, மூதாக்கள் தேடியபொருள் கிடைக்கும். பத்தாமிடத்தோன் பாக்கியஸ்தானத்தில் நிற்கிலும், பத்துக்குடையவன் நற்கோளாகி சுபக்கிரகங்களின் மனையில் இருந்தாலும் தருமவானாயிருக்கினும், பிரயாசைப்படாமல் நிதிதேடுவான். பத்தாமிடத்தோன் மெலிவுற்றுஇருக்கில், ஒருவரைச்சேவித்து தேடிய பொருளும் அற்பமாகும்.

பத்தாமிடத்தோன் உத்தமனாகி பத்தில் இருக்க, யாகாதிகருமங்கள் செய்து அருளோடுபொருள்தேடி சுகத்திலிருப்பன். மூன்றாமிடத்தோன்பலவானாக ஜன்மாதிபதி துர்ப்பலவானாகலாபாதிபதி மூன்றாமிடம் மருவ, உடன்பிறந்தார் பொருள்வந்து சேரும். இலக்கினத்திலும், சந்திரலக்கினத்திலும், எந்தக்கிரகம்நிற்கின்றனவோ அந்தகாரகாதிபர்களால்தனங்கிடைக்கும்.

தனஞ்சேருவது, ஒன்பதாமிடத்தோன் திசையில், பத்தாமிடத்தோன் புசிப்பில், அப்போது நடக்கும் கோசாரத்தில், நாலாமிடத்தோன் பத்தாமிடத்திலிருக்க, பத்தாமிடத்தோனுக்கு நாலாமிடத்திலும், அல்லது அங்காரகனுடைய கேந்திரத்திலேனும் சேர்ந்துநிற்க, பிறந்தோனுக்கு புராதனமான பூமி மனைஇவைகளில் பத்தாமிடத்ததிபன் நிற்கும் திசையில் தனம் பொருள் புதையல் இவைகள் கிடைக்கும்.

ரிஷபத்தில்-சந்திரன், விருச்சிகத்தில்-குருநிற்க, தனவானாம். சுக்கிரன் வீட்டில்-வியாழன் நிற்க, மகரத்தில்-குஜன்நிற்க, குருவோடு-

பூர்வபட்சத்து சந்திரன்கூட, புதனும்-குருவுங்கூடி நிற்க,இல லக்கினந்தன்னில்-சுக்கிரனுமிருக்க,நிறைந்ததனவானாகவும்கல் விக்கரசனாகவு மிருப்பான். சுக்கிரன் உச்சம்பெற, வியாழன்-இலக்கினத்திலிருக்க, சந்திரனைப் பாவர்கள்பார்க்க, பிறபலமா யித் தனம்படைப்பான்.

ஒன்பதாமிடத்ததிபன் ஆறுமிடத்தில் நிற்க, மாமனுடைய பொருள் வந்துசேரும். ஒன்பதாமிடத்ததிபன்-குருவாகி-ஆறுமிடம் நிற்க, மாமியார்கையில் கிடைத்தப்பொருள்சேரும். ஐந்தாமிடத்ததிபன் சுபக்கிரகமாக பாக்கியஸ்தானத்தில் நிற்க, தன்புத திரிக்கு மணஞ்சூட்டி வைத்து அந்தமருமகனால் தேடியபொருள்களெல்லாம் தன்வசமாகி சுகமாகவாழ்ந்திருப்பன்.

வியாழனும், பத்தாமிடத்ததிபனும்,சுபக்கிரகமாய் இலக்கினத்ததிபனுக்கு நட்புக்கிரகமாய் இவருடன் கூடவிருக்க இந்த சாதகனுக்கு பிதாவினுடைய பொருள்கிடைக்கும். இவர்களுடன் சந்திரன் கூட தாயாருடைய பொருள்கிடைக்கும்: வியாழன் கூடில் மூதாக்கள் பொருள்கிடைக்கும், சுக்கிரன்கூடில் ஸ்திரீகளின் பொருள்கிடைக்கும், சனிகூடில் சேர்ந்தவர்கள் பொருள்கிடைக்கும். இராகு-கேதுகள்கூடில், ஈனத்தொழில்செய்கிறவர்கள் பொருள் வந்துசேரும்.

பத்தாமிடத்ததிபன்-சுபக்கோளாயிருக்க,சுபக்கிரகங்கள் வீட்டில் குருவும்-சந்திரனும் இல்லாமல், வியாழன் நீசமாகித் தீயோர் வீட்டிலிருக்கப் பிறந்தவன், திரவியமில்லாதவனாம். பத்தாமிடத்ததிபன், நாலாமிடமிருக்க புதையல் கண்டெடுப்பன் கல்வியினாலும் சுற்றத்தாராலும் தங்களாலும் பொருள்சேர்ப்பார்கள்.

இரண்டாமிடத்திற்கு ஒன்று-நாலு-எழு-பத்தில்-குருநிற்க, இரண்டாமிடத்தோன் ஆறு-எட்டு-வியத்தில்நிற்க, பிறந்தவனுக்கு தந்தையுடைய பொருள் யாதொன்று மில்லையாம்.

சந்திரனுக்கு இரண்டில் சனிநிற்கில், சந்திரனுக்கு நாலாமிடத்ததிபன் சுபக்கிரகங்களுடன் கூடி கேந்திரத்திலிருக்கப், பிறந்தவனுடைய தந்தையின் பொருளை அன்னியர் கைக்கொள்வர். தன்னுடைய அமிசையினால் பொருள்தேடி பாக்கியவானாகஅரசர்களின் உதவிப்பெற்று வாழ்வானென்று கூறவும்.

நாலாமிடத்ததிபதியின் கேந்திரத்தில் சூரியன்நிற்க, நாலாமிடத்தில்-சுபர்கள்நிற்க, பிறந்தவனுக்கு பிதாவின்சொத்தில் ஒருகாசும் கிடையாமல் பரதேசம் திரிவானென்று முன்னோர்கூறுகிறார்.

இரண்டாமிடத்ததிபன் வலிமையென்று கேந்திரமேறிநிற்க, தனஸ்தானத்தோனும் கூடி உச்சமாகி நட்பாயிருக்கத் தனபதியாய் விளங்கி அறிவுள்ளோனாய்ப் பொருள்தேடி வாழ்வானென்று கூறப்படும்.

இரண்டாமிடத்ததிபன் இலாபத்திலிருக்க லாபாதிபதியும் பாக்கியாதிபதியும் இரண்டாமிடத்தி லிருக்கப் பிறந்தவன் நல்ல தருமகுணமுடையவனாய் நான்கு லக்ஷம் பொன்தேடி அல்லலில்லாமல் வாழ்வானென்று கூறுகிறார்.

தனுசுலக்கினமாகி அதில் வியாழன் நிற்க, துலாத்தில் சனி யுச்சமாக, இலாபாதிபதி நாலாமிடத்தில் நிற்கப் பிறந்தவன் பொருள் தேடி நீதிவழுவாமல் பலரையும் இரக்ஷித்து கோடி பொன் தேடுவானென்று அறியவும்.

தனுசு-கும்பம்-மீனம்-கன்னி-ரிஷபம்-இவைகளில் ஒன்பது கோள்நிற்கப் பிறந்தவன் தேவலோகத்துக்குச் சமானமாய் நவகோடிச் செம்பொன்தேடி இராஜ்யம் ஆள்வன் இப்படியுமிருந்து இலக்கினம் தனுசாகப்பிறந்தவன் இதைவிட அதிகமேலாகவும் அனுபவிப்பானென்று அறியவும்.

திரேக்காணத்து இலக்கினாதிபதியும் சுக்கிரனும்கூட இலாபாதிபதி சுபவர்க்கமேறிடப் பிறந்தோன், உலகில் கோடிபொன் தேடி வாழ்வானென்றும் தெரிந்துகொள்வாயாக.

இரண்டாம்பாவகம்

முற்றிற்று.

மூன்றும்பாவகம்.

மூன்றுமிடத்தில் சூரியனிருந்தால், புத்திமான்-நல்லசாமார்த்தியன்-தனதானியவான்-மிகுந்த சிற்றுண்டி உண்போன்-விசனமில்லாதவன், கடினலோபி, தன்கோத்திரக் கீர்த்தியுள்ளவன், அதிகஞானவான், பராக்கிரமன், தியாகமுள்ளவன், களத்திரதோஷவான்,

பூமியில் விந்து கலிதன்-வீட்டில் நிட்டூரவசனன்-சபலபுத்தி-சகோதரமுள்ளவன்-தீர்க்கயோசனே.

சந்திரன் இருந்தால் தமக்கைக்கு ஆகாது-வாதசரீரமாயிருப்பான்-மூலரோகமுமுண்டு முலைப்பால் பூச்சியன் - சௌக்கியன்-கருமயிலை நிறம்-உடன்பிறந்தா ரதிகம்-வித்துவான்-சபையில் பேசமாட்டான் - பிரதாபசாலி - சிநேகிதமுள்ளவன் - சத்துருமார்க்கமுடையவன்-பெண்சகோதரன்.

செவ்வாய் இருந்தால், ஒருத்தருக்கும் தயாளமில்லாதவன்- விபசாரமுடையவன்-தோஷமுண்டு-திரவியமுண்டு - வேசிசம்போகன் சாமார்த்தியவான்-தமயன் அரிஷ்டன் - வெகுகனிஷ்டநுண்டு-திரவிய விர்த்தியுள்ளவன்-சகோதரபூச்சியன்-பந்துசிநேகிதன் விரதமுள்ளவன்-பின் புத்தி-யோசனே சொல்லுவான் - அற்பகோபி-அதில் முன்கோபி-நிஷ்டூரவசனமுள்ளவன்-கோபித்து பிறியப்படுவன்- மனவஞ்சகன்-துக்கமுடையவன்.

புதனிருந்தால் தமக்கைக்கு ஆகாது-வெகு சவுக்கியன்-பால்பழம் அறுசுவையுடன் சாப்பிடுவான்-கோத்திரமுண்டு-சம்பன்னன்-ஸ்திரீவாஞ்சையுள்ளவன்- சகோதரவான் புதன் ஆக்ஷியானல் தீரமுண்டு.

வியாழனிருந்தால், அதிகவுத்தன் - சகோதரவிர்த்தியுண்டு - தாக்ஷண்ணியமுள்ளவன் - கிருஷி வாணிபமுள்ளவன்-சரீரபோஷகன்-தன்ஜனத்தைப்போஷிப்பன்-கூடப்பிறந்த சகோதாருக்கு நன்மையுண்டு-படிக்கிறதில் பண்புடையவன்.

சுக்கிரனிருந்தால், சகோதரவிர்த்தியுண்டு-தாக்ஷண்ணியமுண்டு வாதசரீரம்- கொஞ்சம்லச்சையுள்ளவன் கோபம்-கலகம்-பால் சிந்தனேயுள்ளவன்.

சனியிருந்தால், சகோதரத்துக்கானி-சம்பன்னன்-துஷ்டன் -தாசிசாவகாசமுள்ளவன் - தனதானியவான் - கிருஷித்தொழிலுள்ளவன் பிரதானியரா யிருப்பான் சேவுகாவிருத்தியுள்ளவனுமாக யிருப்பான்.

இராகுகேது இருந்தால், ஐசுவரியம்-லக்ஷ்மிகடாக்ஷம்-அற்பபுத்தி - சகோதர பூச்சியன்-தைரியவான் பிரதாபமுடையவன்-கோத்திரவிர்த்தியுள்ளவன்-கோபவான்-காது ரோகமுள்ளவன் - ஸ்தலபேதமுடையவன்-அகாலபோஜனம் பண்ணுவான்.

௩-க்கு அதிபன்௩-ல் இருந்தால் லாகிரிவஸ்து சாப்பிடுவான் மானபங்கப்படுவான்-வீண்செலவு பண்ணமாட்டான் - 3 க்குஅதிபன் எங்கேயிருந்தானே அவன் அந்த ஸ்தானபலனை கொடுப்பான்.

செவ்வாயாவது சூரியனாவது இவர்கள் 3-6-8-ல் இருந்தால் பூமிவரும்-3-க்கு அதிபன் ஆக்ஷி-உச்சம்-திரிகோணம்-நட்பினிலிருந்தால் வெகு தைரியவானாயிருப்பான். உயிர்போகுமளவில் தைரியம் விடாமல் தாஷ்டீகமாய் பேசுவான்.6-8-12-ல் பலவீனமா இருந்தால் தைரியமில்லாதவனாய் சாவுக்கு பயந்தவனாக இருப்பான்.

3-ல் இராகு அல்லது கேது இருந்து சனிகூடினால், அல்லது பார்க்கில் அவனுக்கு சகோதரமில்லை செவ்வாயும் 3-க்கதிபனு மிருந்தாலும் நடுவே எத்தனைகால் கண்டதோ அத்தனை சகோதரம் சொல்லவும், அதில் ஆண் பெண் கிரகமறிந்து பலாபலன் பார்த்துச் சொல்லவும், அவன் எந்தப் பாவகத்தைப் பார்த்தாலும் கூடினாலும் அந்தப்பாவகம் நாசம்.

மூன்றுமிடத்ததிபனும் அங்காரகனும் நாலாமிடத்ததிபனும் கூடி இந்த மூவர்களும் குற்றமில்லாதவர்களாகில் தன்னுடைய சகோதரர் பங்கு மனை தனக்குவந்து சேருமென்று அறியவும்.

அங்காரகனுடைய ஸ்புடத்திலிருந்து இராகுவினுடைய ஸ்புடத்தை கழித்து நின்றமிச்சம் எவ்வளவோ அந்த இராசியில்குருவருங் காலத்தில் இளைய சகோதரர்களுக்கு அரிஷ்டம் வரும் இராகுவின் ஸ்புடத்திலிருந்து செவ்வாயின் ஸ்புடத்தைகழித்து நின்றமிச்ச இராசியில் குருவரும்போது மூத்தசகோதரனுக்கு அரிட்டம் வருமென்று அறியவேண்டியது.

மூன்று மிடத்தில் செவ்வாய்நிற்க, அல்லதுபார்க்கினும் துணைவரில்லையாம், பதினோராமிடத்தில் செவ்வாய் நிற்க, மூத்தோருண்டாம்: இரண்டாமிடத்தில் செவ்வாய்நிற்க, துணைவருடனே பிறக்கும், இவ்விதம் மும்மூன்றாகப்பார்த்து எண்ணி ஆண்பெண் இத்தனை யென்று அறியவேண்டியது.

மூன்றுமிடத்ததிபன் இலாபாதிபதிக்கு உறவாகி,அதிக பலவானாகவும் மித்துருவுடன்கூடி இலாபத்தில் இருக்க அவருடன்வந்து கூடி பெலமாக நிற்கும் கிரகம் எத்தனையோ அந்த தொகைப்படி

துணைவருண்டாமென்றும் அந்த கிரகங்களின் செயலறிந்து ஆண் பெண் இத்தனை என்றும் சொல்லவேண்டியது.

கடகம்-விருக்ஷிகம்-மீனம் இலக்கினமாகக்கண்டு அதை ஒன்பது பாகம் செய்து அதில் ஐந்தாம் பங்கில் பிறந்தவனுக்கு பின்பிறந்தகன்னிக்கு இலக்கினம் கடகமாகில், தூலதேகத்தை யுடையவளாக இருப்பாள். விருக்ஷிகமாகில் பேய்போல் கால்கைகள் குறுகிப்பெருத்து உருக்குலைந்து இருப்பாள்; மீனமாகில் மூடமாகித் திரிவாளென்று அறியவேண்டியது.

மூன்றுமதிபதியின் கிரகஸ்புடத்தில் செவ்வாயின் ஸ்புடத்தைக் கூட்டி. அதைபன்னிரண்டால் கழித்து வந்த மிச்சம் எத்தனையோ அந்த இராசியில் குருவரும்போது சகோதரர்கள் உண்டாவார்கள் அவ்விதம் ஸ்புடங்களைக்கூட்டி மேஷமுதல் அங்கிச இராசிவரையில் எண்ணிவர தொகை எத்தனையாகிறதோ அத்தனை சகோதரர்கள் உண்டாவார்கள். மேற்சொன்னஇராசியில் பாவக்கிரகங்கள் வருங்காலத்தில் சகோதரர்பீடையும் நஷ்டமுமுண்டாகும்.

ஆறுமிடத்தில் இராகு பலவானுயிருக்க அவன்திசை நடக்கும்போது சகோதர மாரகமுண்டாகுமென் றறியவேண்டியது.

சகோதரங்கள் அங்கிச இராசி ஆண் பெண் இத்தனையென்று சொல்லுமிடத்தில் தகப்பனுக்கு ஒன்பதாமிடத்திற்கு ஒன்பதாமிடத்தோனும் தாயாருக்கு நாலாமிடத்திற்கு நாலாமிடத்தோனும்-இளையசகோதரத்திற்கு மூன்றுமிடத்திற்கு மூன்றுமிடத்தோனும் மூத்த சகோதரத்திற்கு பதினேறுமிடத்திற்கு பதினேறுமிடத்தோனும் மாமனுக்கும் புத்திரர்களுக்கும் ஐந்தாமிடத்திற்கு ஐந்தாமிடத்தோனும் சகோதரபாகம் கூறவேண்டு மென்பதாம்

மூன்றுமிடத்தில், சுபக்கிரகம் பெலமா இருக்க அல்லது பார்க்க மூன்றிற்குடையவனும் அதிக பலமாக விருக்க மூன்றில் எந்தக் கிரகம் உச்சமாகுமோ அந்த கிரகமும் வந்திருக்கப் பிறந்தவன் காதுக்கணிகலமாகிய கர்ணபூஷணங்களை யணிந்தும் அதுகளை காப்பாற்றவும் செய்வார்களென்றறியவும், அப்படி மேற்சொன்னவிதமாக யிருக்குமிடத்தில் சுக்கிரன்மூன்றுமிடத்தில் இருந்தால் முத்துக்களினுல் செய்யப்பட்ட சடுக்கனையும்

குருவிருந்தால் அபரஞ்சிக்கடுக்கனையும்-புதனிருந்தால் சாமள வர்ணக்கடுக்கனையும்- சந்திரனிருந்தால்-சகலவிதமான ஆபரணங்களையும் அடைவார்க ளென்பதாம்.

சனியும் இராகுவுமிருந்தால், நீலவர்ணக்கடுக்கனும்கேதுவிருந்தால் சிகப்புவர்ணக்கடுக்கனும் அணிவனென்பதாம், மூன்றாமிடத்துக் குடையவன் ஏறிநின்ற வீட்டுக்குடையவன் பலவானாயிருக்கில் காதுக்கடுக்கனும் சகலாபரணங்களு முண்டாம், இவைகளெல்லாம் இடதுகாதுக்கென்றும் லாபாதிபதி ஏறிநின்ற வீட்டிற்குடையவன் கேந்திரத்திலேறி நல்லோர்கள் பார்க்கயிருந்தால் வலதுக்காதுக் கணிகலங்களும் அதிகமாக உண்டாகுமென்பதாம்.

மூன்றுக்கதிபன் இரண்டுக்கதிபன் லாபாதிபதி இந்த மூவர்களும் பாவர்கள் பார்க்கும்படி தனியே நின்றால் சாப்பிடுவதற்கு பாத்திரங்களில்லாதவனாகவும், இரண்டாம்வீட்டில் சூரியனும் சனியுமிருக்க இரண்டாம்வீட்டிற் குடையவன் மூன்றாமிடத்தில் சுபக்கிரகங்கள் பார்க்கவிருந்தால் வெள்ளியினால் செய்யப்பட்ட கலங்களும் பாவக்கிரகங்கள் பார்க்க விருந்தால் வெண்கலப்பாத்திரமுடையவனாகவு மிருப்பானென்றறியவும்.

மூன்றாமிடத்தில் நீசக்கிரகமிருக்க நாலாமிடத்துக்குடையவன் சஷ்டாஷ்டம வியங்களிலிருக்கப் பாவிகள் பார்க்க * களரோகம் வரும், மூன்றாமிடத்திற் குளிகனிருக்க மூன்றாமிட முடையவன் ஆறாமிடமுடையவனுடனே கூடி இராகு குளிகன்பார்க்க * களரோகம் வரும்,

சுக்கிரனும்-சந்திரனும்-பலவானாக சுபாள் கூடப்பார்க்க பொன்பாத்திரத்திற் சாப்பிடுவான். மூன்றாமிடத்தில் புதனிருக்க சவுமியாள்பார்க்கக் காரகனுமப்படியே யிருக்கக் கடுக்கன் அணிவான்.

மூன்றாமிடத்தில், பாவிகளிருக்க மற்றக்கிரகங்கள் அபரோகத்திலிருக்க விசேஷமாய்க் * களரோகமுண்டு, மூன்றாமிடத்தில் இராகுவிருக்க சுபர் பாராதிருக்க களரோகம் வரும்.

செவ்வாயுடனே ஆறாமிடத்துக் குடையவன்கூடி சஷ்டாஷ்டமவியத்திலிருக்க செவி கெட்டுப்போம், மூன்றாமிடத்திற் சுக்கிரனிருக்க வியாழன்பார்க்க அல்லது இருக்க நீலக்கல்கடுக்கன்போடுவான்.

---

* களரோகம் - ஓர் வியாதி.

சந்திரனுடனேயும் செவ்வாயுடனேயும் சவுமியாள்கூட வயிரக்கல் பதித்த ஆபரணம் பூணுவான், சந்திரன்-வியாழன்-புதன்-சுக்கிரன் இவர்கள்மூன்றிலிருக்கப்புராணங்கள்கேட்பன்புண்ணியவான்.

மூன்ருபாவகம்.

முற்றிற்று

நான்காம்பாவகம்.

சூரியன் இருந்தால் அங்கவீனன்-பீடையாயிருப்பான் - ஜனங்களுக்கு விரோதி-பந்துக்களுக்கு விரோதி- திரவியம்பூமி இவைகளை யிழந்துவிடுவான்-அதிக மனஸ்தாபமுள்ளவன்-பலவிசார முடையவன்,

சந்திரன் இருந்தால், குதிரையுண்டு-சந்தனபுஷ்பப் பிறியன் வெகுஜன போஷகன்-வீடு விஸ்தாரமாகக் கட்டுவான்.

செவ்வாயிருந்தால், மாதுருகண்டம்-பிதுர்ரோகம்-வீட்டில் சண்டை-பராதீனம்-களத்திரபீடை-தைரியமுள்ளவன்-ஸ்ரீகளுக்குவெறுப்புண்டு-இராஜாவிடத்தில் சேரபியாவான் - தீர்க்காயுளுண்டு.

புதனிருந்தால், வித்தையுண்டு வெகுவினயன்-பண்டிதன்-கீர்த்தியுள்ளவன்-தரித்திரவான் -வாகனம் தனம் தானியமுள்ளவன்-பந்துஜனங்கள் ஆதிபத்தியமுள்ளவன். ஞான தூஷணமுள்ளவன். சுகபோஜனமுண்டு-கல்வியுண்டு.

வியாழனிருந்தால், சுகஜீவனம் - சோபனமுண்டு-பால் பசு பாக்கியமுடையவன்-வாகனமுண்டு ஜனங்களை போஷிப்பான் வீடு பந்துக்கள் விஸ்தாரமுண்டு- நல்ல தர்மமுள்ளவன் புத்தி வித்தைஉண்டு மாதாவுக்கு தீர்க்காயுளுண்டு சுகசரீரம்.

சுக்கிரனிருந்தால், போசனப்பிரியன்-மாதுரு சௌக்கியன் நானாவித தொழிலில் லாபமுண்டு - பால்பாக்கியமுடையவன்- வாகனக் குதிரை யுடையவன், பந்துஜனப்பிறியன்-தனதானியமுடையவன் -சகோதரமுண்டு-வித்தை கல்வி புத்தியுடையவன் - பண்டிதன்-ஸ்திரீவிரோதன்-மாதாவுக்கு அற்பாயுளுண்டு.

சனி இருந்தால், மாதுருகண்டம்-மாதா இரண்டு-மூலரோகம்-சௌக்கியமில்லை. மித்திரபேதங் கற்பன், எள் உளுந்து பிறியன்-பெரியமனுஷாள் சேர்க்கை-பூர்வ சம்பாத்திய பூமியைபோக்கிடுவன் - சரீரபுஷ்டி - சகோதரமுண்டு-வாகனமுண்டு பந்துக்கள் விரோதம்.

இராகுகேது விருந்தால்; வெகுபூஷணமுண்டு-பெண்ஜாதி இரண்டு மாதாஇரண்டு-சேவகாவிர்த்தி-மூடன்கல்விமாளுகஇருப்பான்.

நாலாமிடம் சுபக்கிரகங்களிருக்க, தனமும்-பிரபுக்கள் - சேர்க்கையுமுண்டு-சுபரும்-சனியும் நிற்க பிரதேசவாசம்பண்ணுவான்-சத்துருஸ்தானமிருந்தால் இனத்திலே தள்ளப்பட்டிருப்பன்- செவ்வாய் பாபருடன்கூடி இருக்க இருந்தநட்புகள் அற்பமாயிருக்கும்.செவ்வாயும் சனியும்நிற்க, ஏதுகாரியமும் ஒருவரறியாமல் செய்வான் சுக்கிரனும் வியாழனும் நிற்க வித்துவானுவான் எந்தகாட்டிலே போனலும் சகலபோகபாக்கிய மனுபவிப்பான்-குருவும்-சனியுமிருந்தால் இராஜயோகம் - குதிரை யானை பல்லக்கு-வெகுஜனங்களைப் போஷிப்பான்.

சூரியன்சந்திரன்-இராகு-செவ்வாயிருக்க, பிறந்தவன் வீடு பகையாய்ப்போம். இவர்கள் பலத்திருந்தால், பிறந்தவன்வீடு மூன்று வருஷத்தில் ஜீரணம்-அக்கினி வாதை-பாம்பு பெருச்சாளி குடியிருக்கும். இடம் பேதிக்கும் - கிட்டின பந்துவர்க்கத்தில் மனவருத்தமுண்டு.

சந்திரன், பாவருடன்கூடி நாலில் இருக்க, வயிறு அல்லது காதில் நோய் உண்டு.

ஒன்பதுக்கதிபனும் இராசிக்கதிபனும் கூடி ஒன்பதில் நாலில் இருக்க அப்பாலகன் பதினறுவயதுக்குமேல் யோகவானும்-இராஜபூஜிதனுக இருப்பான்.

நாலு ஒன்பதுக்கதிபன் சுபனுக ஒரு இராசியிலிருந்தால் வெகு ஜனங்களுக்கு அதிகாரியாக இருப்பான்.

நாலாமிடம் சுபவீடாகஇருந்து அந்த வீட்டுக்கதிபன் திரிகோணம் கேந்திரம் நட்பாயிருந்தாலும், அவனை சுபர்பார்த்தாலும், அவன் பிறந்த வீடு கெட்டி மச்சுவீடாயிருக்கும்.

அல்லது பாபர்வீடாயிருந்து ஆறு எட்டுபன்னிரண்டிலிருந்தாலும், நீசம் அஸ்தங்கிதனு இருந்தாலும், அவன் கூரைவீட்டில்

பிறந்தவனுக இருப்பான். அல்லது பாபருடையவீடாயிருந்து பாபர்பார்த்தாலும், பகைவீடாயிருந்தாலும், சொந்தமில்லாத அஜீரணமான கூரைக்கட்டு வீட்டில் பிறந்திருப்பான். இலக்கினத்துக்கு ஆறுஇராசிக்குமேல்,மூன்ரும்இராசிக்கதிபன்,பலவீனமாயிருந்தால் அவருக்கு சொந்தவீடில்லை அவன் பலத்திருந்தால் வீடு உண்டு.

ஒன்பதுக்கதிபன் நாலில் இருக்க அவருடன் சுபர்கூடில் அல்லது சுக்கிரன், வியாழன், பார்க்க அவன் திசையில் ஏழுக்கதிபன், புத்தியில் நல்ல வாகனம் பெறுவான்.

சந்திரன் கூடினுல் குதிரையுண்டு, நாலுக்கதிபன் பலத்து, ஏழுக்கதிபன் நட்பு, ஆக்ஷி உச்சமாயிருந்தால் அவன் கனகதண்டிகை ஏறி வெண்சாமரம் வீசும்படியான யோகவானுயிருப்பான்.

நாலுக்கதிபன் ஒன்பதிலிருக்க,ஒன்பதுக்கதிபன் நாலில் இருக்க அது சுபர்வீடாயிருந்து சுபர் பார்க்க அல்லது கூடினுல் அவன் நரவாகனமும், அசுவவாகனமும் உடையவனுக இருப்பான்.

நாலுக்கதிபனும், சந்திரனும் ஒருஇராசியிலிருக்க அல்லது இராசிக்குடையவனும் கூடியிருக்க பார்க்க அவனுக்கு குதிரைவரும். சுக்கிரன்இருந்தால் தண்டிகை வரும். வியாழன் இருந்தால் திரவியம் வரும்.

நாலில் வியாழன் இருந்து இராசிக்கதிபன்பலத்திருந்தால் அவன்ஆனை குதிரை தளங்கள் முதலானதை அனுபவிப்பன்.

நாலுக்கதிபனும் வியாழனும்,இலக்கினத்திலிருந்து புதனுடன்கூடியிருந்தால் அவன் வீடுவெந்து தனதான்னிய சேதமாய் தரித்திரவானு யிருப்பான்.

நாலில் குளிகன் இருந்தால், பிள்ளை ஒருவன் வீட்டில் வளருவான் வியாழன் சுக்கிரன் சந்திரன் இருந்தால், மகாசௌக்கியமாய் போக போக்கியங்களை அனுபவிப்பான், தருமம்செய்வான்.

நாலுக்கதிபன் கேந்திரத்திலும், இரண்டுக்கதிபன் ல்க்கினத்திலும், இருந்தால் வெகுபணக்காறனு யிருப்பான்,

நாலாமிடத்தை சனி செவ்வாய் பார்த்தாலும், நாலுக்கதிபனுடனே கூடினுலும், மாதுருக்கு விபசாரி தோஷ முண்டு.

நாலுக்கதிபனுடனே இராகுகேது கூடினுல்,அவனுக்கு பாபிஷ்டியான பெண்சாதி அமருவாள்.

சந்திரன் வாகனுதிபதி ஜன்மாதிபதி இம்மூவர்களும் ஒன்ருய் கூடி நிற்கில், இவனுக்கு அசுவவாகனங் கிடைக்கும். இவர்களோடு சுக்கிரன்கூடில் தண்டிகைகிடைக்கும். நாலாமிடத்திற் குடையவன் கெட்டுப்போகாமலும், வியஸ்தானத்திலு மில்லாதிருந்தால் சிவிகை யுண்டென்றும் சொல்லவேண்டும்.

பாக்கியாதிபதி வாகனஸ்தானத்தில் குரு-சுக்கிரனேடு கூடியிருக்க அல்லது பார்க்க, இவனுக்கு கனகதண்டிகைவரும். இவர்களோடு சந்திரன் பாபியுமாகக்கூடிநிற்கில், இவனுக்கு பூச்சக்ரக்குடை கிடைக்குமென்று சொல்லவேண்டும்.

வாகனுதிபதி பாக்கியத்தில் நிற்க, பாக்கியதானுதிபதி கேந்திரத்தைப் பற்ற, இருவர்கள் நிற்கும் இராசி நல்லோர்மனையாக இருக்க, சுபக்கிரகங்களோடு கூட இலக்கினுதிபதி வாகனஸ்தானத்திலும் கேந்திரத்திலுமேவ, இவனுக்கு கனகதண்டிகையும் மிகுந்ததனமும் யானைவாகனமும், வாகனகாரகனுகிய சுக்கிரன் கொடுப்பானென் றறியவேண்டும்.

சுக்கிரன் நாலாமிடத்ததிபனுடன் கூடினுலும், அல்லது இருவரும் கேந்திரமேறினுலும், நாலாமிடத்தோன் சந்திரனுடன் லாபத்தில் நிற்கினும், வாகனலாபமுண்டாம். நாலாமிடத்தில் குருவிருக்க நாலாமிடத்தோனை சுக்கிரன்கூடில் - தண்டிகைகிடைக்கும். சுக்கிரன்நாலாமிடத்தோனுகி ஜென்மாதிபதியைக்கூடில் வெறுஞ்சஞ்சாரமே என்று அறியவேண்டும்.

சந்திரனுக்கு மூன்ருமிடத்தில் சுக்கிரன் இருக்க, சுக்கிரனுக்கு மூன்ருமிடத்தில் சந்திரன் இருக்க, அல்லது ஒருவர்க்கொருவர் பார்த்திருக்க, கு டும்பஸ்தானத்தை நல்லோர் நோக்கவும் அல்லது இலக்கினத்தைப் பார்க்கிலும், இவனுக்கு வாகனங் கிடைக்குமென்றும் அறியவேண்டியது.

நாலாமிடத்ததிபன் இலக்கினத்தில் நிற்க, இவனுக்கு பல்லக்கோடு செல்வமுண்டாய் வாழ்வன். இலக்கினத்தில் வியாழன் நிற்க, அவரை நல்லோர் பார்க்க, தண்டிகை வருமெனக் கூறவும்.

வாகனுதிநின்ற இராசி நல்லவர்வீடாய் பணபரம் அல்லது கேந்திரமாகியுமிருக்க, சனித்த சிறுகுடிசையானது பெரியவீடாகும் - தாயாருக்கு இன்பமுண்டாகும்-வாகனுதிபதி சனி குருவாகில் தண்டிகை கிடைக்குமாம், பூர்வபக்கத்து சந்திரனுகில் பூச்சக்காக்குடை கிடைக்குமாம், சுக்கிரனல் பல்லக்குண்டாம்,

(நான்காம்பாவபலன்.)

சூரியனுகில் மாடுமுதலிய வாகனங்கள் கிடைக்கும். புதனுகில் விச்சித்திரப் பல்லக்கு வாகனமாக கிடைக்கும்

நாலாமிடத்தோன் ஸ்புடத்தோடு சுக்கிரன் ஸ்புடத்தைக் கூட்டிக் கண்டராசியிலும்அதற்கு கேந்திர திரிகோண ராசிகளிலும் குருவருங்காலத்தில் வாகனலாபம் கிடைக்கும்

சுக்கிரனுக்கு மூன்றுஎழில் சந்திரனிருக்க, சந்திரனுக்கு மூன்றுஎழில் சுக்கிரனிருக்க, இவனுக்கு வாகனமுண்டாம்.

நாலாமிடத்தோன் நல்லோருடன்கூடி சந்திரகேந்திரம்பெற்று நிற்க வாகனமோடு திரவியந்தேடி நாட்டில் அரசனைப்போல் வாழ்ந்து நல்ல புத்திமானுக விருப்பான்.

நாலாமிடத்தாதி இலக்கினுதியோடும் பாவிகளோடுங்கூடி ஒருவீட்டில் நிற்க,அந்தவீடுஜென்மாதிபதியின்உச்சமனையாகில்,இவனுக்கு குதிரைவாகன மூடையவனும் புத்திமானும் மன்னர்களை எந்நாளும் சேவித்து வாழ்வான்.

ஜன்மாதிபதியும் நாலாமாதிபதியும் நல்லோர்களும் கேந்திரத்திலிருக்க நல்ல பலனுண்டாம்.

சூரியன் சந்திரன் சுபக்கிரகங்கள் இவர்கள் மூவரும் ஒன்ருய்க்கூடி கேந்திரத்திலிருக்க, ஆனைவாகனம் வந்துசேரும்.

ஜன்மாதிபதியும் பத்தாமாதிபதியும் நிறைந்த சுபரோகூடி கேந்திரத்தில்நிற்க மதகரி வாகனம்சேரும். பருவமுள்ள நல்ல சவுந்தரியமான மனையாளை மருவுவன்

ஜன்மாதி இலாபாதி நல்லோர்கள் இவர்கள் மூவரும் சேர்ந்து கேந்திரத்தி லிருக்க சுபம் உண்டாகும்,

ஜன்மத்திலும் பத்தாமிடத்திலும் உத்தமகிரகங்களிருக்க, அன்னியரால் அதிகார மூடையவனுவன்.

ஜன்மாதிபன் பத்தாமதிபனேடும் நல்லோர்களோடும் மேவிநிற்க, இவன் அரசர்களைச் சேவித்தும் ஆபரணுதிகளைப்பெற்றும், சத்திரசாமரைகளோடு மிகவும் கீர்த்திமானுக இருப்பான்.

ஜன்மாதிபதி பத்தாமிடத்திலிருக்க, பத்தாமிடந்தாதி நாலாமிடத்திற் கூட, நாலாமிடத்தோன் உச்சமாக, இவன் வேந்தனுகவும் சுகவானுகவும் வெகு லீலாவினேதனுகவு மிருப்பன்.

பத்தாமிடத்ததிபன் நாலாமிடத்தில் நிற்க, நாலாமிடத்தோன் பத்தில் நிற்க, ஜன்மாதிபன் உச்சனுகஇருக்க, பலவிதமான வாகனங்களோடு மன்னவனுக இருப்பான்.

இரண்டாமாதிபதி இலாபத்தில் நிற்க, இலாபாதிபதி இரண்டாமிடம் மேவ நாலாமாதிபதி யுச்சமாகநிற்க, சகலவாகனங்களோடுஅரசனாக இருப்பான்.

இரண்டாமாதிபதியும் இலாபாதிபதியும் இரண்டாமிடத்திலிருக்க பத்தாமாதிபன் உச்சமாகவிருக்க தண்டிகையுண்டாம்.

மாதுர்ஸ்தானாதிபதி சனியோடுகூடி அட்டமத்தில்நிற்கவும், பின் கோச்சாரத்தில் மாதுர்ஸ்தானத்திற்கு ஐந்து ஒன்பதில் சனி வருங் காலத்திலும் தாயாருக்கு அரிட்டம்.

ஷை ஸ்தானங்களில் நற்கோள்கள் உச்சமாகில் நன்மை உண்டாம்.

நாலாமிடம் இரண்டாமிடம் ஏழாமிடத்திற்குடையவர்கள்மேற்கண்ட ஸ்தானங்களில் சனி செவ்வாயுடனே கூடியிருந்தாலும் நாலு இரண்டு ஏழாமிடத்தில் செவ்வாய் நிற்க சனி பார்த்தாலும் தாயாருக்கு அரிட்டம்.

சனி செவ்வாய் இவர்களுக்கு ஐந்துஏழு ஒன்பதாமிடங்களில்சந்திரன் நின்றால் தாயாருக்கு தோஷம் குருபார்த்தால் தோஷமில்லை,

இலக்கினத்தில் சந்திரன்நிற்க, பாவக்கிரகம் அதைப்பார்க்க ஏழாமிடத்தில்செவ்வாய்நிற்க, பிறந்தபிள்ளையைபிறர்வளர்ப்பார்கள்

பன்னிரண்டாமிடத்திலும், இரண்டாமிடத்திலும், இலக்கினத்திலும் சந்திரன் பாவரோடு கூடிஇருந்தால் அன்னைக்கு அரிட்டம்.

நாலாமிடத்ததிபன் திசையில் மாதருஸ்தானத்திற்கு எட்டாமிடத்தில் சனியும் நாலாமிடத்ததிபனுங் கூடிநிற்கில், அன்னைக்கரிட்டமாம்

நாலாமிடத்தோனுடனே செவ்வாயாகிலும் சூரியனாகிலும் கூடில் இடருண்டாகும்.

புதன் ஷை நாலாமிடத்தோனுடன் கூடியிருக்க நோயுண்டாகும்.

புதனும் நாலாமாதிபனும் தீயோர்வீட்டில் சுபக்கிரகம் பார்வையில்லாமல் வந்து நிற்கும் காலத்தில் அன்னைக்கரிட்டம்.

நாலுக்குடையவனுடன் தனாதிபதிகூடி எங்கேயிருந்தாலும் தனம் சேதமாகும்.

அன்னைக்கு நாலாமாதியுடன் சனி செவ்வாய் கூடில் அவர் திசையில் அன்னைக்கரிட்டம் வரும்.

நாலாமிடத்தில் செவ்வாய் நிற்க, சனியும் சந்திரனும் மருவி எங்கேயிருந்தாலும் அன்னைக்கு மரணம் வரும்.

மாதுரு ஸ்தானாதிபதி அஸ்தங்கதமாய் வியத்தில் நிற்க, நாலாமிடத்தில் சந்திரன்நிற்க இவர்க்கேழில் சனி இருந்தாலும் சுக்கிரனுக்கு ஏழில் செவ்வாய் நிற்கவும் அன்னைக்குஅரிட்டம் வரும்.

(நான்காம்பாவபலன்.)

சுபக்கிரகங்கள் இவர்களைப்பார்த்தால் தோஷமில்லை.

சூரியனுடன் சனிசேர்ந்து குடும்பஸ்தானத்திலிருந்துமூன்றாமிடத்ததிபனையும் நாலாமிடத்தையும் சனிபார்க்க, சந்திரன் பாம்புகளுடனேயாவது பாவிகளுடனேயாவது சேர்ந்து பலனற்றிருக்கும்போது நாலுக்குடையவன்உச்சமாயிருந்தாலும்தாய்க்குபீடை.

மாதுர்ஸ்தானத்தில்சந்திரனும்சுக்கிரனும்பாம்பும்மூன்றுபேருமிருக்க இவர்க்கு ஏழில் ஐந்தில் சனிநிற்க, சூரியனுடன் மூன்றாமிடத்தோன் ஐந்தாமிடத்தில் நிற்க, இவர்களை சனிபார்க்க குடும்பஸ்தானத்தை அங்காரகன்பார்க்க, தாய்க்கு அரிட்டம்.

மேடலக்கினத்திற்குமாதுர்ஸ்தானத்தில் சுக்கிரனும்புதனும்நிற்க,அதற்கேழில் குருநிற்க, அப்போது சந்திரனுக்குயேழில் சனியிருந்தால் மாதாவைப் பெற்றமாதா போய்விடுவாள்.

சந்திரனுச்சமாகி சுபக்கிரகங்கள்பார்க்க அன்னைக்குத்தோஷமில்லை

சனியும் அங்காரகனும் இரண்டாமிடத்தையும், நான்காமிடத்தையும் பார்க்கில், மாதுர்காரகனும் வலிமைகெட்டு விரையத்தில்நிற்க, அன்னைக்கு பல்மான நோய்காணும்.

அங்காரகனோடு பாம்பு வலிமைபெற்று இரண்டு நாலாமிடத்தைப் பார்க்க மாதுர் காரகனும் முன்போல் கெட்டு நின்றால் அன்னைக் கரிட்டமாம்.

வியாழன் பார்த்தால் பூமியில் சிலகால மிருப்பாள்.

நாலாமிடத்திற்கு இரண்டாமிடத்திலிருந்தவர்களும் குடும்பாதிபதியும் பலவான்களாகில் அன்னைக்கு சவுக்கியமுண்டாம்.

நாலாமிடத்ததிபன் உச்சமாகி ஆண் அங்கிசத்திலிருந்தால், அன்னை புருஷனுடைய கண்டிப்புக்குள்ளாகாள்.

சந்திரலக்கினத்திற்கு ஏழில் செவ்வாய் நிற்கில் அன்னைக்கரிட்டமாம்.

மாதுர்தானம் கடகமாக அதில் சந்திர நிற்கில் வயது பூரணமாம்.

இதற்கு இரண்டுபுறமும் பொல்லாக்கிரகங்கள் நிற்க சந்திரன் நடுவில் நிற்க தாயாருக்கு அரிட்டம்,

மாதுர்ஸ்தானதிபதியும் பிதுர்ஸ்தானதிபதியும் சூரியனுடன் கூடி 6 8 12 ல் நீசமாகி நீசஸ்தானத்தில்நிற்க, பிறந்த பாலன் தாய் தந்தைக்குப் பிரியமில்லாத பிள்ளையாவான்.

மாதுர்பிதிர்ஸ்தானதிபதிகள் சேர்ந்து எந்தஸ்தானத்திலிருந்தாலும், சந்திரனும்சூரியனுங்கூடி மாதுர் பிதுர்ஸ்தானங்களில்நிற்கில், தாய் தகப்பனுக்கும் மரணமுண்டாம்.

நாலாமிடத்தோனும் ஒன்பதாமிடத்தோனும்,பெலத்திருக்கில் பாலனுக்குப் பெற்ருேரால் சுகமுண்டு.

நாலாமிடத்தோனும் ஒன்பதாமிடத்தோனும் தனத்திலும் பாக்கியத்திலும் இலாபத்திலும் சுகமாகயிருக்கினும், அல்லது உச்சத்திலும் கேந்திரத்திலும் திரிகோணங்களிலும் மேவிநிற்கில்,தாய் தந்தை மைந்தர்களோடு சந்தோஷமாக வாழ்ந்திருப்பன்.

ஒன்பதாமாதிபதியும்,ஜன்மாதிபதியும்,நான்காமாதிபதியும்,பெலமற்றுயிருக்க, தாய் மறுகர்ப்பமாக யிருக்கும்நாளில் அரிட்டம்,

சந்திரனும் செவ்வாயும் ஆருமிடத்தோனுங் கூடி நாலாமிடத்தில் நிற்கில் தாய் சோரம்போவாள்.

நாலாமிடத்தோனும் ஒன்பதாமிடத்தோனும் லக்கினுதிபதியுங் கூடி திரிகோண கேந்திரங்களில் நிற்க தாயார் வரமுறையில்லாத பரஸ்திரியாவாள்.

பத்தாமிடத்ததிபனும் நாலாமிடத்தோனும் அங்காரகனும் 6-8-12-ல் நீசஸ்தானத்தில் நிற்க, இவனுக்குப் பங்கு மனையில்லை.

இந்தக் கிரகங்கள் பெலமுற்று நிற்க, மனைபங்கு லாபமுண்டாம் நாலாமிடத்தோன் உச்சம்பெறில் மாடகூடமுண்டாம்.

நாலாமிடத்தோன் சத்துருவீட்டிலும் நீசத்திலும் நிற்க, வியத்தானுதிபதி தனஸ்தானத்தில் நிற்க, இலக்கினுதிபதியும் சூரியனும் நாலாமிடத்தோனுங்கூட நல்லோர் பாராதிருக்க, இவன் தன் பங்கு மனை யாவும் குறையாய்ப்போய்விடும்.

ஆருமிடத்ததிபன் பத்து வழில் நிற்க இலக்கினத்தில் அங்காரகன் நிற்க, சுபக்கோள்பார்க்க, அல்லதுசேர,சத்துருக்களின்மனைகளெல்லாம் வந்துசேரும்.

நாலாமிடத்ததிபன் இலக்கினுதிபதியோடு கூடி நாலாமிடத்தில் நிற்க, இவன் ஒருவர்வீட்டிலிருந்து வாழ்வான்.

நாலாமிடத்தோனுடன் சேரும் பாவர் எத்தனையோ அத்தனை வீடு கட்டி சேதமாகும்.

இலக்கினுதிபதி பெலமற்று ஆருமிடத்திலும், பன்னிரண்டாமிடத்திலும் நிற்க, ஜன்மத்தைப் பாவர்காண இவனுக்கு மனை பங்கு யில்லை.

வியஸ்தானுதிபதி இரண்டாமிடத்தில் நிற்க, நல்ல வீடுகட்டி சகல பாக்கியமுஞ் சேர்ப்பன்.

அதில் வியஸ்தானுதிபதியோடு எத்தனை கிரகங்கள் சேருகின்றதோ அத்தனை வீடுகட்டிச் சமர்த்தனுக வாழ்வன்.

ஜெனனமான இராசி சரமாகில் பரதேசசஞ்சாரஞ் செய்வன்.

திராசியாகில் சுதேசந்தன்னில் வாழ்வன்.

உபயராசியாகில் பரதேசத்திலசிலநாளும் சுதேசத்தில் சிலநாளுமாய் சஞ்சாரஞ் செய்வான்.

(நான்காம்பாவபலன்.)

பன்னிரண்டாம்வீடுசுபர்வீடாகில் இராஜபிரபுக்களை யடுத்துவாழ்வன் அது சூத்திரஜாதி கிரகத்தின்வீடாகி இலாபாதிபதிக்குஉறவுபெற்று இருக்கில், சூத்திரர் மனைக்கருகில்வாழ்வன்.

பன்னிரண்டாமாதிபன் மாதுர்ஸ்தானம் சகோதரஸ்தானம் பிதுர்ஸ்தானம் களஸ்திரஸ்தானம் புத்திரஸ்தானம் இவைகளில் போய் நிற்கினும், அந்தஸ்தானாதிபதியுடன் சேரினும் அந்தந்த அதிபர்களின் வீடுமனை அந்தந்த கிரக காரகர்களால் கிடைக்கும்.

நாலாமிடத்தை பாபக்கிரகங்கள் மருவிநிற்க, அல்லது பார்க்க ஜன்மாதிபதி பெலமில்லாதிருந்து பாவரோடு கூடிநிற்க நல்லோர் பாராதிருக்க இவன் பரஸ்திரிலோலன்.

ஜன்மாதிபதி நாலாமாதிபதி பாக்கியாதிபதி இவர்கள் மூன்றுபேரும் ஆறுமிடத்தைச்சேர்ந்திருக்க, அல்லது ஆறுக்குடையவனேறிய அங்கிசத்திலாவதிருக்கவும், நாலாமாதிபனுடன் பாம்பாவது அல்லது சனியாவதிருக்க இவன் பரவிஷயமுள்ளவன்.

நாலாமிடத்தாதிபனும் ஆறுமிடத்தாதிபனும் பெலயீனப்பட்டு கூடி சந்திரனும், சுக்கிரனும், துர்ப்பலமாயிருக்க நாலாமிடத்தை பாவக்கிரகங்கள் பார்த்தாலும் நாலாமிடத்ததிபதி சந்திரனோடும் இராகுவோடுங்கூட ஜன்மாதி நாலாமாதி ஆறுமாதி ஒன்பதாமாதி இவர்கள் நால்வரும் ஏழாமிடத்தில் கூடியிருக்க பிறந்தவன் பரஸ்திரீ லோலனாவன்.

சந்திரனையும் ஜென்மராசியையும் குரு பாராவிடில் சூரியனும் சந்திரனும் ஒன்பதாமிடத்தில் நிற்க பிறந்தவன் பரசாதகனாவான்.

இலக்கினத்தில் சூரியனுஞ் சந்திரனும் நிற்க வியாழனும் நீசனாய் சனி அங்கிசத்திலிருக்க பிறந்தசேய் பரசாதகனாவான்.

ஞாயிற்றுக்கிழமை சுவாதிநக்ஷத்திரம் துதிகை திதியிலும்,
புதன்கிழமை ரேவதி நக்ஷத்திரம் சப்தமி திதியிலும்,
சனிக்கிழமை அவிட்ட நக்ஷத்திரம் துவாதசி திதியிலும், பிறந்த பாலகன் பரசாதகனாவான்.

மூன்றுமிடத்ததிபன் சனியுடன்கூடி, ஐந்தாமிடத்திலிருக்க சூரியன் ஆறு ஐந்து நாலு இவ்விடங்களில் நிற்கில் இவன்தாய் ஐந்து வருஷத்தில் இறப்பாள்.

மாதுர் பிதுர்த்தானாதிபதிகள், தன்வீடுமாறி ஒருவர்வீட்டிலொருவராக இருந்தாலும் அல்லது அஸ்தமனமாக இருந்தாலும் அன்னை மரணமாவாள்.

நான்காம்பாவபலன் முற்றிற்று.

ஐந்தாம் பாவபலன்

ஐந்தாமிடத்தில் சூரியனிருந்தால் தயவு தாக்ஷண்ணிய மில்லாதவன் அல்பபுத்திரனுண்டு சேவகாவிர்த்தி வயறுபெரிதாயிருக்கும் தீவிரபுத்தி தரித்திரமுடையவன் ஞானமுண்டு பிதாவுக்கு தோஷமுண்டு.

சந்திரனிருந்தால், பெண்ஜாதி ரூபவதியா யிருப்பாள் நானாவிதத்தொழிலில் இலாபமுண்டு பால் பாக்கியமுண்டு மாயதந்திரமந்திரமுடையவன் டம்பமாக இருப்பான் பிரபுக்கள் அபிமானமுண்டு வெகுபுத்திருண்டு-விரதவிக்கினன்-மாதாவுக்கு அரிட்டம் நல்லபுத்தியும் நல்ல வசனமுமுடையபவன்.

செவ்வாயிருந்தால், மாமன் சகோதரங்களுக்கு தோஷமுண்டு புத்திரனுண்டு துஷ்டன் இராஜகோபன் இனத்தாருக்கு பீடை உண்டு முன்கோபி புராணகதையில் வல்லவன் மாதாவுக்கு ரோகம்.

புதன் இருந்தால, சரீரத்துக்கினம்-சௌக்கியன்-இராஜபூஜிதன்-நானாவிதவஸ்திரப் பிறியன்-வித்தையுண்டு-டம்பன்-கலகப்பிறியன்.

வியாழன் இருந்தால், நேத்திரம் பெறிதா யிருக்கும்-இராஜசேனாதிபதியா யிருப்பான்-அற்பப்புத்திரனுண்டு - புத்திமான் - செலவு அதிகம் உண்டு பிதுர்சகோதர முடையவன்-புத்திரன்-மூலியமாய் ஐசுவரியம்: தாயாருடைய தகப்பனுருக்கு கெண்டம் பிள்ளைகளுக்கும் இஷ்டர்களுக்கும்சௌக்கியம் செல்வமுண்டு

சுக்கிரனிருந்தால், மந்திரி-சேனாதிபதி-புத்தியுள்ளவன்-திரவியமுண்டு. மாதுரு அரிஷ்டமுண்டு-வித்துவான்- பூபதியாவான்.

சனியிருந்தால், புத்திரவிசனம்-துர்ப்புத்தி-துர்விசாரம் இராஜகோபன் பெரிய மனுஷவிரோதி - தத்துபுத்திரனுண்டு - தர்மசிந்தனை- சத்துருஜெயம் அலபபுத்திரன் பிறந்தம்பொது தத்து இல்லாதிருந்தால தீர்க்காயுளுண்டு.

இராகுகேது இருந்தால், அற்பபுத்திரயோகம் - தயவுள்ளவன் முன்னே பெண்பிறக்கும் - பவுத்திரரோகமுண்டு - துன்மார்க்கன். இராஜகோபன்-பிரதாபன்-புத்திர தோஷமுண்டு- சுபர்பார்க்க கூடி ஏழு எட்டிவிருக்க புத்திரனுண்டு.

ஏழு எட்டுக்குடையவர்கள் ஷெ ஐந்தாமிடத்தில்கூடினால் புத்திரனுக்கும் பெண்ஜாதிக்கும் தோஷமுண்டு-புத்திரமத்திபம்-உண்டாகில் சேதமாகும்,

ஐந்தாமிடம் கடகமாகில், அதில் சூரியனிருந்தால் வெகுபுத் திரனுண்டு.

(ஐந்தாம்பாவபலன்.)

இதில் செவ்வாய் நிற்கில்; முன்தாரத்துக்குப் பிள்ளையில்லை-பின்தாரத்துக்குப் பிள்ளையுண்டு.

கடகம் ஐந்தாமிடமாகி அதில் சந்திரன் நிற்க, பரஸ்திரீ போகமுண்டு. பாபர் ஐக்தில், ஆக்ஷி உச்சமாயிருக்க அற்பபுத்திரயோகம். ஐந்து இரண்டில் பாபர் நிற்க வெகுபுத்திரர்:

ஐந்தாமிடம் சிம்மமாகில் அற்பபுத்திரயோகம்.

இரண்டு-மூன்றில் பாவர் இருந்தால் இவர் திசை பொசிப்பில் புத்திரருண்டு.

இலக்கினதிபதி ஐந்திலிருக்க பிள்ளையுண்டு.

ஐந்துக்கதிபன் ஆறில் அல்லது ஆறுக்கதிபனோடு கூடியிருந்தால் புத்திரயோகம் - அற்பாயுள்.

ஒன்பதுக்கதிபன் மூன்றுக்கதிபனோடு கூடியிருந்தால் நல்ல பிள்ளைகள் பிறக்கும் பாக்கியவானாக இருப்பான் தீர்க்காயுளுண்டு

ஐந்துக்கதிபன் எட்டில் நிற்க, ஏழுக்கதிபன் ஐந்தில்நிற்க, அவனுக்கு புத்திரர் பிறந்து இறந்துபோம்.

ஐந்தில் பாபர்நிற்க புத்திரர் அற்பம் தேகபலயீனமாய் இருப்பான்.

ஐந்தில்சுபர்கள் இருந்தால்;ஆதாயம் வந்துகொண்டே இருக்கும். இராஜப்பிறியன் - பெற்றோர் பிறியன்-உறவின்முறையார் பிறியன் நல்ல புத்திரனுண்டாம் புத்திரசம்பார்த்தனை யுண்டாம்.

ஐந்துக்கும் இலக்கினத்துக்கும் பத்துக்கும் அதிபன் ஆட்சியுச்சம் கேந்திரமாய் சுபனாய் இருந்தால் அதிகார உத்தியோகமுடையவன்.

ஐந்தாமிடத்தை மூன்றுக்கதிபன் பார்த்தாலும், இருந்தாலும், நாள் சென்று பிள்ளைபிறக்கும்.

செவ்வா யிருந்தால் பிள்ளைகள்பிறந்து இறந்துபோம்:

கன்னி-ரிஷபம்-விருச்சிகம்-நாலு-ஐந்தாமிடமாகில் அற்[...] திரராம்.

ஐந்துக்கதிபன்,சந்திரன்-சுக்கிரன்-இராசியில் கூடினல் புத்திரயோ[...] ஐந்தாமிடத்தில் சனி சந்திரன் அங்காரகன் சூரியன் இவ[...] கூடிநிற்க மாமனுக்கு அரிட்டம்.

சுபர்கள் நோக்க துன்பமில்லை.

பூசநக்ஷத்திரம் இரண்டாம்பாதம் மூன்றும்பாதமாகில் தாயைப்பெற்ற அன்னைக்கு அரிட்டம் அப்படிக்கரிட்டம் வராவிட்டால் மாமனுக்கே நோயும் அரிட்டமும் உண்டு.

ஜன்மலக்கினத்தில் ஜன்மாதிபதியோடு ஐந்தாமிடத்ததிபன் நிற்கினும் அல்லது ஒருவர் ஸ்தானத்தில் ஒருவர் மாறிநிற்க பெருமையாக புதல்வர்கள் தீர்க்காயுளோடு பிறப்பார்கள்.

ஐந்தாமிடத்தில் சனியிருந்தால் குழவிக்கும் சூரியனிருந்தால்; தந்தைக்கும், சந்திரனிருந்தால் அன்னைக்கும், புதனிருந்தால் அன்னையின் சுற்றத்தாருக்கும் குருவிருந்தால் தந்தையின் சுற்றத்திற்கும், கருங்கோளிருந்தால் சுதனுக்கும், செவ்வாயிருந்தால் அம்மானுக்கும் தோஷமாம்.

குரு ஐந்தாமிடமேவ சந்தானம் மத்திபமாம்.

இலக்கினுதிபதியும் பஞ்சமாதிபதியும் தங்கள் ஸ்தானங்களி லிராமலும் சுபர்களால் பார்க்கப் படாமலுமிருந்தால்புத்திரரில்லை. அவர்கள் சுபாங்கிசம் பெற்றிருந்தால் புத்திரருண்டாம்;

பஞ்சமாதிபதிமூன்ருமிடத்திலிருந்தால்அற்பபுத்திரருண்டாம்

புத்திரஸ்தானுதிபதியேகனுய் புதன்வீட்டிலிருக்க புத்திரரில்லை.

நல்லோர் கூடிநிற்கில் புத்திரர்பிறந்து மரிப்பார்.

பாவர்கூடிநிற்கில் மகவில்லையாம்.

ரிஷபம் கும்பம் இலக்கினமாகப் பிறந்தவர்களுக்கு புத்திரரற்பம்.

ஏழாமிடத்தோன் உச்சநீச்சமின்றி களங்கமில்லாதிருந்தால் குடும்பத்துக்கு தலைமையான மனைவிக்கு புத்திரனில்லை.

ஏழாமிடத்தோன் உச்சநீச்சம்பெற்று அல்லது அந்த அங்கிசமாவது பெற்றிருந்தால் மேற்சொன்ன இளங்கொடியாளாகிய மனைவிக்கி புத்திரருண்டு.

ஐந்தாமிடத்தில் சூரியனேடு இராகு கூடியிருக்கில், தந்தைக்கும் மைந்தனுக்கும் பகைவரும்.

இலக்கினுதிபதியுடன் நாலாமாதிபன் சேர்ந்து உறவாகக் கூடியிருக்க தந்தைக்கு மைந்தர்கள் அதிகமுண்டு.

இலக்கினத்தில் அங்காரகனும், அவர்க்கேழில் சனியும், பன்னிரண்டாமிடத்தில் சூரியனும் நிற்கப் புத்திரரில்லை.

ஐந்தாமாதிபன் பாவனுய் ஏழாமிடத்திலும், ஏழாமிடத்தோன் பாவனுய் ஐந்தாமிடத்திலும், இருந்தால் புதல்வரில்லை.

ரஸ்தானுதிபதி யிருக்கும் அங்கிசத்தைத்தொட்டு இலக்கினம் வரைக்கும் எண்ணி கண்டலக்கம் எத்தனையோ அத்தனை புதல்வரைப் பெறுவர்.

லியோகமென்பது சந்திரனுக்கு ஏழில் சூரியனும், சனிக்கு ஏழில் புதனும், சூரியன் இரட்டைராசியிலிருக்க செவ்வாய் பார்க்கவும் இவை மூன்றும் அலியோகமாம்.

இலக்கினம் ஒற்றைராசியாகி அதில் சந்திரனிருந்தாலும், அல்லது ஒற்றை இரட்டைஇராசிகளில் சந்திரனிருக்க செவ்வாய்புதன் பார்த்தாலும், சந்திரன்வீடு சனிவீடு அங்கிசலக்கினமாகவந்தபேர்தும் அலியாம்.

(ஐந்தாம்பாவபலன்)

அட்டமாதிபதி ஐந்தாமிடத்தி லிருக்க ஐந்தாமிடத்தாதிபதி எட்டாமிடத்திலிருக்க, சுபர்பார்வை யில்லாதிருக்க, புத்திரரில்லை.
ஐந்தாமிடத்தோன் வியத்திலும் ஆறு எட்டிலும் இருக்க, மைந்தரில்லை.

புத்திர ஸ்தானம் சனிபுதன்வீடாக அந்தவீட்டை சனியும் குளிகனும் சேர்ந்துபார்க்க தத்துபுத்திரனுண்டு.
சுபர்கள் ஐந்தாமிடத்தில் நிற்க, ஐந்தாமிடத்துக் குடையவன் பார்வையில்லாவிட்டால் தத்துபுத்திரனுக வாழ்வான்.

மீனலக்கினத்திற்கு ஐந்தாமிடத்தில் குரு உச்சமானல் ஸ்திரீ பிரமை உண்டாகும்.
ஐந்தாமிடத்தோன் அங்காரகன் ஆறுமிடத்தோன் இவர்கள்மூவரை நேசமில்லாதவர் சேர்ந்தாலும் பார்த்தாலும் இவனுக்கு சத்துருக்களால் புத்திரபீடை வரும்.

நாலாமிடத்தில் பகைவர் நிற்க, ஐந்தாமிடத்தில் குருவும் சனியும்நிற்க வியஸ்தானத்திலும், பகைவர் வந்தால் புத்திரதோஷமுண்டு.
ஐந்தாமிடத்தில் இருப்பவர்கள் பாவிகளானுலும் பகைவர்களானுலும் தோஷம் உண்டு.

புத்திரஸ்தானதிபதியும் சந்திரனும் சுக்கிரனும்கூடி பெண்ராசியிலும், பெண் அங்கிசத்திலுமிருக்க இவர்களைப் பகைவர்கள்பார்த்தால் பெண்பிள்ளைகளையே பெறுவான்.

சந்திர லக்கினத்தையும், ஜன்ம இலக்கினத்தையும், ஐந்தாமிடத்தையும் சுபக்கிரகங்கள் பார்க்க புத்திரருண்டு.
சனி முதலிய பாவக்கிரகங்கள் பார்த்தால் புத்திரரில்லை.

புத்திரஸ்தானத்தில் இராகு கேது நிற்க, புத்திரருண்டு.
இலக்கினுதிபதி ஐந்தாமிடத்தில் நிற்க, ஐந்துக்குடையவன் வலிமைபெற வாலிபத்தில் புத்திரர் உற்பத்தியாகும்.

ஜென்மாதிபதி ஏழில் நிற்க, நாலாமாதியும் ஏழாமாதியும் ஒரு வீட்டில் நிற்க, பாம்புகளோடு இரண்டாமாதியும், இலக்கினத்தில் நிற்க, புத்திர தீர்க்கமுண்டு.

இரண்டா மிடத்தோன் ஐந்தில் நிற்க, மகவுண்டாம்.
ஐந்தா மிடத்தாதிபன் ஸ்புடத்தையும்,சூரியன் நின்ற ஸ்டபுத்தையும், கூட்டி அந்த ராசியில், குருவருங் காலத்தில் புத்திர உற்பத்தியாகும்,

சூரியன்நின்ற வீட்டிற்கு ஐந்து ஏழு ஒன்பது வியத்தில் சந்திரன் நட்பு ஆக்ஷி உச்சமாய் இருக்க - குருவும சந்திரனைப்பார்க்க தந்தைக்கு மேலான யோகமுள்ள புத்திரன் பிறப்பான்.

ஐந்தாமாதிபதி, இலாபாதிபதி,இவர்கள் சேர்ந்து மித்துருவாகயிருக்க சேதப்படாத புத்திரர் அநேகருண்டாம்,

அவரோடு எத்தனை கிரகம் சேருகிறதோ அத்தனை புதல்வர்உண்டாம்.

ஐந்தாமாதிபனோடு சூரியன் சேர்ந்தால் வெகுபுத்திரருண்டாம்.

ஐந்தாமாதிபனுடன் பாம்புகூடி எட்டில் நிற்க, தத்துபுத்திரருண்டாம்

ஐந்தாமாதிபனுடன் பாம்பும் சூரியனுங்கூடில்மிருகம்போலிருப்பான்.

மிதுனம் இலக்கினமாக, துலாத்தில் அங்காரகனிருந்திட, இவன் தந்தைக்கு விரோதமாகி பொல்லாத வஞ்சகனுவன்.

கிரகங்கள் இப்படி நிற்காதிருக்கில், மேற்சொன்னவர்களுடன் உறவாககூடி வாழ்ந்திருப்பர்.

பத்தாமிடத்ததிபனும், ஐந்தாமிடத்ததிபனும், மித்துருவாகி சுபக்கிரகங்களுமாகி சுபர்வீட்டில் கூடிநின்றால் வருத்தமின்றித் தனந்தேடி வாழ்வன்.

ஐந்தாமிடத்தாதிபனும்,அங்காரகனும்கூடி ஐந்தாமிடத்தில் நிற்க சனி நோக்க இவன் தத்துபுத்திரனுவான்,

ஐந்தாமிடத்ததிபன் அங்காரகன் சனியம்சத்தில் சனிபார்க்க நின்றால் அன்னியர்களால் வளர்க்கப்படுவன்.

சூரியன் ஐந்தாமிடமேறி சனி யம்சத்தில் நின்றால் புத்திரரில்லை.

ஐந்தாமிடத்ததிபதியும் சூரியனும்சனியினுடைய அங்கிசமேறி சனி பார்க்க,ஐந்தாமிடத்தில்நின்றால் பரவிஷயத்தில்புத்திரருண்டு.

ஐந்தாமிடத்தில் அங்காரகன் சனி அங்கிசமாகவும் நிற்க, இவன் உத்தம புத்திரனுவான்.

இலக்கினத்தில் சந்திரன் யிருக்க, ஆறாமிடத்தில் சுக்கிரன் நிற்க இவனுக்கு புதல்வன் யேகனும்.

சூரியனும் சந்திரனுங்கூடி கேந்திரத்திலிருக்க பிதுருக்குகடினனுவன்.

உபயராசியாகி சூரியனும் சந்திரனும் கூடிநிற்கில், பிதாவுக்கு மரணகண்டம் இரண்டு வரும்.

சுபக்கிரகங்கள் ஐந்தாம்வீட்டைப் பாராதிருக்க அதில் ஐந்துக்குடையவனோடு இராகு கூடியிருக்க இவனுக்கு நாகசாபத்தினால் புதல்வரில்லை. நாகப்பிரதிஷ்டைசெய்ய மைந்தருண்டு.

கேந்திரகோணத்தை சுபக்கிரகங்கள் பார்வையில்லா திருக்குமாயினும் மைந்தரில்லை. ஜெப ஓமஞ்செய்ய மைந்தருண்டு.

(ஐந்தாம்பாவபலன்)

ஐந்தாம் வீட்டாதிபனுடன் ஆரூமிடத்தோன் கூடி சுபக்கிரகம் பாரா திருக்க இவனுக்கு சத்துருவின் சாபத்தினுல் மகவில்லை.

ஐந்தாம் வீட்டில் ஐந்தாமாதிபதி இருக்க இவரை பாவக்கிரகங் கள் பார்க்குமாஞல் தெய்வசாபத்திஞல் புத்திரரில்லை ஓமகர் மம் செய்யவேண்டும்.

நாலாமிடத்தில் தீயோர்கள் நிற்க, ஐந்துக்கதிபனேடு சனியுங்கூட, பன் னிரண்டாமிடத்தில் பாவக்கிரகங்கள்பற்றிநிற்க, இவனுக்கு தாய்சாபத்திஞல் புதல்வரில்லை. ஓமங்கள் ஜெபங்கள் தான ங்கள் அனேகமாகச் செய்தவர்களுக்கு மைந்தருண்டு,

இரண்டாமிடத்திலும், பன்னிரண்டாமிடத்திலும், சுபர்கள் நிற்கஅது பாவர் மனையாகில் பாக்கியாதிபதி வியஸ்தானத்திலிருக்க, ஐந் தாமிடத்தில், இலக்கிஞதிபதி பாவர்களோடு கூடிநின்று அஸ் தமனமாகில் புத்திரரில்லை.

ஜென்மத்திலும், வியத்திலும், எட்டாமிடத்திலும், பாவக்கிரகங்கள் சனி செவ்வாயோடு நின்ருல் புதல்வரில்லை

புதனும் சுக்கிரனும் பத்து எட்டிலாவது நிற்க ஐந்தில் எட்டுக்குடை யவனும் ஜென்மத்தில்பாவர்களும் நின்ருல் புத்திரரில்லை.

புத்திரகாரகனுடைய ஸ்புடத்தையும், ஐந்தாமிடத்ததிபனுடைய ஸ்பு டத்தையும் கூட்டவந்த இராசியில் வியாழன் வருங்காலத தில் மதலைதோன்றும மேஷமுதலாக கூட்டிவந்தராசி யங்கி சமவரை யெண்ணிப்பார்க்கில் பாபர் வருங்காலத்தில் புத்திர சேதமுண்டாம்

ஆருமிடத்தில் சந்திரன்நிற்கில் ஒருகுழந்தைபிறக்கும் அதுவும் பிழை ப்பதரிதாம்.

ஒன்பதாம் வீட்டுக்குடையவன் குருவாகவர சனி அவரைநோக்க புத ஞேடு சூரியன்கூடி எவ்விடமிருந்தாலும் குழந்தையை அன் னியர் வளர்ப்பார்.

ஐந்தாமிடத்திற்கதிபன் பாவஞகி ஆறு எட்டு பன்னிரண்டில் குரு வோடு நின்ருலும், அல்லது சுபர்கள்பார்வைபட்டாலும் பன் னிரண்டு ஆண்டில் நாசம் வரும்.

புத்திரஸ்தாஞதிபதியும், ஏழாமாதிபதியும, கேந்திரகோணத்தில் பல மாக சேர்ந்திருக்க ஆருமிடத்ததிபன் இவர்களோடு சேர்ந்தா லும் அல்லது பார்த்தாலும், சுத்தமாகப் புத்திரரில்லை.

இதுமுதல் இவ்வைந்தாம்பாவத்தில் சந்தான தீபிகையின் கருத்துகளை நூதனமாய்ச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இலக்கினாதிபதியும் ஐந்தாமதிபதியும் ஏழாமதிபதியும் குருவும் வலிமை குறைந்திருக்கப் புத்திரப்பேறில்லாதவனேயாவான்.

இலக்கினாதிபதியும் புத்திரத்தானாதிபதியும் களத்திரத்தானாதிபதியும் புத்திரகாரகனாகிய குருவும்பெலம்பெற்றிருப்பது புத்திரோற்பத்திக்கு அனுகூலமென்க.

இலக்கினம் ஐந்து ஏழு ஆகிய இம் மூன்றுதானங்கள் பெலம்பெற்றிருப்பது புத்திரோற்பத்திக்கு அனுகூலமாம்.

பகை நீசஸ்த்தானங்களில் நின்றல் பாடடைதல் பாபக்கிருகதிருஷ்ட்டி பெறுதல் அவர்களோடு சேருதல் முதலியனவென்றறிக.

ஐந்தாமிடத்திற் கெட்டகிரகங்களிருக்க ஐந்தாமதிபதி நீசஸ்தானத்திருக்க இவர்களைச் சுபக்கிரகங்கள் பாராதிருக்க மலடனேயாவான்.

நீசமுதலிய தோஷங்களால் பெலவீனமடையாதசுபர்கள் ஐந்தாமிடத்திலிருக்க ஐந்தாமதிபதிஉச்சத்தானத்திலிருக்க அவர்களைசுபக்கிரகங்கள் நோக்கினல் புத்திரயோகமாம்.

தனுசிலாவது மீனத்திலாவது கலைநிறைந்தசந்திரனிருக்க ஐந்தாமிடத்திற் பாபக்கிரகங்களிருக்க இவர்களையுஞ் சந்திரனையும் சுபக்கிரகங்கள் பாரதிருக்க மலடனே.

புத்திரத்தானத்தில் பாவக்கிரகங்களிருக்க புத்திரத்தானாதிபதி பாவக்கிரகங்களுக்குநடுவே சஷ்டாஷ்டம விய்யத்தானங்களிற் பலங்குறைந்து சுபக்கிரகங்களோடு சேராமலும் அவர் திருஷ்டி பெறுமலு மிருக்கப் பிறந்தவன் மலடனே.

சுபக்கிரகங்கள் புத்திரத்தானத்திருக்கப் புத்திரத்தானாதிபதி சுபக்கிரகமத்தியிற் சுபக்கிரகசகிதமாதல் திருஷ்டியாதல் பெற்றுக் கேந்திரலாபாதி சுகஸ்தானங்களில் பெலமுற்றோங்கி யிருந்தால புத்திரயோகமாம்.

புத்திரத்தானாதிபதி பாவக்கிரகங்களோடு கூடியிருக்கப் புத்திரஸ்தானாதிபதியையும் புத்திரத்தானத்தையும் பாவக்கிரகங்கள் பார்க்க மலடனே.

புத்திரத்தானாதிபதி சுபக்கிரகங்களோடுகூட அப் புத்திரத்தானாதிபதியையும் புத்திரத்தானத்தையும் சுபக்கிரகங்கள் பார்க்க புத்திரயோகமாம்.

எட்டாமிடத்ததிபதி புத்திரஸ்தானத்திலிருக்க புத்திரத்தானாதிபதி எட்டாமிடத்திலிருக்க இவர்க ளிருவரையும் சுபக்கிரகங்கள்பாராதிருக்க புத்திரர்கள் பிறந்து பிறந்து சேதமடைவர்.

(ஐந்தாம்பாவபலன்.)

புத்திரகாரகனுகிய குரு பாபக்கிரகங்களின் நடுவேயிருக்க புத்திரத் தானுதிபதி பகை நீசம் *பாடுமுதலியவற்ருல் தனது பெலம் குறைந்திருக்க இவ்விருவருக்கும் சுபக்கிரகங்களின் சேர்க்கை யுநோக்கமும் இல்லாதிருக்க மக்கள் உயிர்வாழாதிறப்பார்கள்.

சுபக்கிரகங்கள் சகிதமேனும் திருஷ்டியேனும் பெற்றுக் குரு வும் புத்திரத்தானுதிபதியும் முறையே சுபர்மத்தியிலும் பெல மேறியுமிருப்பது புத்திரயோகம்

புத்திரத்தானுதிபதி பகை நீசஸ்தானங்களிலிருந்தாலும் பாடடைந் தாலும் சஷ்டாஷ்டமவியத்தானுதிபர்களோடு சேர்ந்தாலும் புத்திரஸ்தானத்தையேனும், அத்தானுதி பதியையேனும், சுப க்கிரகங்கள்பார்க்காமலும் மகரமாவது, மீனமாவது, புத்திரத் தானமாகிஅதில் குரு விருக்க,அக்குருவை சுபக்கிரகங்கள் பா ராதிருக்க,புத்திரர்கள் இறக்கப் புத்திரசோப மடைவன்,

தனுசு புத்திரத்தானமாகி, அதிற் புத்திரகாரகனுகிய, குரு விருக்க உத யலக்கினத்தைப் பாபக்கிரகங்கள்பார்க்கப் பிறந்தோன் ஒருபுத் திரன் அல்லது இரண்டுபுத்திரர்களைப் பெற்று வாழ்வனேயன் றி பல புத்திரர்களைப்பெற்று மகிழும் பாக்கியமில்லாதவனே.

புத்திரத்தானுதிபதி கலைநிறைந்த சந்திரனையாவது சுக்கிரனையாவாது கூடி தான் வலிபெறுதற் கனுகூலமாகிய, கேந்திரத்தானத் திலிருக்க பிரகஸ்பதி பாபக்கிரகங்களோடுசேர புத்திரத்தான த்தைப் பாபக்கிரகங்கள் பார்க்கஜனனமானவர்க்குஆண்மக்கள் சுருக்கமும் பெண்மக்கள் பெருக்கமு மடைந்து வாழ்வன்.

புதனுக்கும் குருவுக்கும், லக்கின கேந்திரமும், சந்திரனுக்கும் சுக்கிர னுக்கும் நீர்கீழ்ஆகிய சதுர்த்தகேந்திரமும், சனி-ராகு-கேதுக் களுக்கு பாடாகிய சப்தமகேந்திரமும், சூரியனுக்கும் அங் காரகனுக்கும்உச்சியாகிய தசமகேந்திரமும், வலி பெறுதற் கனுகூலமாகிய கேந்திரங்களாம்.

சுக்கிரன் நீர்க்கீழே யன்றி உதையமும், சனிக்குப்பாடேயன்றி உச்சி யும் அனுகூலமென்பதும் ஒரு சாரூர்கொள்கையாம்.

புத்திரத்தானுதிபதி ஸ்திரீ கிரகங்களோடு கூடி வலிபெறுதல் பெண் மகவுவிருத்தியும் புத்திரகாரகனும் புத்திரத்தானமும், வலிமை குறைதல் ஆண் மகவு குறைவுமாகும்.

---

* பாடு—லெக்கினத்திற்கு யேழாமிடத்துக்குப் பெயர்.

புதனும்-குருவும் புத்திரத்தானதிபதியைக் கூடினும் கேந்திர ஸ்தானத்திற் பெலமேறி யிருக்கும் சந்திரனோடு அங்காரகன சனி ராகு இவர்களும் புத்திரஸ்தானத்தைப் பார்த்தாலும் பிறக்கும் மக்கள் களில் ஆண்மக்கள் மனமகிழும்படி நீடித்து வாழ்வார்கள் பெண்மக்கள் வாழாது இறப்பர்.

புத்திரத்தானம் புதனுக்கும் சனிக்கும்உடைய இராசிகளுள் ஒன்றாக சனியாவது அல்லது மாந்தியாவது அதில் பெலம்கொண்டு யிருந்தாலும் அல்லது அதைப்பார்த்தாலும் புத்திரத்தானத்தில் நல்ல சுபக்கிரகங்கள் வலிமைபெற்று யிருந்தாலும், புத்திரத்தானதிபனே சுபக்கிரகங்கள் பார்க்காமலிருந்தாலும் தான் புத்திரர்களைப் பெறாது, பிறர்புத்திரரைத் தத்துபுத்திரராகப் பெற்று மகிழ்வன.

கடகமே புத்திரத்தானகமாக அதில் குருயிருந்தாலும் அல்லது பூரணசந்திரன் இருந்தாலும் புத்திரத்தானத்தில் குருவோடு சுக்கிரனுங்கூடி ஆக்ஷிஉச்சம் பெற்றிருந்தாலும் அல்லது சுக்கிரன் பூரணச் சந்திரனோடுங்கூடி நட்பு ஆக்ஷி உச்சங்களுள் ஒன்று பெற்று பெலமேறி யிருந்தாலும், புத்திரர்களையே மிகவும் பெற்று மகிழ்வன்,

ஸ்திரீராசியாகிய கடகம் குருவுக்கு உச்சக்ஷேத்திர மாகையால் அது புத்திரத்தானமாகவேஅக்குருவுக்குப் புத்திரகாரகத்துவபங்கம் வருதலாலும் சந்திரனுக்கு அது சுவக்ஷேத்திரமாகையால் சந்திரன் தேகசுக காரகத்துவ முடைய ஸ்திரீகிரகமாகையாலும் கடகம் புத்திரத்தானமாக அதில் குருயிருப்பதும் சந்திரனிருப்பதும் புத்திரதானத்திற் புத்திரகாரகத்துவ பங்க மெய்திய குருவோடு போககாரகனும் ஸ்திரீ கிரகமுமாகிய சுக்கிரன் உச்ச சுவ க்ஷேத்திரத்தான பெலம் பெற்றிருப்பதும் அச்சுக்கிரன் மேற்சொலலிய சந்திரனோடுங் கூடிப் புத்திரதானத்தில் உச்ச சுவமித்திரு க்ஷேத்திரத்தான பெலம் பெற்றுயிருந்தாலும் புத்திரிவிருத்திக்கு ஏதுவாம்,

மேஷமாவது விருச்சிகமாவது, புத்திரத்தானமாக அதில் புதனும் குருவும் சுக்கிரனும் கூடி பெலம் பெற்றிருந்தாலும் அல்லது அதைப் பார்த்தாலும் புத்திரத்தானதிபதி பெலம பெற்று புத்திரத்தானத்திற்கு அனுகூலமாகிய தானமொன்றிலிருந்தாலும் லக்கினதிபதியும் அப்புத்திரத்தானதிபதியோடு சேர்ந்துபுத்திரத்தானத்தைப் பாபக்கிரகங்கள்பாராமலுமிருந்தாலும்தரும

(ஐந்தாம்பாவபலன்.)

சிந்தனையுள்ள வெகுபுத்திரர்களைப் பெற்றும்கிழ்ந்து வாழ்வன்.

தனுசு உதயமாக மேடத்தில் புதன் சுக்கிரன் குருவுமிருக்க கடகம் உதயமாக விருச்சிகத்தில் புதனும்சுக்கிரனும் குருவுமிருக்க தனுசு உதயமாக அதில் குருவும் துலாத்தில் புத சுக்கிரருமிருந்துமேடத்தைப்பார்க்க தனுசுலக்கினமாகச் சிங்கத்திற் குருவும் துலாத்தில் புத சுக்கிரரும் யிருந்து மேடத்தைப் பார்க்க கடகம் உதயமாக அதில் குருவும் ரிஷபத்தில் புத சுக்கிரரும் இருந்து விருச்சிகத்தைப் பார்க்க கடகஉதயமாக மீனத்தில் குருவும் ரிஷபத்தில் புத சுக்கிரரும் இருந்து விரிச்சிகத்தைப் பார்க்க வெகுபுத்திரயோகங்களாம்.

மீனவிருச்சிகம், தனுசுசிங்கம்மேடம் ஐந்தினுள் ஒன்று புத்திரதானமாக, அதில் அங்காரகன் யிருக்க குரு அங்காரகனைப்பார்த்தாலும் புத்திரத்தானுதிபதி புத்திரப்பேற்றிற்கு அனுகூலருகிய சுபக்கிரகங்களோடு சேர்ந்தாலும் அவர்கள் திருஷ்ட்டி பெற்றாலும் அல்லது சுபக்ஷேத்திரத்திற் சுபக்கிரகமத்தியில் சுபர் திருஷ்ட்டி பெற்றிருந்தாலும் வெகுபுத்திரர்களைப்பெற்று மகிழ்வன்.

புருஷக்கிரகங்களுக்குரிய ராசிகளுள் ஒன்று புத்திரத்தானமாக அதிற் புருஷகிரகமாகிய அங்காரகனிருந்து புத்திரகாரகனுகிய குருவின்பார்வை பெறுதலும் வெகுபுத்திர பேற்றிற்கனுகூலமாம்.

புத்திரத்தானுதிபதி புத்திரத்தானத்திற் பெலம்கொண்டு யிருப்பதும் புத்திரத்தானுதிபதி போகத்தானத்தி லிருக்க லக்கினத்திற் பாவக்கிரகங்கள் இருந்தாலும் பார்த்தாலும் குரு புத்திரத்கானத்திலாகிலும் போகத்தானத்திலாகிலுமிருக்க லக்கினத்திற்கு பாவக்கிரக பார்வையில்லாதிருக்க தன்நெஞ்சிலன்பு மிகுவதாக்கேதுவாகியகுணங்களமைந்த சற்புத்திரனைப்பெற்றுவாழ்வன்

புத்திரத்தானுதிபதியாவது புத்திரகாரகனாவது புத்திரயோகத்தானங்களில் இருப்பது புத்திர பாக்கியத்திற்கும் லக்கினம் பெலம் கொள்ளுதல் புத்திரரின் சற்குணவிருத்திக்கும் அனுகூலம்.

புத்திரத்தானுதிபதி பெலமேறிச் சுபக்கிரகமத்தியிலிருக்க சுபக்கிரகங்கள் அவனைப்பார்க்க தனுசு, விருச்சிகம், மீனம், மேஷம், சிங்கம் இவைகளுள்ஒன்று புத்திரத்தானமாக அப்புத்திரத்தானுதிபதி புருடாங்கிசம் பெற்றுப் புருஷராசியில் பெலம் பெற்று இருக்க தனக்கு கீர்த்தியுண்டாக்கும் சற்புத்திரர்பலருண்டு.

முதல்யோகத்தில் புத்திரத்தானுதிபதி பெலமேறுதல் புத்திரவிர்த்தியையும் சுபக்கிரகமத்தியிற் சுபர்திருஷ்ட்டிபெற்றிருப்பதும் சற்குண விர்த்தியையும் இரண்டாம் யோகத்தில் புருடகிரகராசி

புத்திரத்தானமாவதும் அப்புத்திரத்தானுதிபதிபுருடாங்கிசம் பெற்று புருடராசி யிலிருப்பதும் அவ்விரண்டையும் குறிக்கப்பட்டது.

இலக்கினுதிபதியும் புத்திரத்தானுதிபதியும் குரு க்ஷேத்திரத்தி லிருந்தாலும் அல்லது ஒருவரையொருவர் பெலமாகப்பார்த்தாலும் குரு புத்திரத்தானுதிபதியோடுங்கூடிப் புத்திரத்தானத்திலிருப்பினும் அதைப்பார்த்தாலும் சற்புத்திரனைப் பெறுவன்.

இலக்கினுதிபதியும் புத்திரத்தானுதிபதியும் ஒன்றுகூடி யிருப்பதும் அல்லது ஒருவரையொருவர் பார்ப்பதும் புத்திரத்தானத்தில் லக்கினுதிபதியுங் குருவுங் கூடியிருப்பதும் அல்லது அவ்விருவரும் ஒருவரை யொருவர் பார்ப்பதும் இன் நான்கும் சர்ப்புத்திரயோகங்களுள்ளும் லக்கினுதிபதியாற்சற்குணவிர்த்தியும் புத்திரத்தானுதிபதி புத்திரகாரகர்களாற் புத்திரவிர்த்தியும் குறிக்கப்பட்டது.

இலக்கினுதிபதியும் புத்திரத்தானுதிபதியும்லக்கினத்தைப்பார்த்தாலும் புத்திரத்தானுதிபதி நட்பு ஆட்சி உச்சராசி அங்கிசம் களிற் பெலமேறியிருந்தாலும் சர்புத்திரனைப்பெற்று மகிழ்வன்.

புத்திரத்தானுதிபன் பகை நீசராசி அங்கிசங்களிலிருக்க புத்திரர்கள் பொல்லாதவஞ்சனையுடைய துர்குணமுள்ளோராவர்.

கடகம் இடபம்,துலாம்ராசிகளுள்ஒன்றுபுத்திரத்தானமாக அத்தானுதிபதி ஸ்திரீராசிஅங்குசங்களிலிருக்க புத்திரிகளையேபெறுவன்.

சூரியன் குரு,அங்காரகன் இவர்களில் வொருவர் புத்திரத்தானுதிபர்களாய்ப் புருஷராசி அங்குசங்களில் நிற்பாராகில் புத்திரர்களே உற்பத்தியாவார்கள்.

புத்திரத்தானம் பாபக்கிரகதிருஷ்டி யில்லாதிருக்க புத்திரத்தானுதிபதி அதி உச்சம்பெற்று புருஷராசி அங்குசம் பெற்றசுபக்கிரகங்கள அப்புத்திரத்தானுதிபதியைப் பார்க்க, புத்திரர்களே பிறப்பார்கள்.

புத்திரத்தானத்திற்கு பாவக்கிரகநோக்கு இல்லாமல் புத்திரத்தானுதிபதி அதி உச்சத்தான பலமடைந்து புருஷராசி அங்குசம் பெற்ற சுபக்கிரகங்களின் பார்வையுண்டாக புத்திரர்களே பிறப்பர்.

அதி யுச்ச பாகைகளாவன சூரியனுக்கு மேடத்திற் பத்தாம்பாகையும், சந்திரனுக்கு இடபத்தில் மூன்றும் பாகையும், புதனுக்கு கன்னியிற் பதினைந்தாம் பாகையும், குருவுக்குக் கற்கடகத்தில் ஐந்தாம்பாகையும், சுக்கிரனுக்கு மீனத்தி ல் இருபத்தேழாம் பாகையும்,சனிக்குத் தனுசில இருவதாம் பாகையும் அதியுச்ச பாகைகளாம்,

புத்திரத்தானுதிபதி சஷ்டாஷ்டம வியத்தானங்களுள் ஒன்றிலிருக்க

(ஆரும்பாவபலன்.)

அப்புத்திரஸ்தானதிபனை சுபக்கிரகங்கள் அதிக பலமடைந்து பார்க்க தீர்க்காயுசும் சரீரபலமுமுள்ள புத்திரர்களே வந்து பிறப்பார்கள்.

புத்திரகாரகனுகிய குருவும் புருடராசி அங்குசம் பெற்ற சந்திரன் முதலியோரும் நல்லவராவர்.

இராகு புத்திரத்தானத்திலிருக்க அல்லது புத்திரத்தானதிபனோடு சேர்ந்து சுபக்கிரகதிருஷ்டி அந்த ராகுவுக்கு இல்லாதிருக்க, நாகசாபத்தால் புத்திரநாசம் உண்டாம்.

இலக்கினத்திலாவது ஐந்தாம் ஒம்பதாம் இடங்களிலாவது சனியாவது மாந்தியாவது பெலங்கொண்டிருக்க, சுபக்கிரகதிருஷ்டி அவருக்குஇல்லாதிருக்கபிதுர்சாபத்தாற்புத்திரநாசமுண்டாம்

அங்காரகன் புத்திரத்தானத்திலிருக்க, அங்காரகனோடு சத்துருத்தானதிபதி சேர அவ் விருவருக்கும் சுபக்கிரகதிருஷ்டி யில்லாமலிருக்க சத்துருக்கள் செய்த பில்லி சூனியமுதலிய க்ஷுத்திரப் பிரயோகங்களாற் புத்திரநாசமுண்டாம்.

புத்திரத்தானதிபதி புத்திரத்தானத்திலிருக்க சுபக்கிரகங்கள் பாராதிருக்க பாவக்கிரகங்கள் பார்க்க தேவர்களிட்ட சாபத்தால் புத்திரநாசம் உண்டாம்.

மாதுருஸ்தானத்தில் பாவக்கிரகங்களிருக்க புத்திரத்தானதிபதி சனியோடு சேர்ந்திருக்க இரண்டாம் ஆறுமிடங்களில் பாவக்கிரகங்களிருந்தால் அவன் தாய்செய்த பாவத்தால் புத்திரநாசமுண்டாம்.

பிதுர்ஸ்த்தானத்தில் பாவக்கிரகங்களிருக்க புத்திரத்தானதிபதி சனியோடு சேர்ந்திருக்க குளிகன் திரிகோண ராசிகளில் ஒன்றிலிருக்க பிதுர் சாபத்தால் புத்திரநாசமுண்டாம்.

திரிகோண ராசிகளாவன; லக்கினமும் அதற்கு ஐந்தாம்ராசியும் அதற்கு ஐந்தாம்ராசி ஆகிய ஒன்பதாம் ராசியுமாம்.

ஐந்தாம்பாவபலன்

முற்றிற்று.

ஆரும்பாவபலன்.

ஆறுமிடத்தில் சூரியனிருந்தால், அல்ப்பபுத்திசத்துருஜெயம் புத்தியுண்டு பிரபலக்கீர்த்தியுண்டு சவுக்கியன் சேனதிபதியாயிருப்பான் பெலனுண்டு ராஜப்பிரியன் சத்துரு விரோதியாயிருப்பான்.

சந்திரனிருந்தால், தரித்திரன் பெண்சாதிமிகுதியுண்டு அதிக தாமசன் மதுபானன் விரோதியுண்டு அன்னிய மூலிப்பால்

குடித்து வளருவான் விசனமடைவன் பிரத்திம்னுஷாள்பேரில் பார்வையுண்டு அலட்சியம் பேசுவான் நினைவு மறதியாயிருப்பன் மேதகன் உத்தியோக பெலமுண்டு.

செவ்வாயிருந்தால் பெண்சாதிபீடை அற்பாயுள் தெண்டமுண்டு சீக்கிரம் விவாகமிரண்டு சுகசீவனமுண்டு சத்துருவிரோதம் பாராக்கிரமமுடையவன்.

புதனிருந்தால், ருஜபூஷணமுண்டு வித்தை அல்ப்பம் டம்பமுடையவன் கலகப்பிறியன் சத்துரு ஜெயம் மாதுரு ஆனி குஷ்டரோகம் திரவியநாசம் சத்துருவிரோதம் பித்தத்தினுல் துக்கமுடையவன்.

வியாழனிருந்தால், சத்துரு ஜெயம் சாஸ்திரவிர்த்தி பவுத்திரரோகம் ரெணசரீரம் பிரியன் வயற்றில் அக்கினிமந்த முடையவன் ஞானயீனன் தனயீனன்.

சுக்கிரனிருந்தால், சத்துருஜெயம் புத்திமான் பவுத்திரரோகம் பரஸ்திரீ சம்போகவான் பெண்சாதி யீனன் லுத்தன் சோரபயம் சத்துருநாசம் வியாதியால் பீடை.

சனியிருந்தால், அல்பப்பிணி களவு சத்துரு ஜெயம் தனவிர்த்தி வெகுபுத்திரனுண்டு பரிசுத்தனுயிருப்பான் ருஜப்பிறியன் சுபக்கிரகங்கள் கூடிநிற்க சரீரத்தில் வடிவுண்டு சூரியன் சனிகூடில் ஜாதியில் விரோதமுண்டு.

இராகுகேதாவதிருந்தால் ஸ்திரீபிரசையுண்டு பலஸ்திரீவிரோதமுண்டு.

ஆறுமிடத்தில் சூரியனுவது செவ்வாயாவதிருந்தாலும், அல்லது கூடியிருந்தாலும் அவனுக்கு சத்துருவும் வியாதியும் இல்லை

சந்திரன் ஆறு எட்டு பன்னிரண்டிலிருக்க, நாலில் ஐந்தில்பாபரிருந்து அவர்களை சுபர்பாராமலிருந்தால் அவன் பிறவிக்குருடனுவான்.

லக்கினுதிபனும் ஆறுக்கு அதிபனும்ஆறு எட்டு பன்னிரண்டிலிருந்து இவர்களுடன் பாபர்கூடினுல் மரணபரியந்தம் ரோகியாக இருப்பான்.

லக்கினத்துக்கு ஆறுஎட்டுக்கு அதிபன் இராசிக்கதிபனுனுல் தேசாந்திரம் போய்வருவான்.

ஆறுக்கதிபனும் இராசிக்கதிபனும் ஒரு இராசியிலிருக்க அது அவர்களுக்கு பகைவீடாயிருந்து இவர்களை செவ்வாய் பார்த்தால் அல்லது கூடினுலும் அவன் கோள்சொல்லி குடிகெடுக்க வல்லவனுவான்.

ஆறுக்கதிபன் சுபனுக பாபர் பாராமல் கேந்திரம் திரிகோணங்களில் நட்பிலவாகிருந்தாலும் ஆறிலிருந்தாலும் அவன் [illegible] ரவியாதி

(ஆரும்பாவபலன்)

யுடையவனுகயிருப்பான் சத்துருவால் கடன்ருணத்தால் கஷ்டப்பட்டு பாவியாகயிருப்பான்.

பாவிகள் சம்பந்தப்பட்டாலும் இந்த தோஷமில்லை.

ஆறு எட்டில் செவ்வாய் சூரியனிருந்தால் விவசாயம் நிலம் பூமி உண்டானவனுகயிருப்பான்.

ஆறுமிடத்தில் நல்லோர்கள் நின்ருல் இவன் தாயாதி விவகாரங்களில் கஷ்டப்பட்டு ராஜாங்கமேறியும் துக்கப்படுவேன்.

ஆருமிடத்தில் சுபக்கிரகங்கள் வலிமைபெற்றிருக்குமானுல் தன்வம்சத்தோர்களை மெலியச்செய்விப்பதுடன் புவியில் விவகாரவிஷயங்களைத்தெரிந்து அதை முடிவுசெய்யவல்லவனுவான்:

ஆருமிடத்தில் கடினமாகிய தீக்கோள்நிற்க இவன் துட்டர்களுக்கு துஷ்டனுகவும் தன்னை எதிர்த்தவர்களுக்கு வலிமைபொருந்திய எதிரியாகியுமிருந்து யாவராலும் புகழப்படுவான்

ஆருமிடத்தில் பாவககிரகங்கள் வலிமைபெற்றிருக்குமானுல் யாவருங் கண்டு அச்சங்கொள்ளும்படிதீரனுகவும் சத்துருக்கள் கைகூப்பி நிற்கவும் செல்வமுண்டாகி வாழ்வான்.

இராகு ஆருமிடத்தில் நிற்க இவனுக்கு விலங்குமுதலிய யாதொரு தடையும் நேரிடாது தேள்முதலிய பலவிஷங்களும் இவனைத் தீண்டாது பலபேர்களும் போற்றும்படியாக கீர்த்திமானுகவிருப்பான்.

ஆருமிடத்ததிபன் பாவனுகி கேந்திரத்திலிருக்க, அவரை சுபக்கிரகம் பார்க்க இவன் உலகத்தில் யாவராலும் போற்றிசெய்யப்பட்டு கொடியோர்களுக்கு மிண்டனுகவும் இருப்பான்.

ஆருமிடத்ததிபனும் ஜென்மாதிபதியும் சூரியனுடன் கூடினுல் சுரத்தினுல் கெண்டம்வரும்

சந்திரனுடன்கூடினுல் ஜலகண்டம்வரும்.

அங்காரகனுடன் கூடினுல் ஆயுதகண்டம்வரும்.

சனியுடன்கூடினுல் சோரர்களால் கண்டம் வரும்.

சுக்கிரனுடன் கூடினுல் ஸ்திரீகளாற் கண்டம்வரும்.

அரவு கூடில் விஷத்தினுல் கண்டம்வரும்.

ஜென்மாதிபதியும் நாலாமாதிபதியும் அட்டமாதிபதியைக் கூடினுலும் அல்லது ஆருமிடத்திலிருந்தாலும் அஜீரணத்தால் கண்டம்.

இலக்கினுதியோடும் வாகனுதியோடும் சனி கூடில் விஷபக்ஷணத்தால் கண்டம்வரும்:

நாலாமாதியுடன் சனிசேர்ந்து ஜென்மலக்கினத்தில் நிற்க விஷபக்ஷணத்தால் கெண்டம்வரும்.

இலக்கினாதியோடும் வாகனாதியோடும் பாம்பு கூடில், பந்தனமான மரணம்வரும்.

இலக்கினாதிபதிநல்லோர்வீட்டில்நிற்க, ஏழாமிடத்ததிபன்இலக்கினத்தில் நிற்க மாதா பிதா இருவருக்கும் மரணத்தை உண்டு பண்ணும்.

ஆறுமதிபனோடு பாவர் கூடி இலக்கினத்திலும் எட்டாமிடத்திலும் நிற்க, சித்தப்பிரமைகொண்டு அங்கத்தில் விரணமுண்டாகும்

அப்படி சேர்ந்தவர்கள் அவரவர் ஸ்தானங்களிலும் எட்டிலுமிருக்கில் மேற்கூறிய பிணியென்று சொல்லவும்.

ஆறுமிடத்தில் சுபக்கிரகங்கள்மேவ ஆறுமிடத்ததிபன் கேந்திரத்திலிருக்க சுபக்கிரகங்கள் பார்த்திடின் பெரியோர்களுக்கு உபகாரங்கள்செய்து நலியில்லாமல் வாழ்வன்.

தீக்கோளாகினும் நன்மையடைந்தால் எதிரிகளுக்கு எதிரியாகவேயிருப்பான்.

சூரியனும் சந்திரனும் ஒருவர்க்கொருவர்பார்க்கில்பிறந்தசேய்அலியாம் சனியும் புதனும் அவ்வாறு நோக்கிடில் அலியாம்.

சூரியனுடன் கூடி சுக்கிரன் வீட்டிலிருக்க சந்திரன் ஆண்அங்கிசத்திலிருக்க பிறந்தசேய் அலியாகும்.

ஜென்மத்தில் சந்திரனிருக்க, சூரியன் புதன் சந்திரன் மூவருமிரட்டைராசியிலிருக்க இம்மூவரையும் அங்காரகன்பார்க்க அலியாவான்

ஆறுமிடமுடையவன் குரூரக்கிரகமாக லக்கினத்திலிருக்க அல்லது அஷ்டமத்திலிருக்கச் சரீரவிரணமாக யிருப்பான்.

ஐந்தாமிடமுடையவன் ஆறுமிடத்தில் அந்தத்தானாதிபதியுடனே கூடியிருக்க சத்திருகுன்மம்வரும்.

ஏழாமிடத்திலாதித்தன் நிற்க இலக்கினாதிபதி எட்டிலிருக்க வியாதிபதி ஆறில் நிற்க சோரஸ்திரீமருந்தினால் சத்திருகுன்மம் வரும்.

சந்திரனும் புத்திரத்தானாதிபதியும் ஆறில் நிற்க ராகு கேதுவுடனே கூடக் குஷ்டரோகத்தினால் மரணம்.

லக்கினாதிபதி நாலில் நிற்க ஆறுமிடமுடையவன்கூட அல்லது பார்க்க ராகு கேது லக்கினத்திலிருக்கச் சோகைரோகமும் நொறுக்குநோயு முண்டாம்.

புதன் ராகுவுடனே கூடி ஆறிலே நிற்க சனிகூட அல்லது பார்க்க ஏழில் ஆதித்தன் நிற்க இலக்கினத்தைப்பார்க்க வாதசூலையினாலும் சரீரம்விழும்.

ஆதித்தனும் ஆறுமிடமுடையவனும் இலக்கினாதிபதியும் ஒருராசியிலிருக்கச் சந்திரனுடனே கூட அல்லது சந்திரன் பார்க்க ஜலக்கரையில் வெட்டுப்பட்டு சாவான்.

(ஆரும்பாவபலன்.)

இராகுவானாலும் கேதுவானாலும் ஆருமிடமுடையவனுடனே கூடி ஆறில் நிற்க,செவ்வாய்பார்க்க அக்கினியிலகப்பட்டுச் சாவான்.

இலக்கினாதிபதி ஏழாமிடமுடையவனாகயிருக்கப் பாவிகளாற் பார்வை பெறக் கர்ம்மாதிபதியுஞ் சஷ்டாதிபதியும் இலக்கினத்திலிருக்க ஸ்திரீநிமித்தம் விஷபக்ஷணமரணம்.

இராகு கேதுக்கள் கேந்திரதிரிகோணத்தி லிருக்க, ஆருமிடமுடையவனாலே பார்க்கப்பட மித்துருத்தானாதிபதி காரகனஷ்டமத்திலிருக்க மரத்திலேறிவிழுந்து மரணம்

இரண்டாமிடமுடையவனுங் களத்திராதிபதியும் ஆருமிடமுடையவனும் பார்க்க ஒன்பதாமிடமுடையவனும் ஆதித்தனும் எட்டில் நிற்க மரத்திலேறிவிழுந்து மரணமாவான்.

இரண்டாமிடமுடையவன் ஏழாமிட முடையவன் சத்திராதிபதியுடனே கூட சுக்கிரன்பார்க்க ஸ்திரீமருந்தினால் சாவான்.

சந்திரனை இராகுபார்க்க ஏழாமிடமுடையவனுடனே கர்மநாதன் கூட ஸ்திரீயினால் மரணம்.

சஷ்டாஷ்டமவியங்களிற் சந்திரன் இலக்கினாதிபதியாலேபார்க்கப்பட சனி குளிகன் பார்க்க கயிற்றினால் மரணமாம்.

அஷ்டமாதிபதியும் லக்கினாதிபதியுங் கூடியிருக்க ராகுவாலே பார்க்கப்பட பாவதிரேகாணமேறக் கயிற்றினால் மரணமாம்.

சனி குளிகனுடனே வியாழன்கூட அஷ்டமாதிபதியாலே பார்க்க அல்லது சனியாலே அஷ்டமாதிபதியைப் பார்க்கப்பட முன்சொன்னபலனும்.

ஆறில் எட்டில் செவ்வாய் மூன்றுமிட முடையவனுடனே கூடிநிற்க சனி குளிகன் கூடிநிற்க ஆயுதத்தால்மரணம்.

அஷ்டமத்தில் பாவரிருக்க செவ்வாயுடனே சந்திரன் குரூரசஷ்டியங்கிசம் ஏற ஆயுதத்தால் மரணமாம்.

செவ்வாய் மேடவிருச்சிகத்தில் நிற்க ஆதித்தனும் அவனும் அன்னியோன்னியம் பார்க்க அல்லது அங்கிசத்தில் அப்படியிருக்க ஆயுதத்தால் மரணமாம்.

ஆருமிடமுடையவன் குரூரசஷ்டியங்கிசமேறப் பாவிகள்பார்க்கச் சூரியன் கூடியிருக்க அவந்தரை மரணம்.

ஆறிற் செவ்வாயும் புதனும் நிற்க சுக்கிரன் பார்க்க குரூர அங்கிசமேற க்ஷயரோகம்வரும்.

ஆறில் சனியும் செவ்வாயும் நிற்க சூரியனாவது ராகுவாவது பார்க்க இலக்கினாதிபதிபார்க்க இலக்கினாதிபதி ஈனமாக தீராத ரோகமாம்.

ஆறில் சனியனும் குளிகனும் நிற்க இராகு கேது ஆதித்தன் செவ்வாய்பார்க்கச் சுபதிருஷ்டி யில்லாதிருக்கச் க்ஷயரோகத்தால் மரணமாம்

சந்திரன் ஜலராசியாயிருக்கச் சஷ்டாதிபதியும் ஜலராசியிலிருக்க ஜலத்தானாதிபதி பார்க்க மூத்திரக்கிரிச்சினரோகம் வரும்.

ஆறில் சந்திரன் நிற்கச் சனிகேந்திரத்தானத்திலிருக்க வியத்தானத்தில் பாவிநிற்கப் பாவியங்கிசம் ஏற பீனிசம் வரும்.

ஆறுமிடமுடையவன் பெலயீனனாகயிருக்க இலக்கினேசனும் பெலவீனனாகயிருக்கச் சத்தி குன்மம் வரும்.

சஷ்டேசுரன் ஏறின அங்கிசாதிபதி சூரியன் சனியாயிருக்கச் சத்தி குன்மம்வரும்.

சத்துருத்தானாதிபதி கேந்திரத்திலிருக்க பாவக்கிரகம்பார்க்க ஆறுமிடமுடையவனைப் பாவிகள் பார்க்க சத்துருவர்த்தனைவரும்.

இலக்கினேசன் ஆறில்நிற்க ஆறுமிடமுடையவன் இலக்கினத்திலிருக்க சனி குளிகன்கூடியிருக்க சத்துருவர்த்தனைவரும்.

சத்துருத்தானாதிபதி அத்தமனநீசனாயிருக்க அல்லது நிர்மூடமாயிருக்க இலக்கினாதிபதி பெலவானாக சத்துருநாசமுண்டாம்.

இலக்கினேசன் ஆறில் நிற்க அல்லது சஷ்டேசனாலே இலக்கினாதிபதியைப் பார்க்கப்பட அல்லது ஆறுமிடமுடையவன் இலக்கினத்தில் நிற்க ஞாதிபீடைவரும்.

குரு சுக்கிரான் ஆறுமிடமுடையவனுடனே கூடி இலக்கினத்திலிருக்க சனி இராகு செவ்வாய் பார்க்க ஞாதிபீடை வரும்.

இலக்கினாதிபன் சுபனாயிருக்க ஆறுமிடமுடையவனுஞ் சந்திரனுங் கூடி யிருக்க கேந்திரகோணத்திற் புதனிருக்க ஞாதிகளாலே ஜீவனம்.

ஆறுமிடமுடையவன் பாவியாக நீசாங்கிசமேறிக் குரூரசஷ்டியங்கிசத்திலிருக்க ஞாதி க்ஷயமாம்.

ஆறுமிடமுடையவன் ஆறும்வர்க்கமேறிப் பாராவதாங்கிசமாயிருக்க அவன் பெலயீனனாக ஞாதிக்ஷயமாம்.

பாக்கியேசன் ஆறிலிருக்க, ஆறுமிடமுடையவன் பார்க்க அல்லது ஆறுமிடமுடையவன் சனி செவ்வாய் கூடிப்பார்க்க அக்கினியால் மரணம்.

லக்கினன் பூரணபெலமாயிருக்க சஷ்டேசன் குளிகனுடன் கூடிப் பார்க்க அக்கினியால் மரணமாம்.

சுக்கிரன் ஆறில் பெலவானாயிருக்க சுபக்கிரக திருஷ்டியுண்டாக நித்தியம் மதுபானம் பொசிப்பன்.

ஆறும் பாவபலன்

முற்றிற்று.

ஏழாம் பாவபலன்.

ஏழாமிடத்தில் சூரியனிருந்தால் ஸ்திரீவிரோதத்தால் அற்பனுவான் விவாகம் விளம்பரமாய் நடக்கும் சாஸ்திரசம்பன்னன் தேசாந்திரம் போவான் அன்னியர்வீடுகளில் புசிப்பான் ஸ்திரீமூலியமாய் ஐஸ்வரியமுண்டு ஸ்திரீவார்த்தையில் பிறியமாயிருப்பான்.

சந்திரனிருந்தால் பெண்சாதிபேரில் பிறியமும் அவள் வார்த்தையும் கேட்பான் தூஷணமாயிருப்பான் நல்ல விவாகமுண்டு களத்திரத்திற்கு நோயுண்டு உடனே அவளிருக்க மறுகலியாணம் செய்வான் களத்திரம் இரண்டு செவ்வாய் திசையில் பொசிப்பில் கடைசியந்தரத்தில் ரோகமுண்டு ஸ்திரீவிரோதத்தினுல் அல்ப்பனுவான்.

செவ்வாயிருந்தால் வயற்றில் இரத்தம்விழும் க்ஷயரோகம் சகோதரங்கள் மெத்தவுண்டு வெகுபுத்திமான் வெகுமாதருண்டு களத்திர தோஷமுண்டு.

புதனிருந்தால் மாதர்சவுக்கியம் அஸ்வவாகனம் சரீரசவுக்கியம் சரீரகாத்திரம் ஸ்திரீதனமுடையவன்.

வியாழனிருந்தால் வித்வான் நல்லபெண்ணுடையவன் வாலிபத்தில் விவாகமுண்டு விசனமுடையவன் வாணிபவியாபாரத்தில் லாபமுண்டு

சுக்கிரனிருந்தால் துஷ்டன் மந்தன் வெகுஜுத்தன் கீர்த்தியுடையவன் ஸ்திரீகளுடன் சேருவான் விபோகசம்பன்னன் சுக்கிரதிசை சனிபுத்தியில் ஸ்திரீ விபசாரிதொழிலுண்டு.

சனியிருந்தால் சரீரதோஷம் விவாகமிரண்டு வேசிசம்போகன் ஸ்திரீவிரோதி தேசாந்திர சஞ்சாரன் அன்னியகிரஹத்தில் பொசிப்பன் களத்திரஆனி பெரியமனுஷாள்வஞ்சனை ரோகம் கைபதட்டம் துக்கன் காதில்ரெணம் சனிதிசையில் சுக்கிரன் பொசிப்பில் ஸ்திரீவிபசார தோஷமுண்டு.

இராகுகேதுவிருந்தால் விவாகமிரண்டு வித்வசங்கமன் மூத்திரரோகம் மகரலக்கினம் ஏழாமிடமாகி சந்திரன் செவ்வாய் கூடி நிற்க நல்ல ஸ்திரீயுடையவன் சனிசந்திரன் கூடிநிற்க ஸ்திரீயில்லாமல் போவான் சூரியன் இராகுநிற்க ஸ்திரீமூலியமாய் திரவியநாசம்.

ஏழாமிடம் கன்னியாய் வியாழநிற்க, நாலுபாபர் கூடிநிற்க களத்திர நாசம்.

ஏழில் சனியிருக்க இலக்கினத்தில் சூரியனிருந்தால் களத்திரநாசம் ஏழில் செவ்வாய் நிற்கில் களத்திரநாசம்.

ஏழில் செவ்வாயிருந்து சுக்கிரனைப்பார்த்தாலும் கூடினாலும் களத்திரம் இரண்டு சனிகூடில் தாரம் மூன்று.

இவர்களைப் பாபர்பார்த்தால் அண்டவியாதிவரும்.

இலக்கினத்தில் சனியிருந்து சுக்கிரன் கடகம் விருச்சிகம் மிதுனம் இந்த இராசிகளிலிருந்தால் மலடனாவான்.

ஒன்று ஏழு பன்னிரண்டில் பாவியிருக்க பெண்சாதியும் புத்திரியும் ஈனம்.

சுக்கிரன் மூன்றுக்கு அதிபனாகயிருந்தால் அதிகாமியாயிருப்பான்

ஏழில் சுக்கிரன் செவ்வாயிருக்க பாவிபார்க்க அவன் உந்திக்கமலத்தில் வியாதியுண்டு.

ஏழில் சுக்கிரன் செவ்வாய் சந்திரன்நிற்க அல்லது பார்க்க களத்திரம் புருஷனறிய தேடியுண்பாள்.

ஏழில் சூரியன் பாபருடன் கூடியிருந்தால் பல்லாவது கண்ணாவது ஊனமாகும்.

ஏழு பன்னிரண்டில் பாவி யிருந்து சீரணச்சந்திரன் ஏழு ஐந்திலிருந்தால் ஆண்மலடாம்.

ஏழில் சனியிருக்க மகரம் விருச்சிகம் மேஷம் இந்தராசிகளில் சுக்கிரனும் சந்திரனும் கூடியிருந்தால் அவனுடைய ஸதிரீ மற்றவருடன்கூடி புருஷனறியத்தேடி புருஷனுக்கு போடுவாள்.

ஏழில் சூரியனிருந்து சந்திரன் பாபருக்கு நடுவேயிருந்தால் வியாதியாயிருப்பான்.

ஏழிலும் லக்கினத்திலும் பாவியிருந்து ஒன்பதில் சுக்கிரன் சூரியனுடன்கூடி யிருக்க தாரமில்லாமல் தரித்திரவானாவான்

ஏழுக்கதிபன் பகையுடன் கூடினாலும் நீசமானாலும் முந்தினபெண்சாதிக்கீனம்

சுக்கிரன் ஆறு எட்டு பன்னிரண்டிலிருந்து பாவிபார்த்தாலும் சம்பந்தப்பட்டாலும் கல்யாணமில்லை எத்தனை கல்யாணமானாலும் தங்காது.

இலக்கினத்துக்கு நாலில் சனி சந்திரன் கூடிநிற்க இரண்டாங்களத்திரத்திற்கு புத்திருண்டு.

சுக்கிரனிருந்த இராசிக்கு ஏழுக்கு அதிபன் எந்தத்திக்கிலிருக்கிறானோ அந்தத்திக்கிலே யிருந்து களத்திரம்வரும்.

ஏழுக்கதிபன் ஏழில் சுபனாகயிருந்தால் தாயாளமுள்ளவன்.

ஏழில் இராகு கேது யிருந்தால் அவன் திசை பொசிப்பில் தாசிசாலகாசம்பண்ணுவான்.

சுக்கிரன் ஒன்று ஐந்து ஒன்பதிலிருந்தால் மாணபரியந்திரம் போகி யாயிருப்பான்

சுக்கிரனுடன் மூன்றுக்குஅதிபன் கூடினாலும் பார்த்தாலும் பரஸ்திரீ களுக்கு எவ்வளவு கொடுத்தாலும் விசுவாசமிராது.

சுக்கிரனுடன் சனிகூடினாலும் அல்லது பார்த்தாலும் தனது ஸ்திரீ யைவிட்டு பரஸ்திரீயோடு சம்போகம் பண்ணுவான்.

இலக்கினத்தை அல்லது சந்திரனை வியாழன்பார்க்கில் கூடில்,வாலிபத் தில் விவாகம்.

ஏழுக்கதிபன் சுபனாயிருந்து நீச அங்கிசனாய் ஆறு எட்டு பன்னிரண் டில் இருந்தால் அவன்ஸ்திரீ வாலிபத்தில் மரணம், கைம் பெண்ணுடன் புணர்ச்சி.

ஏழுக்கதிபனோடு இராகு கேது கூடினால் ஈன்ஸ்திரீயை புணர்ச்சி செய்வன்.

ஜாதகன் பிறக்கும்போது சுக்கிரனோடு வியாழன்கூடில், இராஜகன் னிகையோடும், சூரியனும் அங்காரகனும்கூடினால், க்ஷத்திரிய ஸ்திரீயோடும், சந்திரனும் புதனுங்கூடில், வைசியகுலமாத ரோடும் சனிகூடில் சூத்திரமாதரோடும் குரு கேதுகூடினால் புலையர்குலத்தில்பிறந்த மாதர்களோடும் பெருமையோடு கூடி யிருப்பான்.

களத்திரத்தானாதிபனைக்கூடி எத்தனைகோள் நிற்கின்றதோ அத்தனை களத்திரமுண்டாம்.

களத்திரகாரகன் ஸ்தானாதிபதி சுபனாகயிருக்க சுபக்கிரகம் பார்க்க உத்தமம்.

இவர்கள் வியஸ்தானத்திலும் சிம்மவிராசியிலுமிருக்க பாவர்கள் காண மத்திபமாம்.

பாம்புகளும் செவ்வாயும் களத்திரத்தானத்தி லிருந்திடில் களத்திரப் பீடை யுண்டாகும் சுபக்கிரகங்கள் பார்க்கில் உத்தமமாம்.

களத்திரஸ்தானாதிபதியும் லெக்கினாதிபதியும்கூடி தங்கள் மனைகளி லும் ஒன்பதிலும் நிற்பாராகில், இவன் பல ஸ்திரீகளைக்கூடினா லும் களத்திரம் ஒன்றே நடக்கும்.

களத்திராதிபாதியும் குடும்பதிபதியும், பாவர்களும் வெள்ளியுங் கூடி மூன்றில் ஒன்றில் ஆறில் மருவிநிற்க மனையாளுக்கு ஈன முண்டாம்.

இலக்கினாதிபதியும் ஏழாமாதிபதியும் கூடி வியத்திலும் ஆறிலும் எட் டிலும் நிற்க விவாகமில்லையாம்.

ஏழாமிடம் சுத்தியாக ஏழாமிடத்ததிபனோடுஊனமில்லாக்கிரகங்கள் பலர்கூடினும் விவாகமொன்று.

சுக்கிரனும் அங்காரகனும் ஏழில்நிற்கில், விதவைஸ்திரீயை மணம்புரி வான்.

(ஏ ழா ம் பா வ ப ல ன்.)

சந்திரனும் அங்காரகனும் ஆருமாதியுங் கூடி நாலாமிடத்தில் நின்றா லும் அல்லது லெக்கினம் ஒன்பது நாலு ஆறு இந்த ஸ்தானாதி பதிகள் மேல்சொன்ன ஸ்தானத்தில் கூடிநிற்கில் இவனுக்கு வேறொருவிஷயமு முண்டாகும்.

ஏழாமிடத்தில் பாவர்கள் நிற்க இவன் களத்திரத்திற்கு ரோகமுண் டாம்.

சூரியனோடு பாம்புகூடி இரண்டாமிடத்தில் நிற்க, களத்திரத்திற்கு வெகு ரோய்காட்டும்.

இரண்டாமிடத்தை பாபர்கள் பார்க்கிலும் நிற்கிலும் களத்திரம் பிணி கொண்டு வாழும். குடும்பம் யேழையாம்.

ஏழாம்வீட்டிற்கதிபன் சராராசியில் நிற்கில், இவருக்கு தாசம் இரண்டு ஸ்திரராசியில் நின்றால் உத்தமம்.

உபயராசியில் நிற்கில் மாதர்கள் பலருண்டாம். ஷெ ஸ்தானாதிபதி யுடன் சேர்ந்த கிரகம் பார்த்தகிரகங்களால் பலன்கள் கூடும்.

இலக்கினாதிபதி சுக்கிரன்வீட்டில் இருந்தாலும் அல்லது கூடினா லும் அல்லது சுக்கிரன் பார்க்க உத்தமஸ்திரீ யுள்ளவனும்.

ஏழுக்குடையவனும் இரண்டுக்குடையவனும் சுக்கிரனும் இவர்கள் மூவரும் பாவிகளுடன்சேர்ந்து ஆறில் எட்டில் பனிரண்டில் நிற்க இவனுக்கு கலியாணம் நடக்கும். ஆனாலும் இவனுக்கு களத்திரம் தங்காது.

இரண்டாமதிபனும் ஏழாமாதிபனும் கேந்திரகோணத்திலு மிருக்க இவனுக்கு யேகதாரமுண்டாம்.

அவ்விருவர்களுடன் சுக்கிரனும் பாபருடன்கூடி ஜென்மத்திலும் ஆறிலும் எட்டிலும் இருக்க, வேசியர்க்கு யினியனவன்.

ஏழாமாதியும் குடும்பாதியும் இவர்கள் கேந்திர திரிகோணங்களில் நிற்க, அல்லது அவரவர்கள் வீட்டில் இருந்தாலும் யேகதார முடையவன்.

சுக்கிரனும் ஏழாமதிபனுந் தனித்துக்கூடி பாவர்களுக்குமத்தியில்நிற்க யேழாமிடத்திலும் பாவர்கள்சேர மேல் சொன்னவர்களையும் பாவர்கள் பார்ப்பாராகில் களத்திரத்திற்கு அரிட்டம் வரும்.

சனியும் சூரியனுங் கூடி கன்னியில் நிற்க, அந்தவீடு ஜென்மலக்கின மாக குரு மீனராசியில் நிற்க, இப்பேர்ப்பட்டவன் மனைவி துன்பத்தோடு அரிட்டமாவான்.

இலக்கினத்திற்கு யேழாமிடத்திலும் சந்திரனுக்கு யேழாமிடத்திலும் சுபக்கிரகங்கள் பார்வையிருந்தால் களத்திரபலனுண்டு.

பாபக்கிரகங்கள் பார்வையிருந்தால் களத்திரத்தை மணம்புரியாத வஞ்சகனுக யிருப்பான்.

ஏழாமாதிபனும் சுக்கிரனும் நீசமாகி, ஆறில் எட்டில் பனிரண்டில் நிற்க மனையாளுக்கு யீனமாம்.

சுக்கிரன் இருக்கிற வீட்டிற்குடையவன் ஆறில் எட்டில் பனிரண்டில் நிற்க இவன் மனைவியும் யீனமாம்.

ஏழாமாதிபன் பாவர்வீட்டில் நிற்கில் அல்லது பார்க்கில் இவனுக்கு விவாகம் தூரதேசத்திலாகும்.

களத்திராதிபன் சுபாங்கிசமேற களத்திரம் சமீபத்தில் கிடைக்கும்.

ஏழாமாதிபன் சூரியனுகில் கிழக்குத்திசையும், சுக்கிரனுகில் அக்கினி திசையும், செவ்வாயாகில் தெற்குதிசையும், ராகுகேதுகளுக்கு நிருதிதிசையும், சனியாகில் மேற்குத்திசையும், சந்திரனுகில் வாய்வுதிசையும் புதனுகில் வடக்குதிசையும் குருவாகில் ஈசானிய திசையிலும் களத்திரம் வருமாம்.

ஏழாமிடத்தோன் ஆறில் எட்டில் பனிரண்டாமிடத்தில்போய் அதிக பாவனுயிருக்க அவனைப்பார்த்த கிரகங்கள் எத்தனையோ அத்தனை தாரமாம்.

களத்திரஸ்தானுதிபதி பா[illegible]ன்சேர யேழாமிடத்திலாகுவிருக்க அ[illegible]ந் கேந்திரத்தில் [illegible]வர்கள் இருக்க அல்லது பார்த்தால் அவன் மிருகாதிகளை விரும்புவன்.

ஏழாமிடத்ததிபன் சூரியனுடன்கூடி ஆறு எட்டு வியத்திலிருக்கில் இவனுக்கு வாலிபத்திலே மனைவி விண்ணுலகம் சேர்வாள்.

களத்திராதிபன் சுபக்கிரகங்களுடன் கூடினுல் இவன் மனைவி அடக்கமுடையவளாயும் சுபகளத்திர மாகவும் பாவர்களால் கூடிப் பார்க்கப்பட்டால் பாவகளத்திரமுடையவனுகவும் இருப்பான்.

சனி ஏழாமிடத்ததிபனுகி, ஆறு எட்டு பனிரண்டில் நிற்கில் விதவை ஸ்திரீயைச் சேர்வான்.

ஏழாமிடத்ததிபன் பாம்போடுகூடி ஆறு எட்டு வியத்தில் இருக்க ஈனகுலத்து மாதரைச் சேர்வான்.

ஏழாமாதிபன் சனியின் வீட்டில்நிற்க சனிபார்க்க ஏழாமிடத்திற்கு ஒன்பதாமிடத்தாதிபன் எட்டாமிடத்தி லாயினும் அல்லது சனிவீட்டிலாயினும் வந்திருந்தால் இவன் மனைவியின் விபசாரதனத்தினுல் ஜீவிப்பவனுவான்.

(ஏழாம்பாவபலன்.)

ஏழுக்குடையவன் வலிமைபெற்று நட்புகிரகங்களைக்கூடி இலாபஸ்தானத்தில் எத்தனை கிரகங்களோடு கூடியிருக்கின்றதோ அத்தனை களத்திரம்உண்டு.

அந்தலாபஸ்தானம் ஸ்திரஉபயராசியாகில் சுகமுண்டு.

அந்தலாபஸ்தானம் சரராசியாகில் களத்திரத்திற்கு கொஞ்சம் அரிட்டமுண்டு.

இலக்கினம் கன்னிராசியாக சந்திரனுஞ் சனியும் கேந்திரத்திலிருக்க பத்துகளத்திரத்தை மணம்புரிந்து பூபதியாகவாழ்வான்.

ஏழாமிடத்தில் சுக்கிரனும் சன்மத்தில் குருவும் சுபமாக இருக்கில், களத்திரம்அநேகமுண்டு அவர்களை ரக்ஷிக்கமாட்டான.

சுக்கிரன்-அங்காரகன் சந்திரன் சூரியன் குரு ஐந்துபேர்களும் ஒருராசியில்கூடிநிற்கில் மனைவியில்லாமல் வியாதிகொண்டு அலைகுவான்.

சந்திரன் சூரியன் புதன் சனி வெள்ளி இந்த ஐந்துபேர்களும் ஒருராசியில் நின்றால் மனைவி மக்களை ஓட்டிவிட்டு வியாதி கொண்டு தேசசஞ்சாரியாகயிருப்பான்.

இலக்கினதிபதிநின்றஅங்கிசாதிபதியின்வீட்டில் குருவருங்காலத்தில் கலியாணமுண்டாகும்.

ஏழுக்கதிபன [illegible] அங்கிசத்தி[illegible] குருவருங்கால[illegible]ம் நல்ல களத்திரத்தை மண[illegible]பன்.

குடும்பாதிபதியும் களத்திராதிபதியும் ஆறுமாதியும் சுக்கிரனும் கூடிப் பாவருடன் லெக்கினத்திலிருக்கப் பிறந்தவன் பரதாரகமனனுவான்,

மேற்சொன்னவர்கள் பாக்கியஸ்தானத்திலும் இவ்வாறு கூடிநிற்கில் பரதாரகமனனுவான்,

சுக்கிரனும் ஏழாமாதியும் ஆறுமாதியுங்கூடி ஒருவீட்டில் நிற்கில் போகமில்லை,

இரண்டாமாதி மூன்றுமாதி இவர்கள் சேர்ந்து ஆறு எட்டு பனிரெண்டில் கூடியிருக்கில் களரோகம் வரும்.

ஜென்மாதியும் ஏழாமாதியும் கேந்திரக் கோணத்தில் கூடியிருக்க அந்தவீட்டோன் இலக்கினத்தில் மேவினல்அவன்திசைப்பொசிப்பில் இந்தசாதகனுக்கும் களத்திரத்திற்கும் மரணம்வரும்.

சப்தமாதி அட்டமாதியோடு பாவராயினும் அந்தஸ்தானங்களில் பாவர்களாயினும் வியஸ்தானத்தில் குரு அங்காரகனுடன் கூடினுலும் இந்த சாதகனுக்கு இரண்டு விவாகம் நடக்கும்

ஏழாமாதி இரண்டாமாதி இவர்களிருவரில், யாவரேனு
வீனராகயிருக்க அவர்வீட்டில் பாவர்கள்நிற்க, இந்த
இரண்டுவிவாகஞ் செய்துவாழ்வான்.

இரண்டாமிடத்தில் பாவர்கள் வந்திருக்க ஏழிலும் பாவர்கள்நிற்க அ
ந்தராசிகளிலும் அவர்களோடும் பாவர்கள்வந்துநிற்க இரண்டு
விவாகம் செய்துவாழ்வான்.

ஜென்மத்திலும் இரண்டிலும் ஏழிலும் பாவர்களாகநிற்க களத்திராதி
பதி அஸ்த நீச்சமாக சத்துருவீட்டில் நிற்கில் இரண்டுதாரம்
நடக்கும்.

களத்திராதிபதி கேந்திரகோணத்தில் பாவிகள் வீட்டில் நிற்க அதில்
பத்தாமிடத்தோன் கூட ஏழாமிடத்தோனுடைய அங்கிசமேற
இவன் அநேகம் பெண்களை விவாகம்புரிவான்.

ஏழாமிடத்தில் குருபெலமாக இருக்க சுக்கிரனும் வலுவுபெற்றிருக்க
குடும்பாதிபதி நட்பு அங்கிசத்திலிருக்க, அதிக அழகுள்ள பெ
ண்ணை விவாகம் செய்வான்.

இலாபாதிபதியும் ஏழாமாதியும் கூடி திருகோணத்திலிருக்க, சுபர்கள்
பார்க்க, இவன் அனேகம் பெண்களை விவாகஞ்செய்வான்.

இரண்டாமாதியும், ஏழாமாதியும் இலக்கின கோபுராங்கிசத்திலிருக்க
பத்தாமாதி ஏழாமிடத்திலிருக்க, இவன் பத்து பெண்களை
விவாகம் செய்வான்.

களத்திராதிபதிசுபராசியிலேறி, அங்கிசமும் நல்லவீடாய் சுக்கிரனும்
அவ்வாறிருக்க அல்லது பத்தாமிடத்ததிபனு ன் பலவான்
கூட இவ [illegible] ஞ்செயவான்.

களத்திராதி [illegible] அல்லது அவர்கள் பார்வை
[illegible] க்கிரன் பலவானகயிருந்தாலும்
[illegible] களத்திரம் கிடைக்கும்.

[illegible] புதனும் சந்திரனும் நீச அஸ்தமன
[illegible] சமும் சத்துருவின் அங்கிசமாகில் களத்திரஸ்தான
[illegible] வர்கள் இருந்தால் இவன் வேசியை விவாகம்செய்வன்

(எட்டாம்பாவம்.)

குரு களத்திரஸ்தானதிபதியாகி பாவருடன் கூடி பாவ இராசியிலிரு
க்க பாவர்களாலும் பார்க்கப்பட்டு சனி செவ்வாய் அங்கிசத்
திலிருந்தால் இவன் களத்திரம் சோரம்போவாள்.

சுக்கிரன் களத்திர ஸ்தானதிபதியாகி பாவருடன்கூடி பாவர்கள்பார்
க்க ஏழாமிடத்தில் சத்துரு அங்கிசையில் இருந்தால் இவன்
தாரம் சோரம்போவாள்.

ஏழாமிடத்தோன் பாவருடன்கூடி இரண்டாமிடத்திலிருக்க அங்கா
ரகன்பார்க்க இவனுக்கு விபசாரத்தொழிலால் புத்திரனுண்
டாகும்.

இலக்கினதிபதியும் ஆறு எட்டு பன்னிரண்டில் இருக்க இவன் இர
ண்டுதாரம் விவாகம்செய்வான்.

த்திற் கிரண்டாம் பாகமாகிய

ளத்திராதியும் கூடினாலும் பார்த்தாலும் பலவானுகி ருகோணத்தி லிருந்தாலும் இவனுக்கு விவாகம் ஒன்றுதான் நடக்கும்.

இல ங்கினத்திற்கு ஏழிலும் வியத்திலும் சந்திரன் பாவாங்கிசமே றியிருக்க சுக்கிரன் பாவரோடுங் கூடியிருக்க இவன்மனைவி புருஷனைக்கொல்லத் துணிந்திடுவாள்.

களத்திரத்தானுதிபதி சத்துருநீச்சவீட்டிலிருந்தாலும் பாடடைந்தாலும் அல்லது சத்துருத்தானுதிபதியோடு கூடி அவ்விடமிருந்தாலும் பாவக்கிரகங்கள் அவ்விடத்திலிருக்கிற களத்திரத்தானுதிபதியைப் பார்த்தாலும் களத்திரத்தானத்தில் கெட்டகிரகங்களிருக்க களத்திரத்தானுதிபதி அந்தகெட்டகிரகங்களைப்பார்த்தாலும் விவாகம் செய்துசுகத்தை அடையமாட்டான்.

களத்திரத்தானத்தில் பாவக்கிரகங்களிருக்க களத்திரத்தானுதிபதி சத்துரு வீட்டிலாவது அல்லது பன்னிரண்டாமிடத்திலாகிலும் சத்துரு நீசக்ஷேத்திரம் பெற்றிருக்க விவாகம்செய்து சுகத்தை அடையமாட்டான்.

களத்திரத்தானுதிபதி கெட்டகிரகங்களுக்கு மத்தியிலிருக்க களத்திரத்தானத்தில் கெட்டகிரகங்களிருந்தாலும் களத்திரகாரகனுகிய சுக்கிரன் பாபக்கிரகங்களுக்கு நடுவேயிருந்தாலும் களத்திரம் நெருப்பிலும் நோயினுல் வருத்தப்பட்டு கெட்டுப் போகும்.

த்திரத்தானு தி அறு எட்டு பன்னிரண்டாமிடங்களில் வலிமை குறைந்திருக் [illegible] னை பாவக்கிரகமாவது பன்னிரண் [illegible] ிரெண்டாமிடத்திலிருக்கும் கிரக [illegible] கத்தால் வருந்தி யிறக்கும் [illegible]

சந்திரன் சலராசியிலிருக்க சனி எட [illegible] இருக்க களத்திரத்தானத்தில் பாவக்கிரகங்கள [illegible] ரம் க்ஷயரோகத்தால் வருத்தப்பட்டு இறக்கும்.

அங்காரகன் இலக்கினத்திலாகிலும் ஏழு எட்டு பன்னிரண்டாமிடத்திலாகிலும் நான்காமிடத்திலாகிலுமிருக்க களத்திரத்தானுதிபதி ஆறு எட்டு பன்னிரண்டாமிடத்திலிருக்க களத்திரம் தீர்க்க ரோகத்தால் பீடிக்கப்பட்டு மடிவள்.

களத்திரத்தானத்தில் சுபக்கிரகங்களிருக்கச் சீவத்தானுதிபதி கேந்திர திரிகோண ஸ்தானங்களில் உச்சசுவமித்துரு க்ஷேத்திரஸ்தானபலமடைந்தாவது அல்லது சீவத்தானுதிபதி சுபக்கிரகங்களோடு சேர்ந்தாவது சுபக்கிரகங்கள் பார்த்தாலும் களத்திரத்தால் சகலபாக்கியமும் வந்துசேரும்.

(ஏழாம்பாவபலன்,)

முற்றிற்று.

எட்டாம் பாவபலன்

எட்டாமிடத்தில் சூரியனிருந்தால் நேத்திரரோகம் ஆயுள்விருத்தி திரவியபூச்சியம் தருமசிந்தனை யில்லாதவன் அழகுடையவன் கல்விப்பிறியன் அக்கினி கிலேசமுடையவன்.

சந்திரனிருந்தால் அல்பபுத்திரனுண்டு பித்தசரீரம் வியாதி பீடிக்கும் நேத்திரரோகம் பின்னால் சௌக்கியம் மாதுரு அரிட்டம் பிறமாதர் விரோதமுண்டு அற்பாயுள் பாலாரிட்டம் சுகசந் தோஷமுண்டு தியாகி சூரன் குணமுடையவன்.

செவ்வாயிருந்தால் அல்பபுத்தி சொற்ப நேத்திரரோகம் அற்பாயுள் பாட்டனுக்கு ரோகம் மாதுருகண்டம் பெண்ஜாதிகடினன் அபகாரமுடையவன் வேசிசம்போகன் ராஜப்பிறியன் தன முடையவன் ஆயுதத்தினால் தத்துடையவன்.

புதனிருந்தால் தீர்க்காயுள் வெகுக்ஷேத்திரமுண்டு சம்பன்னன் புத் திராள் அற்பம் குணமுடையவன் வெகு திரவியவான் ஜல த்தத்துண்டு.

வியாழனிருந்தால் ஜாதிப்பிரவேசபிரியன் தாசிசங்கமன் ஆசாரமு டையவன் மூலரோகம் தீர்க்காயுள் சரீரம் பெருத்திருக்கும் புத்திமான் வியாதியால் தத்துண்டு.

சுக்கிரனிருந்தால் நல்லகுணவான் தீர்க்காயுளுண்டு சுகியாயிருப்பான் மாதுருகண்டம் ஸ்திரீபோகன் துன்மார்[illegible]கன் ஆயுள்பரியந் தம் செல்வவானா[illegible]ருப்பான் பெண்ஜா[illegible]பசாரியால் த[illegible] முடையவன்.

சனியிருந்தால் தீர்க்காயுளுண்டு அதிகதரித்திரமுண்டு சூத்திரஸ்திரீ சம்போகன் சேவகாவிர்த்தி அற்பபுத்திரனுண்டு நேத்திர ரோகம் உத்தியோகபங்கம் ஒருத்தன் பெண்ஜாதியைகை பிடிப்பான். தனயீனன் கோபவான் சூரன் பிதாவுக்கு தோஷ முண்டு பசியினாலே தத்துடையவன்.

ஏழில் ராகுபத்தில் சூரியன் நாலில் சனியிருக்க மலை சுவர்மரங்கள் இதுகளின்மேலே ஏறிவிழுந்து மாணம்.

ஏழில் சனி பத்தில் சந்திரன் இலக்கினத்தில் செவ்வாயிருந்தால் அவன் கிணற்றில் குளததில் பள்ளங்களில் விழுந்து மரண மாவான்.

ஏழாமிடம் கன்னியாகி சூரியனும் சந்திரனுமிருக்க இவர்களைப் பாவர்பார்க்க கூடியிருக்க பந்துக்களால் மரணம்.

உபயராசிகளில் இவர்களிருந்து பாவர் சம்பந்தப்பட்டால் தண் ணீரில் மரணம்.

கடகத்தில் சனி சந்திரனிருந்தால் வயற்றுவியாதியுண்டு சந்திரனும் செவ்வாயும் ஆட்சியாய் பாவருக்கு நடுவேநிற்க ஆயுதத்தினால் அக்கினியால் மரணம்.

சந்திரன் சனி ஆட்சியாய் பாவருக்கு நடுவேநிற்க கழுத்திலே கயிறு மாட்டிக்கொண்டாவது அக்கினியாலாவது மரணம்.

ஐந்து ஒன்பதில் பாவரிருக்க சுபர்பார்க்க கயிற்றினாலாகிலும் விலங்கினாலாகிலும் மரணம்.

(எட்டாம்பாவம்.)

மீன லக்கினத்தில் சூரியனும் அதற்கு ஏழில் பாவியும் சந்திரனுமிருக்க மேஷத்தில் சுக்கிரனிருக்க ஸ்திரீயால் மரணம்.

நாலில் சூரியனும் பத்தில்செவ்வாயும் அமரபட்சத்து சந்திரனுங்கூடியிருக்க அல்லதுபார்க்க மரத்தின்மேல் ஏறிவிழுந்து மரணம்

எட்டில் க்ஷீரணசந்திரனும் பத்தில் செவ்வாயும் லக்கினத்தில் சனியும் ஐந்தில் சூரியனுமிருந்தால் கழுத்துக்கட்டியினால் மரணம்.

இலக்கினத்தில் சனி நாலில் செவ்வாய் ஏழில் சூரியன் பத்தில் சனியிருந்தால் ராஜா அக்கினி ஆயுதத்தினால் மரணம்.

இரண்டில் சனி நாலில் சந்திரன் பத்தில் செவ்வாயிருக்க வாகனத்தின்மேல் ஏறிவிழுந்து மரணம்.

இலக்கினத்தில் க்ஷீரணச்சந்திரனும் சூரியனுமிருந்து ஏழில் செவ்வாயிருக்க பீரங்கிவாயால் மரணம்.

துலாத்தில் செவ்வாய்மேஷத்தில் சூரியன்மகரத்தில் சந்திரனிருக்க நீரினால் ம[illegible]ணம்.

[illegible]தில் ச[illegible]திரன் [illegible] சூரியன் நாலி[illegible]செவ்வாயிருந்தால் நீர் ரோகத்தால் மரண[illegible]

அமரபட்சத்து சந்திரன் பெலயீனமாயிருந்து செவ்வாய்பார்க்க எட்டில் சனிஇருந்தால் குப்யத்தில் கட்டிப்புறப்பட்டு சத்திரமிட்டு புழுப்புழுத்து மரணமாவான்.

எட்டில் சூரியன் சந்திரன் செவ்வாய் சனி நிற்க பட்சி தோஷத்தினால் மரணம்.

இலக்கினத்தில் சூரியன் எட்டில் செவ்வாய் ஐந்தில் சனி ஒன்பதில் சந்திரன் இருக்க மலையிலிருந்து விழுந்தாவது இடிவிழுந்தாவது சுவர்விழுந்தாவது மரணம்.

எட்டில் நீசக்கிரகமிருக்க பன்னிரண்டில் வியாழனிருந்தால் ஒருவித்தையும் வராமல் மூடனுவான அர்ப்பாயுசு.

ஆயுள் கிரகம் பெலமில்லாமல் அஷ்டமத்தைபாவது அஷ்டமாதிபனையாவது சனிபார்த்தால் ஆயுள்விர்த்தி.

எட்டில் வியாழனிருந்தால் ஆயுள்பெலமாம்.

இலக்கினத்தில் சனி எட்டில் ராகுஇருக்கப் பார்க்க கன்னியில் சுக்கிரனிற்க சந்திரன் க்ஷீரணமாய் பாபர் கூடியிருக்க அவன் மாறுகால் மாறுகை அறுபட்டுத் துக்கமாயிருப்பான்.

(எட்டாம்பாவம்.)

இலக்கினாதிபனும் அஷ்டமாதிபனும் ஆறு எட்டு பன்னிரண்டில் இருந்து இலக்கினத்தை சந்திரன் வியாழன்பாராமல் கேந்திரங்களில் சுபக்கிரகங்களில்லாவிட்டால் பாலாரிஷ்டம் அர்ப்பாயுள்

அஷ்டமாதிபன் ஒன்று ஒன்பது ஐந்தில்இருந்து அஷ்டமத்தைச்சனி பார்த்தால் வயது எழுபத் தைந்து.

இலக்கினாதிபனும் அஷ்டமாதிபனும் இலக்கினத்திலிருக்க இவர்களை வியாழனாவது சுக்கிரனாவது பார்த்தால் பூரணாயுசு.

பிதுர்ஸ்தானாதிபதி விரையஸ்தானத்தில் பெலயீனமாயிருந்து சூரியன் சனிபார்த்தால் பிதாவுக்கு அர்ப்பாயுள் வியாழன் பார்த்தால் மத்திம ஆயுள்.

இவ்விதமாக ஒவ்வொரு காரகர்களுக்கும் பார்த்துச்சொல்லவும்.

ஆறு எட்டில் பாவ ரிருக்க இலக்கினாதிபன் பகைநீசங்களிலிருந்தால் அற்பாயுளும் பிறந்தகோத்திரத்திற்கும் ஆகாது.

வியாழன் சுக்கிரன் நீசமாயிருந்து ஒன்பதில் செவ்வாயிருக்க சந்திரனும் சூரியனும் ஏழில் இருக்க இவர்களை சனிபார்த்தால் தாயும் பிள்ளையும் ஒருவருக்குள் அடக்கமாவார்கள்.

சூரியன் வீட்டில் சந்திரனும் சந்திரன் வீட்டில் சூரியனுமாயிருக்க அல்லதுகூட சரீரஊனமாயிருப்பான்.

இலக்கினத்திற்கு எட்டில் சூரியன் உச்சமாய் அவனுடன் சுபர்கூடில் கண் ஊனமாகும்.

கடகத்தில் சந்திரன் இருந்து அவனை சனி செவ்வாய் பார்க்கில் அல்லது கூட காதுசெவிடனாவான்,

மகரம் இலக்கினமாக அதில் செவ்வாய் சூரியன் இருக்க சுபர் பாராவிட்டால் முடவனாவான்.

சூரியன் சந்திரன் இலக்கினத்தைப்பார்க்க முடவனாவான்.

இலக்கினாதிபதியும் சனியும் எட்டுபத்துக் கதிபனும் இவர்கள் நட்பு ஆட்சி உச்சம் திரிகோணங்களிலிருந்து மித்திரு கிரகம்பார்க்க நின்றால் பூரணஆயுளும்போகபோக்கியமும்அநுபவிப்பான்

எட்டில் ஏழில் பாவர்களிருக்க அல்லது பார்க்க தாயும் குழந்தையும் மரணம்.

சூரியன் சந்திரன் சுக்கிரன் இவர்கள் பாவர்களுக்கு மத்தியிலிருக்க சுபர்கள் பாராவிட்டால் மாதா பிதாவுக்குப் பீடை.

இலக்கினத்தில் செவ்வாயிருக்க ஏழில் சூரியனிருக்க தாயும் குழந்தையும் மரணம்.

சூரியன் சனி செவ்வாய் இவர்கள் கூடிநின்றால் பிதாவுக்குப் பீடை

எட்டில் செவ்வாயும் இலக்கினத்தில் பாபருமிருக்க சூரியனும் சந்திரனும் பாபருடன்கூடினால் தாயும் குழந்தையும் மரணம்.

கேந்திரேசன் பாவியுடனே சஷ்டாஷ்டம வியத்திலிருக்க எட்டாமிட முடையவனு மப்படியிருக்க அற்பாயுள்.

அஷ்டமாதிபதி ஸ்வக்ஷேத்திர வுச்சத்திலிருக்க சனியுஞ் சுபக்கிரகத்துடனே கூடியிருக்க தீர்க்காயுள்.

கேந்திரேசன் இலக்கினத்திலிருக்க இலக்கினுதிபதி வியத்தில்சுபக்கிரகத்துடனே கூடியிருக்க சஷ்டாதிபதி லக்கினுதிபதியுடனே கூடியிருக்க சுபக்கிரகம் பார்க்க தீர்க்காயுள்.

கர்மேசனுடனேகூடி இலக்கினுதிபதி இலக்கினத்திலிருக்க சுபாள்பார்க்கத் தீர்க்காயுள்.

நாலாமிடமுடையவன் கேந்திரத்திலிருக்க ஸ்வட்சேத்திர கோணங்களிலே அஷ்டமாதிபதியிருக்க தீர்க்காயுள்.

ஒன்று நாலு ஏழு பத்தில் சுபக்கிரகமிருக்க இலக்கினுதிபதி சுபக்கிரகத்திலிருக்க குருவாலே பார்க்கப்படத் தீர்க்காயுள்.

கேந்திரத்தில்இலக்கினுதிபதியிருக்ககுருசுக்கிராள்பார்க்க இலக்கினுதிபதிசுபனுகயிருந்து அஷ்டமாதிபதியைப்பார்க்கத்தீர்க்காயுள்.

பாவர்கள் மூன்று ஆறு பதினொன்றிலிருக்க சுபர்களெல்லாங் கேந்திரதிரிகோணங்களிலிருக்க தீர்க்காயுள்.

அஷ்டமத்தி லுச்சனுக ஒருகிரகமிருக்க அஷ்டமாதிபதியை வியாழன்பார்க்க தீர்க்காயுள்.

சஷ்டாஷ்டம வியங்களில் பாவரிருக்க இலக்கினுதிபதி பெலஈனமாகயிருக்க அற்பாயுளாம்.

அஷ்டமாதிபதி சஷ்டியங்கிசமேறினும் சூரியனுடனே கூடினும் அற்பாயுளாம்.

வியாதிபதிபாவியுடனேகூடி நிற்கச்சுபக்கிரகம்பாராதிருக்கஅற்பாயுள்

அஷ்டமாதிபதிக்கு ஆதித்தன் சத்துருவாயிருக்க இலக்கினுதிபதிக்கு மப்படியே யிருந்தும் சமமாயுமிருக்கில் மத்திமாயுள் மித்திரனுனல் தீர்க்காயுள்.

சுபக்கிரகங்கள் மூலத்திரிகோணங்களிலிருக்க சஷ்டாதிபதியும் அஷ்டமாதிபதியும் பாவிகளுடனே கூடியிருக்க மத்திமாயுள் இந்தத்திசைபிறந்தவுடனே அஷ்டமாதிபதி சஷ்டமாதிபதி திசையாக அவன் சஷ்டாஷ்டம வியத்திலிருந்தால் பிறந்தவுடனே மரிப்பான்.

அஷ்டமாதிபதியுடனே ஆருமிடத்துக்குடையவன் கூட அல்லதுகேதுவுடனேயும் சனியுடனேயும் கூடியிருக்கச் சத்திரவிரணத்தால் சாவான்.

இலக்கினுதிபதியும் வாகனுதிபதியுங் கூடியிருக்க அஷ்டமாதிபதியுடனே கேதுகூட அன்னியதேசத்தில் மரணம்,

இலக்கினத்திற் சந்திரனிருக்க வியத்திற் பாவியிருக்க ஸ்திரீகிரகங்களினுற் பார்க்கப்பட அவனுக்கு ஸ்திரீஏதுவினுலே மரணம்

(எட்டாம்பாவம்,)

ஏழில் சூரியனிருக்க சந்திரன் இலக்கினத்திலிருக்க பாவாள்வியத்தில்நிற்க சுக்கிரனாலே பார்க்கப்பட அவன் ஸ்திரீ ஏதுவினால்விஷமருந்தி சாவான்.

மூன்றுக்குடையவன் சஷ்டாஷ்டம வியங்களிலிருக்க பல ஸ்திரீஏதுவால் மரணம்.

இலக்கினாதிபதி பூரணபெலமாக இருந்தாலும் ஸ்திரீஏதுவினால் மரணம்.

இலக்கினாதிபதி பரிபூரணபெலமாக நாலில் நிற்கப் பாக்கியேசன் சஷ்டாஷ்டம வியங்களில்நிற்க அதைச்சுக்கிரன் பார்க்க அந்த மாது சோரபர்த்தா நிமித்தம் தன்பிள்ளையைக் கொல்லுவாள்.

அஷ்டமாதிபதியும்பத்தாமிடமுடையவனுங்கூட ஏழாமிடத்திலிருக்க அல்லது நாலாமிடத்திலிருக்க முன்சொன்னபலன்.

மூன்றாமிடத்துக்குடையவன் ஏழாமிடத்திலிருக்க நாலாமிடமுடையவன் அஷ்டமத்திலிருக்க பாக்கியாதிபதிபார்க்க முன்சொன்னபலன்.

பாக்கியாதிபதி பெலவானாக நாலாமிடமுடையவன் சந்திரனுடனே கூடியிருக்க சுக்கிரனாலே பார்க்கப்பட அந்தப் பிள்ளையை மாதா பிரியமாய் போஷிப்பாள்.

ஆறாமிடத்திற் பாவியிருக்க அஷ்டமாதிபதி பாவருடனே கூடியிருக்க குய்யத்தானத்தில் வியாதிவந்து மரிப்பான்.

எட்டாமிடத்திற்குடையவன் சந்திரன் இவர்களை அங்காரகன் கூடி நோக்கினும் ஆயுதத்தாலும் இரத்தவிரணத்தாலும் மரணமாவான்.

எட்டாமிடத்தில் சூரியனிருக்கில் அபவாதத்தாலும் நோயாலும்மரணமாவான்.

பன்னிரண்டில் சுக்கிரன் இருக்க எட்டில் சனியிருக்க தன்னால் மரணமாவான்.

எட்டாமிடத்திற்குடையவன் இருந்தராசி அங்கிசக்காலன்றி இருக்கில் அந்த இராசிமாதம் மரணமாதமும் மரணலக்கினமுமாம்

எட்டாமிடத்திற்குடையவன் வாரமும் இவனைச்சேர்ந்த கிரகங்களின் நாளும் இதற்குத் திரிகோணமும் பாவக்கிரகங்கள் சேருங்காலமே மரணகாலமாம்.

இலக்கினாதிபதிக்கு ஆறாமிடத்தில் எட்டு பத்தாமிடத்திற் குடையவர்கள் உச்சஸ்வட்சேத்திர மித்துருக்ஷேத்திர கேந்திரதிரிகோணங்களாக இருக்க ஒருவர்க்கொருவர் மித்துரு கிரகங்களாகவும் கூடியிருக்க தீர்க்காயுளாம்.

மேஷவிருச்சிகம் இலக்கினமாக அதில் அங்காரகன் இராகு சூரியன் சந்திரன் இவர்கள் கூடியிருக்கில் ஆயுதத்தால் மரணமாவான்

சந்திரனேடு சநி அங்காரகன் சூரியன் இவர்கள்கூடில் திரேகபங்கங்களால் மரணமாவான்.

எட்டாமிடத்தில் சூரியன் நிற்கில் அக்கினியாலும் சந்திரன் நிற்கில் ஜலத்தாலும் செவ்வாய் நிற்கில் ஆயுதத்தினுலும் புதன் நிற்கில் மூனியாலும் மலையாலும் வஞ்சனையினுலும் வியாதியினுலும் குரு நிற்கில் வியாதியினுலும் நீரினுலும் சுக்கிரன் நிற்கில் பசி தாகங்களாலும் சனி பாம்பு நிற்கில் விஷத்தாலும் வியாதியினுலும் மரணமாவான்.

சநி கடகத்திலும் சந்திரன் மகரத்திலும் நிற்கில் உதரநோயாலும் நாராசத்தாலும் மரணமாவான்.

அங்காரகனும் சனியும் நாலாமிடத்தில் நிற்க சூரியன் எட்டு பனிரண்டில் நிற்கில் கிணற்றில் விழுந்தாவது மலைகளிலேறிவிழுந்தாவது மரணமாவான்.

சூரியன் சந்திரன் இவர்கள் கன்னியில் நிற்க இவர்களைப்பாபக்கிரகங்கள்பார்க்கினும் கூடினும் விஷத்தினுல் அல்லது அலகையால் மயக்கத்தால் மரணமாவான்.

இலக்கினம் மீனமாக அதில் சந்திரன் சூரியன் இவர்கள்நிற்க இவர்களைப் பாபக்கிரகங்கள் கூடில் குளத்தில் வீழ்ந்து மரணமாவான்.

கன்னியில் சூரியன் சந்திரன் நின்று இவர்களுக்கு முன்னும்பின்னும் பாவக்கிரகங்கள நெருக்கில் வாயினுல் இரத்தம் கக்கி மரணமாவான்.

சந்திரன் பாபரோடு மகரகும்பங்களில் இருக்க பாசத்தால் மரணமாவான்.

சந்திரனுடனேயாவது அல்லது சந்திரனுக்குத் திரிகோணத்திலேயாவது பாபக்கிரகங்கள் இருக்கில் உடல் பிளப்புண்டு மரணமாவான்.

சனி சூரியன் பத்தாமிடத்தில் இருக்க அங்காரகன் நாலாமிடத்தில் இருக்கில் வாகநத்தால மரணமாவான்.

சூரியன் நாலாமிடத்தில் இருக்க இவனைச்சந்திரன் அல்லது சனிபார்க்க அங்காரகன் பத்தாமிடத்தில் இருந்தாலும் அல்லதுநாலாமிடத்தில் சூரியன் எட்டாமிடத்தில் சனி இருந்தாலும் அல்லது இலக்கினத்தில் சனியும் பத்தாமிடத்தில் அங்காரகன் இருந்தாலும் சர்ப்பத்தால் மரணமாவான்.

சனி நாலாமிடத்தில் நிற்க சந்திரனை அங்காரகன் பார்க்கினும் சூரியன் சந்திரன் இவர்கள் பத்தாமிடம் இரண்டாமிடம் நாலாமிடம் இப்படி யிருக்கில் புழுத்து மரணமாவான்.

(எட்டாம்பாவம்.)

ஐந்து நாலு ஏழாமிடங்களில் அங்காரகன் சூரியன் நிற்கில் வல்பிணியால் மரணமாவான்.

இலக்கினத்தில் சூரியன் சந்திரன் இருக்க, ஏழாமிடத்தில் அங்காரகன் இருக்கில் தேரில் இருந்து வீழ்ந்து மரணமாவான்.

சனி மகரகும்பங்களில் இருக்க சூரியன் அங்காரகன்கூடினாலும் அல்லது சூரியன் சந்திரன் அங்காரகன் இவர்கள் நாலுஏழு பத்தாமிடங்களில் இருந்தாலும் துர்மரணமாவான்.

சூரியன் அங்காரகன் இவர்கள் ஏழாமிடத்திற்கூடி இருக்க சனி எட்டாமிடத்தில் இருக்கினும் சந்திரன் நாலாமிடத்தில் இருக்கினும் சமுத்திரத்தில் வீழ்ந்து மரணமாவான்

சூரியன் அங்காரகன் சந்திரன் இவர்கள் இலக்கினம் ஐந்து ஒன்பதாமிடங்களில் இருக்க எட்டாமிடத்தில் சனி இருக்கினும் இடிவீழ்ந்துமரணமாவன்.

சனி சரராசியிலிருக்க அன்னியதேசத்தில் மரணம்.

திரராசியிலிருக்கத் தன்வீட்டில் மரணம்.

உபயராசியிலிருந்தால் பிறந்தவீடல்லாமல் வேறேவீடுகெட்டி அதில் மரிப்பான்.

கடகம் இலக்கினமாகத்தோன்றி அங்காரகனும் புதனும் இருக்க அட்டமாதிபதி மூன்றிலும் இலக்கினேசனும் கேதுவும் நாலாமிடம் நிற்க ராகுவும் குருவும் இலக்கினேசனைக்காண சூரியனும் சுக்கிரனும் வியத்தானமேறினால் அற்பாயுளாய் ஏழாவது ஆண்டில் மரணமாவான்.

இராகுதிசை இரவிபுத்தியும் முப்பத்திநாலாவதாண்டு முதல்மாதமும் ஷை அற்பாயுளுக்கு மாரகமாம்.

சிம்மராசி இலக்கினமாக இலக்கினாதிபதி அங்காரகன் புதனோடு கூடி லாபமேற சந்திரன் உச்சம்பெற்று குரு சுக்கிரனோடு கூடி கர்மஸ்தானத்தில் நிற்க சனி இலக்கினத்தில் நின்று குருபார்வையானால் பூர்ணயுள் வயது அறுபதுக்குமேல் நடக்கும்.

ரிஷபம் இலக்கினமாகி இரண்டில் சுக்கிரன் மூன்றில் சூரியன் நாலில் அங்காரகன் புதன் ஒன்பதில் சந்திரனும் நிற்க அட்டமாதிபதி அட்டமத்திலும் ஆயுள்காரகனும் குருவும் ஆறுமிடமேறி நின்றால் பூரணயுளாம் சந்ததி விருத்தியும் சுகஜீவியுமாக இருப்பார்கள்.

எட்டாம்பாவபலன்.

முற்றிற்று.

ஒன்பதாம்பாவபலன்

ஒன்பதாமிடத்தில் சூரியனிருந்தால் பூமி யுடையவன் தருமசிந்தையுள்ளவன் தபசியாக இருப்பான் அல்ப்பபாக்கியம் நல்லகுணமுண்டு சுகமுண்டு தகப்பன் திரவியத்தால் ஜீவிப்பன் கலகப்பிறியன் கிரந்திரோகமுண்டு வியாபாரம் செய்வான்.

சந்திரனிருந்தால் நல்ல சுகசரீரன் புத்திமான் ஆலயம் குளம் கட்டுவான் பிரதிஷ்டைபண்ணுவான் தனதான்யமுடையவன் சுககருமங்களுணடு நினைத்தகாரியம் சித்தியுண்டு நல்ல புத்திரனுண்டு வெகுபாக்கியவான் குருவையும் பிதாவையும் பூசிப்பான் வாணிபபலனுண்டு சூரன் அற்பாயுள் பாலாரிட்டம் தப்பினுல் சுகமுண்டு பாபங்களை வெல்லத்தக்கவன் செல்வமுண்டு தேவதர்பத்தியுண்டு

செவ்வாயிருந்தால் தெய்வபக்தியில்லாதவன் பிதுர்ரோகமுண்டு சேவுகாவிர்த்தி கொடூரன் வியாபாரமுள்ளவன் பாக்கியநாசம்.

புதனிருந்தால் வெகுஜனமுடையவன் திரவியமுண்டு வித்தையுண்டு ஆசாரமுண்டு தருமசிந்தனையுண்டு.

வியாழனிருந்தால் தர்மகருமமுள்ளவன் சுபமுடையவன் விரதமுடையவன் யோகம் அனுஷ்டானமுள்ளவன் தானதருமமுள்ளவன் தனகர்த்தனுவான் பிதுர் தீர்க்காயுள் ரூஜசமுகமந்திரியாவான் ஆசாரம் தீர்க்காயுள் உண்டு.

சுக்கிரனிருந்தால் தருமகுணவான் ஞானவான் தபசி அனுஷ்டானமுள்ளவன் சுயகாரியப்பிறியன் குருவிசுவாசமுள்ளவன் பிதுர் தேவதையைப் பூசிப்பான் பாக்கியமுள்ளவன் நல்ல ஸ்திரீயும் பெரும்புகழுமுண்டு தருமசிந்தனையுள்ளவன்.

சனியிருந்தால் கோவில் திருப்பணிசெய்வான் குளம் கிணறு கட்டிவைப்பான் மாதுர்பிதுர்பீடை நந்தவனம் பிரதிஷ்டைபண்ணிவைப்பான் ஸ்திரீநாசம் பாக்கியம் பூச்சியம்.

ராகுகேது யிருந்தால் பெண்சாதி வசமாவன் புத்திரன் பூச்சியம் சூஸ்த்திரசம்பிரதாயம் சேவுகாவிர்த்தி தருமசிந்தனையில்லாதவன் ஸ்திரீதோஷம் பாக்கியநாசம் பிதுர்தோஷமுண்டு.

ஒன்பதில் சுக்கிரன் வியாழனிருந்தால் ஞானயோகம் ராஜயோகம் தீர்க்காயுள்.

ஒன்பதுக்கதிபன் ஒன்பது மூன்று ஒன்றில் சூரியனுடன் நிற்க பிதுருக்குதோஷமுண்டு.

சூரியன் ஆறுக்கதிபனுடன் கூடி ஒன்பதில் நிற்க தத்துபுத்திரனுவான் சந்திரன் செவ்வாயிருந்தால் பிதாவுக்கு உஷ்ணவியாதியுண்டு.

ஒன்பதில்கேது இருந்து சூரியன் சனிபார்த்தால் வெகுபாக்கியமுண்டு செவ்வாய் புதன் நிற்க யாகம் பண்ணுவான்.

சந்திரன் புதன்நிற்கதருமசிந்தையாயிருப்பான்திரவியமுண்டு.

(ஒன்பதாம்பாவம்.)

ஒன்பதாமிடத்தில் சுக்கிரன் வியாழன் புதனிருந்தால் அந்த ராசிக்கதிபதி உச்சனுயிருந்தால் புதன் திசைபுத்தியில் பூர்வதனம் புதையல் எடுப்பான்.

ஒன்பதில்ராகு தனித்திருந்து ஆயுட்கிரகம் பலயீனமாயிருந்தால் ஜாதகனுக்கு புதன் திசை வந்தால் பிதுருக்கு மரணம்.

ஒன்பதுக்கதிபன் மூன்றில் அல்லது பத்தில் இருந்தால் அவன் குருடனுவான் அல்லது சூதுகாரனுகவும் பலபேர் தூஷணிக்கப்பட்டவனுகவும் திருடனுகவுமிருப்பான்.

ஐந்து ஒன்பதில் ருகு கேது இருந்தால் சங்கீத வித்தையில் ஜீவனம் பண்ணுவான்.

நாலுக்கதிபன் ஒன்பதில் இருந்து சுபர்பார்த்தால் அல்லது கூடினுல் அவன் அஞ்சன வித்தையைக் கற்றிருப்பான்.

சுக்கிரன் பகை நீசமாய் அவனுக்கு ஐந்து ஒன்பதில் பாபர்நிற்க கல்யாணமில்லை சன்னியாசியாய் முத்தியடைவான்.

ஐந்து ஒன்பதுக் குடையவர்கள் சூரியனுடனேகூடி சனிபார்க்க இருந்திடில் மாதாவுக்கரிட்டம்.

ஐந்து ஒன்பதுக் குடையவர்கள் சூரியனுடனேகூட சனியும் செவ்வாயும் மூன்ருமிடத்திலிருக்க பிதாவுக்கரிட்டம்.

ஜென்ம இலக்கினத்திற்கு ஒன்பது ஐந்து பத்தில் சனி செவ்வாய் சூரியன் இந்த மூவரில் ஒருவர்நின்ருல் பிதாவுக்கரிட்டம்.

ஜென்மத்தில் செவ்வாயும் ஏழில் சூரியனுமிருக்க பிதாவுச்சீனம் குரு பார்க்க மூன்று வருஷம்வரைக்கும் தந்தை யிருப்பான்.

ஒன்பதாமிடத்தில் சனி நிற்க கேந்திர ஸ்தானங்களில் செவ்வாய் நின்ருல் தந்தைக்கரிட்டம்.

ஒன்பதாமிடத்ததிபதிக்கு அஷ்டமத்திலும் ஜென்மாதிபதியோடும்சூரியன் செவ்வாய் கூடிநிற்கில் பிதாவுக்கரிட்டம்.

ஜென்மலக்கினத்திற்கு ஐந்து ஒன்பதாமிடத்தில் பாவர்நிற்ககேந்திரஸ்தானங்களில் ராகு கேதுவிருக்க தந்தைக்கரிட்டம்.

ஒன்பதாமிடத்ததிபதிக்கு ஏழில் சனி செவ்வாய் நிற்க சுபக்கோள் பார்வையில்லாவிடில் தந்தைக்கரிட்டம்.

ஒன்பதாமிடத்தில் சனியும் பஞ்சமஸ்தானத்தில் சூரியனும் பாம்பும் இருக்க தந்தைக்கரிட்டம்

கும்ப இலக்கினமாகி சூரியன் ஒன்பதாமிடத்திலிருக்க சுக்கிரன் அஷ்டமத்தில்போக சுக்கிரதிசை சூரியபுத்தி நடக்கும் காலத்தில் பிதாவுக்கரிட்டம்.

கும்போதயமாகி இரவி ஒன்பதில் நிற்க அவருடன் தனலாபாதிபதியும் கர்மாதியும்சேர பிதுர் பாக்கியமுண்டு.

அவர்களுடன் அட்டமாதிபதிகூடி ஒன்பதோன் அட்டமத்திலிருக்க பிதுர்பாக்கியம் கிடைத்தாலும் தங்காது.

ஒன்பதாமிடத்ததிபன் பெலவானுக இருந்து அவனிருந்த ராசியாதிபதி கேந்திரத்திலிருந்தால் தந்தைக்கி மேலானபாக்கியமும் கீர்த்தியும் பெற்று இராஜப்பிறியனுமாக சஞ்சரிப்பன்.

பாக்கியாதிபதி சூரியனைக்கூடி ஆறுமிடத்தில் நிற்க பிதாவின் சொல்லைக்கேட்டு அடங்கி நடப்பன்.

பாக்கியஸ்தானுதிபதி ஏறிய அங்கிசாதிபதியை பிதிர்காரகன்பார்க்கில் தெய்வபக்தி குருபக்தி யுடையவனுக இருப்பன்.

கர்மாதிபதியும் சப்தமாதிபதியும் மித்துருக்கிரகமாகி சேர்ந்து சுபக்கிரகராசியில் நின்றால் இவனுக்கு களத்திரத்தினுல் தனம் வந்து சேரும்.

கர்மாதிபதி உச்ச க்ஷேத்திரத்தி லிருந்து பத்தாமிடத்தை பார்த்திடில் அவனுக்கு பூமியில் பொருள் கிடைக்கும்.

ஒன்பதாமிடத்தோனும் குருவும் சுபவர்க்கமேற ஒன்பதாமிடத்தில் நின்றவனும் சுபக்கிரகங்களாக அவர்களுடைய திசைபொசிப்பில் பாக்கியங்கள் வந்துசேரும்.

பாக்கியஸ்தானத்தில் பாவக்கிரகங்கள் அஸ்தமன நீச்சங்களாக இருக்க தானதருமம் செய்யமாட்டான்.

பாக்கியஸ்தானத்தில் பாவக்கிரகங்கள் உச்சமாட்சியாக இருந்தால் நாள் சென்று பாக்கியங்கள் வந்துசேரும்.

ஒன்பதாமிடத்தில் நின்றவனும் பத்துக்குடையவனும் உச்சமாட்சியங்கிசத்தே இருந்தாலும் ஐந்தாமிடத்தோனும் உச்சாங்கிசத்திலிருந்தாலும் இராஜயோகம் வரும்.

ஒன்பதாமிடத்திற் குடையோன் தனது வீட்டிலிருந்தாலும் பார்த்தாலும் ஒன்று ஒன்பதாமிடத்தில் பாவக்கிரகமிருக்க சுக்கிரனுங்கூட ஒன்பதாமிடத்தோனுடன் சந்திரனும் கூடிநின்றால் அவன் குருத்துரோகி யாவான்.

ஒன்பதாமிடத்தை குருபார்க்க தோஷமில்லையாம்.

ஒன்பதாமிடத்தையாவது ஸ்தானுதிபதியையாவது செவ்வாய் பார்க்கில் நிலங்களும் பூமிகளும் கிடைக்கும்.

புதன்பார்க்கில் பாக்கியங்கள் கிடைக்கும்.

சுக்கிரன் பார்க்கில் வாகனப் பிராப்தி கிடைக்கும்.

சந்திரன் பார்க்கில் சுகவானுவன்.

ஒன்பதாமிடத்தை சனிபார்க்கில் இவனுக்கு உதடுகள் பெருத்துக்காணும்.

ஷை ஸ்தானத்தை சூரியனும் சந்திரனும் குருவும்பார்க்கில் ஆடு மாடு வாகனுதிகளும் வித்தை லாபமும் கிடைக்கும்.

(ஒன்பதாம்பாவம்.)

சூரியன் செவ்வாய் புதன் இவர்கள் ஒன்பதாமிடத்தைப் பார்க்கில் சேனாதிபதியாகவும்வாகனபலன்களும் விநோதவித்தையும்கற்பன்

சூரியன் சுக்கிரன் குரு மூன்றுபேர்களும் ஒன்பதாமிடத்தைப் பார்ப்பாராகில் தீர்க்கமாக வித்தையில் வல்லவனாவான்.

சூரியனும் சனியும் பார்ப்பாராகில் நல்லகுணமும் புத்தியும் பாக்கியங்களு முடையவனாவான்.

ஷை ஸ்தானத்தில் நின்றால் யாகாதிமுதலிய கர்மகாரியங்களை செய்ய வல்லவன்.

சந்திரனும் குருவும் செவ்வாயும் ஒன்பதாமிடத்தைப் பார்ப்பார்களாகில் ஜனச்சேர்க்கையும் சுகமும் நல்லஸ்திரீகளையு முடையவனாவான்.

சந்திரனும் புதனும் பார்க்கில் நல்ல வீடுகளும் கட்டில் மெத்தைமுதலிய சயனசுகங்களும் ஸ்திரீகளையு முடையவனாவான்.

குருவும் சுக்கிரனும் புதனும் ஒன்பதாமிடத்தைப்பார்க்கில் அதிகவித்தையும், எல்லாக்கிரகங்களும் பார்க்குமாகில் தனவானாகவும் ராஜசமானனாகவும் ஐந்தாமிடத்தில் சுபர்களுமிருந்தால் இவனுக்கு சமானமில்லாத ஐஸ்வரியவானாகவு மிருப்பன்.

ஒன்பதாமிடத்தில் சந்திரன் நிற்க புதனும் சனியும்சேர்ந்து பார்ப்பாராகில் பூபதியாக இருப்பான்.

சூரியனும் சந்திரனும் ஒன்பதாமிடத்தில் நிற்க பாக்கியவானவன்.

சூரியனும் செவ்வாயும் சேர்ந்து பார்க்கில் ராஜர்களுக்குப் பிரியனாவான்.

சூரியன் சந்திரன் சுக்கிரனும் ஒன்பதாமிடத்தில் நிற்க தனது ஸ்திரீயோடு யென்னேரமும் சண்டை சச்சரவு செய்யக்கூடியவனாவன்,

சூரியனும் சனியும் ஒன்பதாமிடத்திலிருக்க தனதுவெள்ளாட்டியைச் சேர்ந்தும் விரோதியுமாவான்.

சூரியன் செவ்வாய் சுக்கிரன் ஒன்பதாமிடத்தில் நிற்க கடுங்கோபியாகவும் வம்பு விவகாரவழக்குகளில் பிறியனாகவும் தனது மனைவியுடன் சண்டைக்காரனாகவும் இருப்பான்,

ஒன்பதாமிடத்தில் சனியிருந்தால் பிதாவுக்குப் பீடையும் தான் ஒருவருக்கும்அடங்காத தன்னிஷ்டப்பிரபுவாயும் துஷ்டசகவாசமுடையவனாயும் சுகமில்லாதவனாகவு மிருப்பான்.

[ஒன்]பதாமிடத்தில் சூரியன் குரு சுக்கிரனிருந்தால் பரத்தையர் நேசனாகவும் பண்டிதனாகவும் பொருளுடையவனாகவு மிருப்பான்,

ஷ ஸ்தானத்தில் சூரியன் சனி வியாழன் இருக்கில் சிறந்த கல்வி யுடையவனவன்.

ஒன்பதாமிடத்தில் சூரியனும் சுக்கிரனும் நின்றால் ராஜதெண்டனை கள் மிகுதியாய் வரும்.

ஷ ஸ்தானத்தில் சுக்கிரன் செவ்வாய் புதன் இருந்தால் சதா மனச் சஞ்சலமுடையவனுகவே இருப்பான்.

ஒன்பதாமிடத்தில் குரு சுக்கிரன் புதன் சந்திரன் இந்த நான்கு பேர் களும் நிற்பாராகில் தானதர்மயாகாதி கர்மங்களைச்செய்யும் தர்மராஜனென்றே பெயர் எடுப்பான்.

ஒன்பதுக்குடையவர் ஆறு எட்டு பனிரெண்டில் சத்துருவீட்டில் நீச்சர் பார்க்க கொளுராங்கிசமேறி நீச்சம்பெற்றிருந்தால் அவனுடைய திரவியங்கள் முழுவதும் நாசமாய்ப் போய்விடும்.

ஒன்பதாமிடத்தோன் சுபக்கிரகங்களோடுகூட சுபர்கள் பார்க்க ... பதாமிடத்தில் சுபர்கள் நிற்க பார்க்க பி... ...கள். கியமும் பெற்று சுகத்தை அனுபவி...

ஒன்பதாமிடத்தோன் சிங்காங்கிசமேற... ஜன்மாதிபதியும் பத்துக் குடையவனும் பார்க்க நி...ல் சகலபாக்கியமும் பெற்று தானதர்ம... ...செய்யக்கூடிய கீர்த்திமானுவான்.

ஒன்பதாமிடத்திற் குடையவன் கோபுராங்கிசமேறிஇலக்கினதிபதியும் பத்துக்குடையவனும் பார்க்க நின்றால் தன் குடும்பங்களுக்கும் பந்துக்களுக்கும் சிரேஷ்டவானுக இருந்து நன்மை தீமைகளுக்கு செய்யும் சடங்குகளை செவ்வையாகத்தெரிந்து நடத்தி வைப்பவனுவான்.

ஒன்பதாமிடத்தில் சூரியன் புதன் சுக்கிரன் மூவர்களும் நிற்க ஒன்பதுக் குடையோர் சுபர்களுக்கு மத்தியில்நின்று பார்க்க தருமவானுகவும் பாக்கியவானுகவும் இருப்பான்.

ஒன்பதாமிடத்தில் எல்லாக்கிரகங்களுமிருக்க ஒன்பதுக்குடையவனும் சூரியனும் கூடி ஆறு எட்டு பனிரெண்டில் பாவர்கள் பார்க்க நின்றால் இவன் தந்தைக்கு அந்தியகாலத்தில் உதவாத புத்திரனுவான்.

ஒன்பதாமிடத்திற் குடையவனும் சூரியனுங்கூடி கேந்திரங்களில் நிற் ஐந்து ஒன்பதில் சுபக் கிரகங்கள்பார்க்க சுபர்கள்நின்றால் தகப்பனுக்கு அந்தியகாலத்தில் கூடவேயிருந்து உதவிசெய்து சகல கிரிகைகளையும் செய்யக்கூடிய ஜென்மாந்திர புத்திரனுவான்.

சுக்கிரனும் சந்திரனும் நாலாமிடத்திற் குடையவனும் ஆறு எட் பனிரெண்டில் நின்றால் இவன் தகப்பனுக்கு இராத்திரிகால தில் மரணங்கிடைக்கும்.

ஐந்து ஒன்பதுக்குடையவர்கள் கேந்திர கோணங்களில் சுபக்கிர கள் பார்க்க நின்றால் இவன் தந்தைக்கு பகற்காலங்களில் ணங் கிடைக்கும்

(ஒன்பதாம்பாவம்.)

ஒன்பதுக்குடையோன் வலிமைபெற்று சுபர்கள் வீட்டில் நற்கோள் பார்க்க நின்ருல் தெய்வங்களை இகழாமல்அறிவைச் செலுத்தி ஜெபதப தியானங்களை செய்வதன்றி மேலான தபசியென்றும் உலகில் வாழ்வன்

ஒன்பதாமிடத்தில் சூரியன் செவ்வாய் புதன் குரு இவர்கள் நிற்க ஒன்பதுக்குடையவனும் இலக்கிஞதிபதியும் அட்டமத்தைச்சேர கும்பம்இலக்கினமாகில் சோதிடசாஸ்திரம் தெரிந்துசுயபாக்கியம் பிதிர் பாக்கியமில்லாமல் யாவருக்கும் பிறியனுகி பந்துக்கள் கிலேசஞகவு மிருப்பான்.

ஒன்பதுக்குடையவன் அட்டமாதிபனது அங்கிசம் பெறினும் ஒன்பது எட்டுக்குடையவர்கள் இலக்கினத்தில் நிற்கினும் மதிக்கு ஒன்பதுக்குடையவன் பதிஞேராமிடத்திலிருக்கினும் இவன் பிதிர் வாக்கிய பரிபாலனம் பண்ணுவான்.

ஒன்பதாமிடத்திற் குடையவன் சுபக்கிரகங்களுடனே கூடி கேந்திர கோணங்களிலே நட்பாட்சி யுச்சம் பெற்றிருக்கில் குருகடாட்சம் ஞானம் கல்வி குணம் தபம் ஒழுக்கம் தருமம் ஐஸ்வரியம் இவைமுதலியவும் பெற்று வாழ்வன்.

சூரியன் ஒன்பதாமிடத்திற் குடையவன் இவர்கள் பகைநீசராசிகளில் இருக்க இவர்களுக்கு குருதிருஷ்டி இன்றி பாபர்திருஷ்டி அல்லது பாபர்சகிதம் இருக்கின் துரோகியாம் அல்லது சகலரையும் நிந்திப்பவனும்.

சூரியன் ஒன்பதாமிடத்திற் குடையவன் இவர்கள் பகை நீசராசிகளில் இருக்கினும் கூடினும இவர்கள் பாபக்கிரகங்களுடனே கூடி அல்லது திருஷ்டியாவதும் பெற்று சஷ்டாஷ்டமவியஸ்தானங்களில் இருக்கினும் இவன் பிதா வியாதியால் நொந்து சாவான்.

ஒன்பது இரண்டு பத்தாமிடத்திற் குடையவர்கள் நட்பாட்சி யுச்சம் பெற்று கேந்திரகோணங்களில் இருக்கில் இராஜயோகத்தை அனுபவிப்பான்.

சூரியனுக்கு எட்டாமிடத்தில் இருக்கின்ற கிரகங்கள் எட்டாமிடத்ததிபதிநின்ற இராசியாதிபதி ஏறிநின்ற அங்கிசத்திலும் அதற்குத் திரிகோணங்களிலும் சனி வருங்காலம் சனியுடன்கூடிநின்றகிரகங்களின் திசை பொசிப்பில் பிதுர்மரணம்.

ஒன்பதாமிடத்திற்குடையவன் சூரியன் சந்திரன் இவர்கள் புடங்களை ஒன்ருகக்கூட்டி இலக்கிஞதிபன் புடத்திலே மாறி வந்தநாளில் சனிவருநாள் பிதுர்மரணம் இலாபாதிபன் அங்கிசமான இராசி மாதமே கிறியாணமாதமாம்.

ஒன்பதாமிடம் சரராசியாய் ஒன்பதாமிடத்திற்குடையவன் சரராசியில் இருக்க சூரியன்திரேகாணம் சரராசியாக ஒன்பதாமிடத்திற்கு

உடையவனுக்கு சஷ்டாஷ்டாதிபதிகள் சரக்காலாக இவன் பிதாவின் மரணகாலத்திற் குதவான்.

ஒன்பதாமிடத் திரேகாணாதிபன் சூரியனாகில் இவன் பிதா சுரரோகம் பித்தரோகம் இவற்றால் மரணம். சந்திரனாகில் உதரரோகம் அதிசாரம் ஜலகோஷம்இவற்றால் மரணம் அங்காரகனாகில் இரத்தரோகம் ஆயுதவிரணம் வெப்பு இவற்றால் மரணம் புதனாகில் வாதரோகம் பயித்தியரோகம் இவற்றால் மரணம். குருவாகில் சூலைநோய் குன்மரோகம் இவற்றால் மரணம். சுக்கிரனாகில் நீர்ப்பாடு விஷம் சிலேத்துமரோகம் இவ்ற்றால் மரணம் சனியாகில் வாதரோகம் சூலை வல்பிணி இவற்றால் மரணம். இராகுவாகில் விஷரோகம் குஷ்டம் சர்ப்பாதியவிஷங்கள் இவற்றால் மரணம்.

ஒன்பதாமிடத்தில் இராகு இருக்க அல்லது சர்ப்பத்திரேக்காணமாய் இவன் பிதா சர்ப்பந்தீண்டி மரணமாவான்.

ஒன்பதாமிடத்தில் இருந்த கிரகங்கள் மிருகத் திரேக்காணத்தில் இருக்கில் மிருகத்தால் மரணமாவான்.

குளிகன் இருக்கினும் அல்லது ஒன்பதுக்குடையவன் சூரியனாயிருக்கினும் படைத்திரணத்தால் மரணமாவான்.

பிதுர்த்தானாதிபதி பாவக்கிரகங்களோடு சேர பாவக்கிரகங்கள் பிதிர் சகோதர ரோகத்தானங்களிலாயினும் மிருத்துதான பிதிர்த்தானங்களிலாயினு மிருக்க பிதா அரிஷ்டமாவான்.

பிதிர்தானாதிபதி கெட்ட ஸ்தானங்களில் தன் பெலம் குறைந்து யிருந்தாலும் பிதுர்த்தானத்தில் சூரியனும் செவ்வாயு மிருந்தாலும் பிதிர்த்தானாதிபதி சத்துரு நீசவீட்டிலிருக்க பிதிர்தானத்தை கெட்டகிரகங்கள் பார்த்தால் பிதா அரிஷ்டமாவன்.

ஒன்பதாம் பாவபலன்

முற்றிற்று.

பத்தாம் பாவபலன்.

பத்தாமிடத்தில் சூரியனிருந்தால் நல்ல புத்திவானுகவும் குணவானுகவும் இருப்பன். அதிக திரவியமுண்டு வித்தை புத்தியுள்ளவன் சாமார்த்தியவான் சிலவும் உண்டு பந்துக்களுண்டு வாகனமுண்டு பிதுர்பாக்கியமுண்டு.

சந்திரனிருந்தால் அதிககாமியாயிருப்பான் விதவைகலவிப்பிரியன் காரியவான் தனவான் தீர்க்காயுளுண்டு உத்தியோகமுள்ளவன் ஆலயம் குளம் கிணறு முதலிய திருப்பணி வேலே செய்து முடிப்பன் பெண்சாதி விரோதி சற்சனவான் தொடுத்தகாரியம் ஜெயம் பண்ணுவான் கல்வியில் பிரதானியாயிருப்பான்.

செவ்வாய் இருந்தால் திரவியவான் சரீரபுஷ்டி குலதிலகன் இராஜப்பிரியன் தேவாலயம் குளம் இதுகளுக்கு அதிகாரி வெகுதனம் புதைத்துவைப்பான் தானியமுண்டு சதுர் உபாயமுண்டு பசுக்கள் உண்டு சூரனுக விடாத நிலேமையுண்டு தாஷ்டீகமும் ஆசாரமுமுண்டு.

புதனிருந்தால் வெகு மங்களமுடையவன் சுபசந்தோஷமுண்டு தர்ம சித்தியுண்டு திரவியசம்பார்த்தனேநேத்திரரோகம் யோகஞானமுடையவன் பிரதானி புத்தியும் கீர்த்தியும் கல்வியும் உண்டு கீர்த்திப்பிரதாபம் தெய்வபக்தி பிராமணுள்பக்தி ஆசாரவானுகயிருப்பான்.

வியாழனிருந்தால் வித்துவான் அசுவவாகனமுண்டு வெகுதனமுடையவன் அநேக ஜனங்களேப்பூசிப்பான் தனதானிய லாபமுண்டு யெக்கியகர்த்தன் பிரதான அதிகாரி தாசிசாவுகாசமுள்ளவன் பிடித்தகாரியம் கைகூடும் தொடுத்தகாரியம் நிறைவேற்றவல்லவன் சகல உபாயம் கல்வியும் வாகனமும் தீர்க்காயுளும்உண்டு.

சுக்கிரனிருந்தால் வெகுதனவான் கீர்த்திமான் வாதரோகன் தீர்க்காயுள் கல்வியும் வாகனமும் கிருஷையுமுண்டு ஸ்திரீகூட்ட முண்டு.

சனியிருந்தால் கோவில் பிரகாரம் குளம் கோபுரம் கட்டுவான் சுயபூமி போக்கிவிடுவான் தூரதேசத்தில் ஜீவனம் மந்திரி புத்தியுள்ளவன் குருபக்தி தானதர்மமுண்டு சூரன் கிராமாதிகாரன்.

இராகுகேது இருந்தால் சர்வஅயிஸ்வரியம் உண்டு சோரப்பெண்சாதி சங்கமன் தாசிமார்க்கன் கொவி வித்தையுள்ளவன் தூரயாத்திரையுடையவன் வெகு ஸ்திரீயுண்டு வெகு புத்திருண்டு பிரதாப முண்டு பரோபகாரி பெலம் ஜெயம் தனமுண்டு.

சந்திர இலக்கினத்திற்குப் பத்தில் சூரியனிருந்தால் ராஜப்பிரியன் புத்திரரால் நல்ல பலனே அனுபவிப்பான்.

சந்திரனிருந்தால் அழகு தனமுடையவன்.

செவ்வாய் நின்றல் கோபி பூஜிதனுவான்.

புதன்நின்றால் தூரதேசங்களில் கல்விப்பிரியனாகவும் துர்த்தானமு பண்ணுவான்.

வியாழன்நின்றால் தனமுண்டு போகபாக்கியம் பிரசித்தியாவான்.

சுக்கிரனிருந்தால் தனமும் போகபாக்கியமும் ஸ்திரீவசியனுமாவான்

சனியிருந்தால் வியாதியுடையவன்.

ராகுகேதுநின்றால் நல்ல ஸ்திரீசங்கமன் தூரதேச யாத்திரை துஷ்டனாகவும் கல்வியுடையவனாகவுமிருப்பான்.

பத்துக்கதிபன் இரண்டில் அல்லது கேந்திரங்களில் அல்லது பதினொன்றில் உச்சனாகவிருந்தால் நானாவிதத்தில் திரவியம் வரும்.

பத்தாமிடத்திற் கதிபதி சூரிய அங்கிசமானால் காய் கிழங்கு கனிவர்க்கம் பயிர்செய்தும் வியாபாரத்தினாலும் வயித்தியத்தினாலும் சிறப்பான வேலைகளினாலும் ராஜ உத்தியோகஸ்தர்களை அனுசரித்து திரவியம் தேடுவான்.

சந்திர அங்கிசமானால் வஸ்திரங்கள் வியாபாரஞ்செய்து ஸ்திரீ தொழிலாலும் வீடுகட்டுகிற சிற்பத்தொழிலாலும் வியாபாரஞ் செய்தாகிலும் திரவியந்தேடுவான்.

செவ்வாய் அங்கிசமானால் மந்திர உபதேசத்தாலும் சோசிய சாஸ்திரங்களாலும் ஆயுதம் நவரத்தின பரிக்ஷைகளினாலும் திரவியம் தேடுவான்.

புதன் அங்கிசமானால் எழுத்துவாசனை மூலியமாயாவது அல்லது காவிய வித்தையினாலாகிலும் சோசியத்தினாலாகிலும் திரவியந்தேடுவன்

வியாழன் அங்கிசமானால் சிவபூசையினாலாகிலும் ராஜாவினாலாகிலும் திரவியம் தேடுவான்.

சுக்கிரன் அங்கிசமானால் நவரத்தின வியாபாரத்தினாலும் ஆனை குதிரை எருமை முதலான நாலுகால் ஜீவன்களாலும் ஸ்திரீ சங்கையாலும் திரவியந் தேடுவான்.

சனி அங்கிசமானால் ஆளடிமையாலும் சேவுகாவிர்த்தியாலும் புஞ்சை தானியங்களாலும் சுமை சுமந்தும் வயித்திய த்தொழிலாலும் திரவியம் தேடுவான்

பத்தாமிடத்தில் சூரியனிருந்தால் பிதாவினால் திரவியம் சேரும்.

சந்திரனிருந்தால் மாதாவினால் திரவியம் சேரும்.

செவ்வாய் நிற்கில் சகோதரத்தினால் திரவியம் உண்டு சத்துருக்களாலும் பணம்சேரும்.

புதனிருக்கில் மாமன் பந்துக்களால் திரவியம் உண்டு.

வியாழன் நிற்க புத்திரனால் குருவினால் திரவியம் சேரும்.

சுக்கிரன் நிற்க ஸ்திரீகளால் திரவியம்சேரும்.

சனி நிற்கில் ஆளடிமையால் திரவியம்சேரும்.

(பத்தாம்பாவம்.)

துக்கதிபன் சராசியிலிருந்தால் பிரதேசங்களில் போய் திரவியம் தேடுவான் ஸ்திரராசியிலிருந்தால் தன்னுடைய தேசத்திலே யே திரவியம் தேடுவான் உபயராசியிலிருந்தால் தன்னுடைய தேசத்திலாவது பிரதேசத்திலாவது திரவியம் தேடுவான்.

பத்தில் சுபக்கிரகமிருந்து நட்பாட்சி உச்சமானால் தனவான் கீர்த்திமான் உபாயவித்தை யுண்டு புத்திமான் தருமவான் மோட்சமுண்டு இரண்டு ஏழு பத்துக்கதிபன் இவர்கள் மூவரும் ஒரு ராசியிலிருந்தால் இவன் வெகுஜனங்களை வென்று ஜெயம்பண்ணி பேர்வாங்குவான் யோகவானாக யிருப்பான்.

சூரியன் செவ்வாய் சந்திரன் கேந்திரங்களிலிருந்து சுபக்கிரகம் ஆறு எட்டு பன்னிரண்டில் இருந்து இலக்கினாதிபன் பெலவீனமா யிருந்தால் தரித்திரம் கெட்டநடத்தை வெகுதுக்கமுடையவன் பிச்சையெடுப்பான்.

புதன் சந்திரன் கேந்திரங்களில் இருந்து இலக்கினாதிபனை சுபர் பாரா விட்டால் உன்மத்தம் பித்தரோகமுண்டு.

சந்திரன் சுக்கிரன் கேந்திரங்களில் இருந்து ஐந்து எட்டில் பாவர் இருந்தால் [illegible]மகோதரம் குன்மவியாதியுண்டு.

செவ்வாய் சனி சூரியன் வியாழன் இவர்கள் லக்கினத்தில் இருந்து ஐந்தில் கேந்திரத்தில் சுபர் இல்லாவிட்டால் சன்னியாசியாய் தெய்வபக்தியா யிருப்பான்.

வியாழன் சந்திரன் சூரியன் இவர்களில் ஒருவர் லக்கினம் அல்ல பத்தாமிடத்திலிருந்து சனி பனிரெண்டில் இருந்தால் சன்னி யாவான்.

இலக்கினாதிபன் நாலுக்கதிபன் ஏழில்நிற்க ஏழுக்கதிபன் பத்தில்இருந்தால் அவன் பாக்கியமுள்ளவன்.

பத்துக்கதிபன் பத்தில் இருந்தால் மாந்திரிகன் யோகவான்.

கேந்திரத்தில் சுபக்கிரகமிருந்து இலக்கினத்தில் பாவர் இருக்க அவன் விபசாரிபெற்ற கன்னியை கலியாணம் பண்ணுவான்.

ஏழுக்கதிபனும் சுக்கிரனும் கூடி ஒருராசியிலிருந்து இவர்களை செவ்வாய் சனி பார்க்கில் கூடில் அவன் அழிந்துபோன கன்னிகையை கலியாணம்பண்ணுவான்:

கேந்திரத்தில் சூரியன் சனிகூடி ஒருபாதமேறியிருந்தால் இவாள்திசை பொசிப்பில் அறிவு பயித்தியமாகும்.

இவர்களை செவ்வாய் பார்த்தால் அறிவுகெட்டு தப்பிதமாய் பேசியாவது கூத்தாடித்தனமாயாவது திரிவான்.

சுக்கிரன் புதன் சந்திரன் பார்த்தால் சித்தப்பிரம்மையாய்த் திரிவான்.

வியாழன்பார்த்தால் சாந்தமாய் ஊமையா யிருப்பான்.

இராகு கேது கூடினால் அடிபட்டு ஆயுள்பரியந்தம் விலங்கில் படுவான்.

பத்துக்கதிபன் களத்திரம் பிதிர்மாதுரு சகோதரம் புத்திரஸ்தா இப்படி யெந்தஸ்தானங்களில் இருந்தாரோ அந்தஸ்தான குடையவர்களுக்கு அவன் திசை பொசிப்பில் கருமம் வான் அல்லது அந்த வர்க்கத்தில் கர்மம் கேழ்க்கப்படுவான்.

நாலுக்கதிபனும் ராசிக்கதிபனும் பத்திலிருக்க இவர்களுடனே சந்திரன்கூட பார்க்க அவனுக்கு கெஜகர்ணக்கோகர்ண வித்தைவரும்.

இரண்டுக்கதிபனும் நாலுக்கதிபனும் நட்பு ஆட்சி உச்சங்களிலிருந்து அவர்களுடன் புதன்கூடினாலும் பார்த்தாலும் ரசவாதவித்தை வரும்.

சூரியன் கூடினால் நல்லதெய்வங்களைப் பூசிப்பான்.

இராகு கேது கூடினால் விஷ்ணுபூசைசெய்வான்.

செவ்வாய்கூடினால் வித்தைவரும்.

சனிகூடினால் பில்லி சூனியம் வரும்.

கேது குளிகன் கூடினால் யேவல் அஞ்சனவித்தைவரும்.

நாலுக்கதிபனும் இலக்கினாதிபனும் ஒருராசியிலிருந்து அவர்களுடன் சுக்கிரனாவது சந்திரனாவது கூடினால் விஷவித்தைகள்வரும் மயேஸ்வர தெரிசனைபண்ணுவான்.

இலக்கினாதிபனும் ஏழுக்கதிபனும் ஒருராசியிலிருந்தால் அல்லது அந்தவீடுபகையாயிருக்க அல்லது செவ்வாய் பார்க்க அவனுக்கு மாரணவித்தை வரும் ஷிகிரகங்கள் நின்ற வீடுபகையில்லாவிட்டால்மனிதரை வியாதியால் விழுத்தாட்டுகிற வித்தைவரும்.

இராசிக்கதிபனுடனே நாலு ஏழுக்கதிபன் கூடியிருந்தாலும் பார்த்தாலும் பில்லி சூனியம் வைத்திருந்தாலும் எடுத்துப்போட வல்லவனாயிருப்பான்

இரண்டுக்கதிபனும் ராசிக்கதிபனும் கூடியிருக்க இவர்களுடன் சனிகூடினால் ஆசாரத்திலும் கோபுரத்திலும் கம்பம்கட்டி ஆடுகிறவித்தைவரும்.

பத்து ஒன்பது இரண்டுக்கு அல்லது ஒன்பது பத்துக்கதிபன்கூடி கேந்திர திரிகோணங்களிலிருந்தால் நரவாகனம்வரும் போகவானாகவும் தனவானாகவும் இருப்பான்.

இரண்டுக்கதிபதி லக்கினத்திலிருந்தால்வெகுதிரவியத்தைப் புதைப்பன்

பத்தாமிடத்திற்குடையவன் துர்ப்பலனாகி ஆறு எட்டு பன்னிரண்டில் மறைவிடம் பெற்றிருந்தால் துராசாரனாவான்.

சூரியன் புதன் குரு சுக்கிரன் இவர்கள் பெலயீனப்பட்டு ஆறு எட்டு பன்னிரண்டில் நின்றாலும் துராசாரனாகவும் துர்க்கர்மனாகவுமிருப்பன்.

(பத்தாம்பாவம்.)

றக்குடையவன் சுக்கிரனுடன் கூடி கேந்திரஸ்தானத்தில் உச்சத்திலிருந்தால் இவனுக்கு புண்ணியதீர்த்த பலன்கிடைக்கும்.

தன் ஆறுமிடத்திலிருக்க ஆறுக்குடையவன் உச்சம்பெற்றுபுதனை பார்ப்பானாகில் நல்ல தானதர்மங்களையுஞ் செய்வான்.

பத்தாமிடத்தில் பூர்வபட்சத்துச் சந்திரன் வலிமைபெற் றிருந்தாலும் புண்ணியதீர்த்த பலன் கிடைக்கும்.

பத்துக்குடையோனும் புதனும் நாலுக்குடையோனும் சுபக்கிரகமாகி வலிமைபெற்றிருந்தால் யாகாதிகருமங்கள் செய்வன்.

இலக்கினாதிபதி பத்தாமிடத்திலிருக்க அல்லது பத்துக்குடையவனோடு கூட சுயசம்பாத்திய பொருளால் யாகாதிமுதலிய கருமங்கள் செய்து முடிப்பன்.

பத்துக்குடையவனும் இலக்கினாதிபனும் சூரியனுங்கூடினால் தனக்குத்தாழ்ந்த ஜாதியாரின் பொருள்களையளித்துயாகாதிகர்மங்கள் செய்வான்.

இவர்களுடன் ராகுவும்கூடினால் மந்திரதந்திரங்களினாலே திரவியத்தை தேடி யாகாதிகர்மங்கள் செய்வான்.

இவர்களுடன் வியாழன் கூடினால் இராஜர்களுடைய திரவியங்களால் யாகங்களைச் செய்வான்.

பத்துக் குடையவனோடு ஏழுக்குடையவன் கூடிநின்றால் தன்மனைவியின் பொருளால் யாகாதிகர்மங்கள்செய்து முடிப்பான்.

கடகராசியில சந்திரன்நிற்க குருவும் சுக்கிரனும் அவரை நயந்துபார்க்க மதியும் பாராவதாங்கிசமேறி நின்றால் நல்ல கீர்த்திமானாகவும் சகலசம்பத்தும் பொருளு முடையவனாகவு மிருப்பான்

பத்துக்குடையவன் சனியோடுகூடி கோரோங்கிசமேறி அட்டமாதிபதியினால் பார்க்க கோரே ஆக்கினைக்குள் இவன் தேகம் பதறி நிற்கும்.

பத்துக்குடையவன் சுபர்களோடுகூடி சுபக்கிரகத்துக்கு மத்தியிலிருந்தாலும் அல்லது சுபக்கிரகத்தின் அங்கிசம பெற்றிருந்தாலும் இவன் அவமான சிக்ஷைக் குடையவனாவான்.

பத்தாமிடத்தில் பாவக்கிரகம் இருக்கப்பாவர்கள் பார்க்க பத்துக்குடையவன் பெலவீனனாக இருந்தால் அவமானமில்லாமல் கீர்த்திமானாக நல்ல புகழோடுவாழ்வான்.

பத்தாமிடத்ததிபதி சுபக்கிரகமாய் இருக்க சத்விஷயங்கள் செய்வன்.

பத்தாமிடத்ததிபதி பகைநீசத்தி லிருக்கினும் பாபக்கிரகங்கள் கூடிசஷ்டாஷ்டம வியங்களில இருக்கினும் துர்விஷயங்கள் செய்வன்.

பத்தாமிடத்ததிபதி புதனுகில் விஷ்ணுபக்தியும் சுக்கிரனுகில் அ... கைபக்தியும் குருவாகில் சிவபக்தியும் வேதாத்தியயனமும்... காரகனுகில் சுப்பிரமணணிய பக்தியும் சனியாகில் உருத்... பக்தியும் செய்குவன்.

பத்தாமிடத்தில் சூரியன்கூடில் மாந்திரீகத்தொழிலும் குளிகன்கூடி... ஆசாரானமும் செய்குவன்.

பத்தாமிடத்தில் குரு சுக்கிரன் புதன் இவர்கள்கூடினுல் வேள்விமுடிப்பன் இவர்கள் நாலாமிடத்தில் இருக்க நாலாமிடத்ததிபதி பத்தாமிடத்தில் இருக்க அல்லது பத்தாமிடத்ததிபதி நாலாமிடத்தில் இருக்க இவர்கள் ஜலக்கிரகங்களாய் இருக்கின் கங்காதீர்த்தமுதலிய புண்ணியதீர்த்தங்கள் ஆடுவன்.

பத்தாமிடத்ததிபதி நாலாமிடத்ததிபதிகள் ஜலக்கிரகங்களாய் வலிதுபெற்று சுபகேந்திரமும் பெறின் புண்ணிய தீர்த்தங்கள் ஆடுவன்.

பத்தாமிடத்ததிபதி ஐந்தாமிடத்ததிபதி இவர்களுடன்வலிதுபெற்ற கிரகங்கள் கூடில் அஷ்டாங்கயோக முடிப்பன்.

பத்தாமிடத்ததிபதி இலக்கினுதிபதி பஞ்சமாதிபதி இவர்கள் வலிதுபெற்று பத்தாமிடம் சுத்தமாய் வாக்குஸ்தாநுதிபதி வலிதுபெறில் சந்நியாசியாவான்.

பத்தாமிடம் இலக்கினம் ஐந்தாமிடம் ஏழாமிடம் நாலாமிடம் இரண்டாமிடம் இவற்றின் அதிபதிகள் வலிதுபெற்று ஒருவர்க்கொருவர் மித்ருகிரகங்களாயின் இல்லறத்திலே சிறிதுகாலம் இருந்து பிறகு சந்நியாசியாவன்.

சூரியன் இலக்கினுதிபன் சந்திரன் இவர்களில்வலிதுபெற்றோர்களுக்கு பத்தாமிடத்ததிபதி காலால், கருமமும் சீவனமும் சொல்லப்படும், ஷெ கால் சூரியன் காலாகில் வயித்தியத்தாலும் இரத்தினம் சுவர்னம் இவற்றின் வியாபாரத்தாலும் தூதாலும் பிதுரார்ச்சிதத்தாலும் சீவிப்பன். சந்திரன் காலாகில் வேளாண்மையாலும் மாதுருதனத்தாலும் ஸ்திரீகள் தனத்தாலும் சீவிப்பன். அங்காரகன்காலாகில் வேளாண்மையாலும் பூமியாலும் பிராதுருதனத்தாலும் களவு பொய் கலகம் இவற்றுலும் சீவிப்பன். புதன் காலாகிற் சிற்பம் சோதிஷம் வித்துவம் தந்திரம் கானம்பாடுதல் புரோகிதம் இவற்றுலும் பந்துக்களாலும் சீவிப்பன். குருகாலாகில் இராஜ சந்மானம் ஞானுேபதேசம் மாந்திரீகம் புராணம் நீதிசாஸ்திரம் இவற்றுல் சீவனம் சுக்கிரன் காலாகில் யானை பசு பரி இரத்தினம் சுவர்னம் இவ் வியாபாரங்களாலும் ஸ்திரீதனங்களாலும் சீவிப்பன். சனியின் காலாகில் சொற்பகாரியங்கள் கோள் வஞ்சகம் சுமைசுமத்தல் ஏவற்றொழில் இவற்றுல் சீவிப்பன்.

(பத்தாம்பாவம்.)

...ற் சொன்னவைகள் அவ்வக்கால்களின் கிரக பெலாபெலம் அறிந்து சொல்வதாம் இவ்வகையில ஏவல் செய்வோனும் ஏவுகின்ற கர்த்தாவாய் வாழ்தலும் உளவாம்.

...கிரன் கர்மேசன் தனேசன் புதன் கர்மத்திலிருக்க எக்கியம்பண்ணுவன்

வியாழமானாலுஞ் சுக்கிரனானாலும் பத்தாமிடத்திலிருக்க உச்ச ஸ்வட்சேத்திரத்திலிருக்க அவன் எக்கியம் பண்ணுவான்.

ராகு கர்மத்திலிருக்க அல்லது சூரியனிருக்க கங்காஸ்நானம்லபிக்கும்

கர்மத்தான மீனமாகியிருக்க அதில் வியாழமாவது சுக்கிரனாவது புதனாவது செவ்வாயுடனே கூடியிருக்ககங்காஸ்நானம் லபிக்கும்,

கர்மத்தானஞ் சலராசியாயிருக்க அதில் வியாழமாவது சந்திரனாவது நிறகேந்திரத்தானம் பத்தாமிட முடையவனுடனே சந்திரனாவது சுக்கிரனாவது கூடி ஸ்வட்சேத்திரங்களிலிருக்க வியத்திற் புதனிருக்க பாக்கியாதிபதி கேந்திரத்திலிருக்க கங்காஸ்நானம் பண்ணுவான்.

சந்திரன் மூன்றில் நிற்கக் கர்மாதிபதியுடனே கூடப் புண்ணியவான்.

புதனாவது *சீவனாவது செவ்வாயுடனே கூடியிருக்க அல்லது செவ்வாய் பார்க்கத் திருப்பணி முடிப்பன்.

கர்மாதிபதியுடனே நாலாமிடமுடையவன் கூட ஜீரணமாயிருக்கும் திருப்பணிகள் செய்வான்.

கர்மேசனுடனே சந்திரன்கூடினால் குளங் தடாகம் வெட்டிவைப்பான்

புதன் பத்தாமிடத்தானுடனே பத்தில் நிற்கப் பாக்கியாதிபதியைப் பாவிகள் பாராதிருக்க எக்கியமே லபிக்கும்.

கர்மாதியுடனே சந்திரன் கூடியிருக்கப் பாக்கியன் கேந்திரத் திரிகோணத்திலிருக்க ராகு கேது பாராமலுங் கூடாமலுமிருக்க எக்கிய கர்த்தாவாக இருப்பான்.

கர்மாதிபதி சஷ்டாஷ்டம நீசத்திலநிற்கபரவர்கள்பார்க்க ராகுகூட எக்கிய கர்மம் பண்ண நிச்சயித்தால் விக்கினம்வரும்.

தர்மத்தானத்திற் செவ்வாயிருக்க சுபக்கிரகம் நாலில்நிற்க சோபனுஞ்சிச மேற ஆக்கினைப்படுவன்.

பத்தில் சூரியநிற்க செவ்வாயுடனேகூட அல்லது அவர்கள் கேந்திரங்களிலிருந்தால் குருராக்கினை அடைவான்.

பத்திற் சனிநிற்க அஷ்டமாதிபதிகூட குரூராங்கிசமேற தூரதேசத்தில் ஆக்கினை.

ராகுவுங் குளிகனுங்கர்மத்திலிருக்க அஷ்டமாதிபதியுடனே ராகுகூட ஒன்பதாமிட முடையவன் நீசமாகக் குரூராங்கிசமேறவும்

---

* சீவன் = (ஜீவன்) - வியாழன். இது சோதிடசடலகாரதியில் காண்க.

தூரதேசத்தில் ஆக்கினே.

கர்மாதிபதி சுபனுகக் கேந்திரத்தில்நிற்க குரூரசஷ்டி அங்கிசமே ஆக்கினே அடைவன்.

கர்மாதிபதியுடனே கூடக் குரு சுக்கிராள்பார்க்கப் பாராவதாங்கி ஏற சற்கீர்த்தி யுடையவன்.

கீர்த்தித்தானுதிபதி புகனுக $ஸ்வட்சமித்திர வீடுகளிலிருக்க சவுமி யாள் சஷ்டியங்கிசமேற சற்கீர்த்தி யுண்டு.

கர்மாதிபதி தேவலோகாங்கிசமேற அல்லது சிங்காசனுங்கிசமேற சந்திர னுடனே கூடச் சற்கீர்த்தியுண்டு.

பத்தில் பாவிகளில்லாதிருக்க கர்மாதிபதி பெலத்திருக்கச் சுபாள் சஷ்டியங்கிசமேற சற்கீர்த்தி யுடையவன்:

தர்மாதிபதி நீசச் சனியாக மாந்திகூட செவ்வாய்பார்க்க அபகீர்த்தி.

பத்தாமிடமுடையவன் சொட்க்ஷேத்திரனுகை அல்லதுசுபர்களுடனே கூடியிருக்க இங்கிதவானுன ராஜாவாவன்,

பத்தில் பாவிகளிருக்க அல்லது பார்க்க செவ்வாய் கூடியிருக்க குரூரா க்கினே யுண்டாம்.

பத்தாமிடமுடையவன் நீசனுகப்பாவிகள்பார்க்க பாவராசி யங்கிசம் ஏற மானபங்கம் நேரிடும்.

கர்மாதிபன் சந்திரனுடனேகூடச் சவுமியாள்பார்க்கச் சுபர்கள் கேந்திரத் திரிகோணத்திலிருக்க சன்னியாசி யாவான்.

கர்மாதிபனுடனே வியாழன்கூடிப்பார்க்க அல்லது கேந்திரத் திரிகோணத்திலிருக்க அல்லது லக்கினத்துக்கு நாலாமிடத்திலிருக்க முனீந்திரனுவன்.

இலக்கினுதிபதி செவ்வாயாக பாக்கியாதியாலே கர்மாதியைப் பார்க்க கூட முனீந்திரனுவன்.

கர்மாதிபதி சனி திரேகாணமாகச் சந்திரன் சனி இவர்களுடன்கூட தேவேந்திரனுவன்.

நாலாமிடமுடையவன் சந்திரனுடனேகூட வியாழம்பார்க்க முனீந்திர யோகம்

பத்தாமிடத்தில் கெட்ட கிரகங்க ளிருக்க பத்தாமாதிபதி கெட்ட ஸ்தானத்திலாவது சத்துரு நீச க்ஷேத்திரத்திலேனும் பெலங் குறைந்திருக்க அல்லது மறைவாக பாவக்கிரகங்கள் அதை பார்த்தாலும் கைத்தொழில் யாதொன்றும் செய்யா மலும் பிறர் அன்னமே பொசித்து தனது நாளைக் கழிப்பன்.

பத்தாமாதிபதி கேந்திரம் பெற்று உச்ச க்ஷேத்திரத்திலிருந்தால் அரசனை படுத்து மந்திரியாவன்

$ ஸ்வட்சமித்திரவீடு=சொட்க்ஷேத்திரவீடும் (சொந்தவீடும்) மித்திருவீடும்

(பதினோராம்பாவம்.)

பத்தாமாதிபதி கேந்திரம் பெற்று சுவமித்துரு வீட்டிலிருந்தால் பெருஞ் செல்வனாவான்

பத்தாமிடத்தில் குரு தவிர சுபக்கிரகங்களிருக்க பத்தாமாதிபதி கேந்திர திரிகோணங்களி லிருந்தால் அஷ்ட அயிசுவரியனாவன்:

பத்தாமிடத்தில் சுபக்கிரகங்களிருக்க அல்லது அதைபார்க்கசத்கர்மங்களையே செய்வன.

கன்மத்தானத்தை பாபக்கிரகங்கள் பார்க்க அத் தானாதிபதி கெட்ட தானங்களிலிருந்தால் துர்க்கர்மங்களையே செய்வான்.

லாபத்தானாதிபதி உச்சத்திலிருக்க லக்கினத்தில் சுபக்கிரகங்க ளிருந்தாலும் அல்லது பார்த்தாலும் வெகு பிரையோசனங்களை அடைவான்.

லக்கினத்திலிருந்து பத்தாமிடமும் சந்திரலக்கினத்துக்கு பத்தாமிடமும் கன்மஸ்தானமென்றும்அத்தானத்தையும் ஸ்தானாதிபதியையும் பார்ப்பதும் தவிர அத்தானாதிபதியிருந்த நவாம்கிசாதிபனைக் கொண்டு கன்மம் பார்க்கப்படுமென்க.

பத்தாம்பாவபலன்

முற்றிற்று.

பதினோராம்பாவபலன்.

பதினோராமிடத்தில் சூரியனிருந்தால் வெகுதனம் வாகனம் யானை குதிரைகளை அடக்கும் தொழிலுண்டு தைரியம் கீர்த்தி மிருதுவசனன் சரீர புஷ்டி சித்தியுடையவன் வழக்கினால் திரவியம் சம்பாதிப்பான் ஆள் அடிமையுண்டு.

சந்திரனிருந்தால் வெகு சரீரபூஷகன் புத்திரவான் பரோபகாரி வித்தையுண்டு சம்பன்னன் கீர்த்தி யுடையவன் லாபமுண்டு வீடு வாசல் விஸ்தாரமுண்டு- மிகவும் திரவியமுடையவன் ஆளடிமையும் வெகு ஸ்திரீகளுமுண்டு.

செவ்வாயிருந்தால் சரீரபோஷகன் பூமிலாபம் மாயாவாதி பிதுர் சகோதரம் உண்டு விவசாயம் மிகுதி திரவியம் சம்பார்த்தனை உண்டு நல்ல வசனன் சூரனாகயிருப்பான்.

புதனிருந்தால் வெகு மங்களமுடையவன் தனதான்யம் வீடுவாசல் விஸ்தாரம் அநேக ஆதாயம் இதுகளுண்டு அதிகாரமுடையவன் சுகியாயிருப்பான் போகபாக்கியவான் மூர்க்கனுவன்.

வியாழனிருந்தால் சங்கீதப்பிரியன் வெகுதனவான் தனம்புதைப்பான் சுபக்கிரகமுடையவன் பெரிய தகப்பனுருடைய திரவியமுண்டு ராஜசமானன், புத்திரருண்டு ஞானமுண்டு.

சுக்கிரனிருந்தால் வெகுதனவான் வித்தைபூமிலாபம் தொழில் வாகனம் ஆதாயமிகுதி இதுகளுண்டு ஒருநாளும் தாழ்வில்லாதவன்.

சனிஇருந்தால் வெகுதனவான் பூமிலாபமுண்டு, ரா பூஜிதன் அல்ப வித்தை ஜேஷ்டனுவான், புத்தியும் போகபாக்கியம் தானியமுமுடையவன்.

ராகு கேது இருந்தால், காதுநோயுண்டு பண்டிதன் உத்தியோகத்தில் வல்லவன், நல்லபுத்திரருண்டு தனதான்ய விருத்தியுண்டு.

பதினோராமிடத்திற் கதிபன் நட்பாச்சியுச்சமாக யிருந்தால் வெகு சமர்த்துண்டு

பதினொன்றுக்கு அதிபன் நான்கில் இருந்து நாலுக்கதிபன் இலக்கினத்திலிருந்து சுபர்பார்க்க அல்லது கூடினுல், அவன் திசை பொசிப்பில் புதைய லெடுப்பான்.

ஐந்து ஒன்பதில் செவ்வாயிருந்தால் அவன்திசைபோசிப்பில் பிதாவிற்க்கும், புத்திரனுக்கும், தோஷமுண்டு.

சூரியனிருந்தால் ஆடுமாடு அதிகமாயிருக்கும், ராகுவாவதுகுளிகனுவதுகூடினுல், நாய் பன்றி பலமிருகமும் தான்யமுமுண்டாயிருப்பான்.

ஐந்து ஒன்பதில் பாபியிருந்து சுபர்பார்க்காதிருந்தால், அவன் காவல் விலங்கிலிருப்பான் அல்லது விஷத்தினுல் மரணம்.

க்ஷீணசந்திரன் பத்திலிருந்து செவ்வாய்பத்தில் அல்லதுநான்கிலிருக்க இவர்களை சூரியர்பார்க்க அல்லது கூடினுல், இவன் மரத்திலேறிவிழுந்து மரணமாவன்.

செவ்வாய் நான்கில் சூரியன் ஏழிலிருந்தால் அக்கினியினுலாவது ராஜ தெண்டனையினுலாவது மரணமாவன்.

லக்கினத்தில் சூரியன் ஒன்பதில் சந்திரன் எட்டில் செவ்வாய் ஐந்தில் சனியிருந்தால் வீடுஇடிந்து விழுந்தாவது இடிவிழுந்தாவது மலைக் கல்லுகளினாவது மரணமாவான்.

பதினோராமிடத்தில் ஆறு எட்டு பனிரெண்டாமிடத்திற் குடையவர்கள் கூடியிருந்தாலும், அல்லது தனித்துநின்றுலும், பாவர்களால் பார்க்கப்பட்டாலும், யாதொரு லாபமும் இல்லை.

(பதினோராம்பாவம்.)

இலாபாதிபதி உச்சம்பெற்று சுபர்களுக்கு மத்தியில் நிற்க லாபத்தில் நல்லோர்மேவில் லாபங்கள் அதிகமாக கிடைக்கும்.

இலாபாதிபதி உச்சம் பெற்றுதனக்கு லாபமேறி இலக்கினாதிபன்பெல வானாகில் லாபமும்கிடைத்து சுகத்தையும் அனுபவிப்பன்.

இலாபாதிபதிநின்ற வீட்டுக்குடையவன் கேந்திரங்களிலமித்துருவுடன் கூடி அல்லது பார்க்கின்றால் அதிகலாபங்க ளுண்டாகும்.

இலாபாதிபன் சூரியன்வீட்டி லிருந்தால் கிழக்குத் திக்கிலும், சுக்கிரன் வீட்டி லிருந்தால் அக்கினிதிக்கிலும், அங்காரகன் வீடாகில் தெற்கும், தென்மேற்கு திசையிலும், காரிவீடாகில் மேற்கு திக்கிலும், மதியின்வீடாகில் வாயுவுதிக்கிலும், புதன்வீடாகில் வடதிசையிலும், குருவீடாகில் ஈசானியதிசையிலும், அதிக லாபங்கள் கிடைக்கும்.

இலாபாதிபதியும் இலாபஸ்தானத்தி லிருந்தவரும், சூரியன் சந்திரன் இந்நால்வர்களும அதிகபெலவான்களாகி சுபக்கிரகத்தின் வீட்டில் சுபர்களோடுகூடி யிருக்க அவ்வீட்டிற் கதிபதியும், பெலவான்களானால் வேளாண்மைமுதலிய பயிர்த்தொழில்கள் நன்றாய்பலிப்பதுடன் அதிகதிரவியவானுமாவான், இவர்களு டைய திசைகளில் தனங்கள்வந்துசேரும்.

இலாபாதிபதி சூரியனாகி சந்திரனுடன்கூட அல்லது பார்க்கவெகுதன லாபமுண்டு.

இலாபாதிபதி சந்திரனாகி குருபார்க்க சகல பாக்கியமுஞ் சேரும்.

இலாபாதிபதி எந்தவீட்டிலிருந்தாலும், அந்தந்த கிரககாரகர்களுக்கு வெகு லாபம்கிடைக்கும்.

இலாபஸ்தானத்தில் இலக்கினாதிபதிநிற்க இலாபாதிபதி யெந்ததிசை யில் நிற்கின்றாரோ அந்த திசையில், லாபங்கிடைக்கும்.

இலாபத்தானாதிபதி லாபத்தானத்திலிருக்க குரு கேந்திரதிரிகோணங் களி லிருந்தாலும் லாபத்தானத்தில் உச்ச கிரகமிருக்க லாபத் தானாதிபதி கேந்திரதிரிகோணம் பெற்றிருந்தாலும மிகுந்த செல்வனாவன்

வியத்தானாதிபதி ஜீவனத்தானத்திலாகிலும் தனத்தானத்திலேனும் சகல போகஸ்தானத்திலாகிலு மிருக்க தனம் தானியம் பூஸ் திதி முதலிய செல்வமும் நாசமடையும்.

பதினோராம் பாவபலன்

முற்றிற்று.

பன்னிரண்டாம் பாவபலன்.

பன்னிரண்டாமிடத்தில் சூரியனிருந்தால் பெண்ஜாதிசொன்னபடிகேட்பான், வயிறுபெரிதாயிருக்கும், விதவைசங்கமன், தனயீனனாக யிருப்பான். திருடுவான், கண்களிலே ரோவுண்டு, செலவுஉள்ளவன், பிதாவுக்குதோஷம்.

சந்திரனிருந்தால் துர்ப்போதனை, துர்நடத்தை, ஸ்திரீரோகம், சரீரயீனன், மந்திரதந்திரமுள்ளவன், குணவான், பரதேசம்திரிவான் தரித்திரமுண்டு.

செவ்வாயிருந்தால் திரவியமுண்டு, வாதசரீரமுள்ளவன், சத்துருக்களுண்டு, அல்பபுத்திரன், கேது புசிபபில் சரீரபீடை, களத்திரபீடை, சுகசந்தோஷமுண்டு, சகோதரர்களுக்கு தோஷமுண்டு.

புதனிருந்தால் ஞானவான், விதரணன், சூனியபுத்தியுண்டு, பலநினைவு உண்டு, வெகுசெல வுடையவன், காமாந்தகன், அல்பபுத்திருண்டு அன்னியகிரகத்திலேவாசமுள்ளவன், பந்துக்கள்விரோதமுண்டு, மாதுருபீடை, குலத்திற்கு அதிபதியாகயிருப்பான், கடனுள்ளவன்.

வியாழனிருந்தால் பெண்புத்தியைக் கேழ்ப்பான், தயவில்லாதவன், அல்பபுத்தி, வெகுசம்போகமுள்ளவன், கிரந்திரோகமுண்டு, சண்டியாயிருப்பான், சயனஉபசாரமுடையவன், சைகைவார்த்தை சொல்வான், பரதேசவாசன்.

சுக்கிரனிருந்தால் பந்துஜனவிரோதி, தனவான், விஜயன், சர்வஐஸ்வரியன், ஜெபமுள்ளவன்.

சனியிருந்தால் ஸ்திரீயயிச்சையாவான், அங்கம் பச்சையாயிருப்பான் நேத்திரஉச்சாடனம், சுபனாகயிருப்பான், சுகியுடையவன், சகலகாரியமும் சித்திக்கும் நேத்திரவிஷபார்வை, கடினகாரன், செலவழிக்கமாட்டான், பாபிஷ்டி, அல்பாயுசுஉண்டு, ஸ்திரீதோஷமுண்டு, சிலதத்துக்கள் உண்டு;

ராகுகேதுவிருந்தால் நேத்திரரோகமுண்டு, ரூபமில்லை அழகில்லை, புத்திரதோஷமுண்டு, சரீரத்தில் வடுவுண்டு, சகோதராவாஞ்சையுண்டு

பன்னிரண்டில் சந்திரனிருக்க செவ்வாய் ஏழில்நிற்க இரண்டில் சூரியனிருந்தால் சரீரத்தில் உஷ்ணமுண்டாம்.

இலக்கினத்திற்கு ஏழு எட்டில் சூரியன் வீட்டில் சந்திரனும், சந்திரன் வீட்டில் சூரியனுமிருந்து பத்துக் கதிபனும் கூடியிருந்தால் அவன்பதினாறுவயதுமுதல் ஆயுள்பரியந்தம் நரவாகனமேறுவான், நடுவயதில் தன்மதம்விட்டு வேறேமதத்தை அனுசரிப்பான்.

(பன்னிரண்டாம்பாவம்.)

இலக்கினாதிபனும் சந்திரனும் ஒருவருக்கொருவர் பன்னிரண்டில் இருந்து சுபர்கள் பார்க்காவிட்டால் தாயும்பிள்ளையும் விரோதமாயிருப்பார்கள்.

இவ்விதம் இக்கினாதிபனுக்கும் ஒவ்வொரு காரகர்களுக்கும் ஒன்றுக்கொன்று விரையத்திலிருந்தால் ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பகையாயிருப்பார்கள்.

ஒருவருக்கொருவர் கேந்திர திரிகோணங்களில் கூடியிருந்தால்மிகுந்த சிநேகமாய் பட்சமாய் கூடியாடி அன்னியோன்யமாயிருப்பார்கள்.

இலக்கினத்திற்கு பன்னிரண்டு ஏழில் கிரகமிருந்தால் ஒருவித சகடயோகம் அலைச்சல், அகாலபோஜனம், கஷ்டஜீவனம் பொல்லாத நினைவுடையவன் வியாதியஸ்தன்.

பன்னிரண்டில் சூரியன் நாலில் செவ்வாயிருக்கப்பிறந்தவன் மலைமேலேறியாவது சுவர்மேலேறியாவது விழுந்து மரணமாவான்.

நாலில் சனி ஏழில் சந்திரன் பத்தில் செவ்வாயிருந்தால் கிணறு ஆறு குளங்களில் விழுந்து மரணமடைவான்.

பன்னிரண்டாமிடத்தில் அங்காரகன் நின்றாலும் அல்லதுபார்த்தாலும் பூமியிலுள்ள புதைபொருள்கள்இவனுக்குத்தெரியாமல மறைந்துவிடும்.

பன்னிரண்டாமிடத்தில் சூரியனும் அமரபக்ஷத்துச் சந்திரனுங்கூடியிருந்தால் ராஜதெண்டங்களால்இவன் பொருள்நாசமாகும்,

பன்னிரண்டாமிடத்தில் குருவும் சந்திரனுங்கூடி நின்றால் மிகுபொருள்தேடி அதில் சிலதை தானதருமங்கள் செய்து வாழ்ந்திருப்பான்.

சந்திரனை குருவும் சுக்கிரனும்பார்க்க, சனி துலாராசியிலிருந்தால்அதிகலோபியாகவும் தானதருமஞ்செய்யாத கல்நெஞ்சனாகவும் இருப்பான்.

வியத்தானாதிபதி இரண்டாமிடத்தில் நிற்க,இரண்டாமாதிபதிசூரியனுடனேகூட எட்டாமிடத்தில் இலாபாதிபதியிருந்தால் யாதொரு புகழுமில்லாமல் சகலபாக்கியமும் சேதமாய் போய்விடும்.

பாக்கியஸ்தானாதிபதியும் இரண்டாமிடத்தோனும் ஐந்தாமிடத்திலிருந்தாலும், பஞ்சமாதிபதி ஒன்பது அல்லது இரண்டாமிடத்திலிருந்தாலும் அல்லது இந்த மூவர்களும் இலக்கினத்திலிருந்தாலும், இவன் பொருள்களையெல்லாம் கடன்கொடுத்து இழந்துபோவான்.

வியத்தாளுதிபதி பாவர்களோடு சேர்ந்து நல்லோர்கள் வீட்டிலாவது அல்லது சுபக்கிரகங்களோடு பலவாளுககூடியும் விரையாதி பதி இரண்டில் இருந்தாலும் அனேகபாக்கியங்கள்தேடி ஒருவருக்கும் கொடுக்காமல் பூமியில் புதைத்துவைப்பான்.

* வியத்தானத்தில் இரணியனும்சுக்கிரனும் பூர்வசந்திரனும் புதனும் கூடிநின்ருல் இவன் பொருள்கள் தர்மவழில்செலவாகும்.

வியத்தாளுதிபதி பாவியாகி பாவரோடுசேர்ந்து அல்லது பாவர்களால் பார்க்கப்பட்டால் இவன் திரவியங்களையெல்லாம் துஷ்டர்களுக்கும், துன்மார்க்கர்களுக்கும் கெட்டமுயற்சிகளிலே செலவு செய்து கீர்த்திபெறுவன்.

வியத்தாளுதிபதி இலக்கினத்திலாவது, ஏழிலாவது, இருந்தால் இவனுக்குள்ள சகல பாக்கியங்களும் மாறிப்போய்விடும்.

வியத்தானத்தில் பத்துக்குடையவன் பாவளுகி பெலயீனமாயிருந்தால் ஐம்பது வயதாகியும் ஏராளமான பொருளை சம்பாதிப்பான்.

வியத்தாளுதிபதி இரண்டாமிடத்திலிருக்க இரண்டாமதிபதி வியத்தானத்திலிருக்க இலக்கிளுதிபதி நீச்சங்கிசளுயில்லாதிருக்கில் இவன் பொருள்களையெல்லாம் ராஜாக்கள் கைக்கொள்வார்கள்.

வியத்தானத்தில் லாபாதிபதியும் இரண்டாமிடத்தில் வியத்தாளுதிபதியும்நிற்க இரண்டாமிடத்தோன் பெலமற்றுப்போளுல் இவன் பொருள்களையெல்லாம் ராஜாக்கள்தெண்டமாக கைக்கொள்ளுவார்கள்.

பாக்கியாதிபதி லாபமேற இவர்களும் மித்துருகிரகமாக யிருக்குமாளுல் இவன் பிதா வேண்டிய பொருள்தேடி ராஜசமானளுகயிருந்து இவனுக்கும் போதுமான திரவியங்களைச் சேர்த்து வைப்பான்.

வியத்தாளுதிபதி ஆறு எட்டில் நிற்க சனியும் பாம்பும் வியத்தானத்திலிருக்க சுபக்கிரகங்கள் பாராதிருக்குமாகில் இவன் படுக்கை சயன சுகமில்லாதவளுகயிருப்பான்.

வியத்தாளுதிபதி சுபக்கிரகமாகி உச்ச மூல திரிகோணகேந்திரங்களிலிருக்க வியத்தானத்தில் சுபக்கிரகம்பார்த்தாலும் இருந்தாலும் சப்பரகூடமஞ்சத்தில் சயநித்து இராஜசமானளுக சுகத்தையும் அனுபவித்து தியாகியாகவும் நல்லுணவுகாரளுகவும் வேளாண்மைபலிதமும் தானதர்மங்களும் செய்வன்.

---

*இரணியன — (இரணியம்) வியாழன். சோதிடக்கடலகராதியிற்காணக.

(பன்னிரண்டாம்பாவம்.)

வியத்தானத்தில் சனியிருந்தால் ஜாதகனுக்கும் சந்திரனிருந்தால் மாதாவுக்கும் சூரியனிருந்தால் பிதாவுக்கும் குருவிருந்தால் புத்திரருக்கும் செவ்வாயிருந்தால் சகோதரர்களுக்கும்சுக்கிரனிருந்தால் மனைவிக்கும் அரிட்டம் வரும் அந்த வியத்தானமானது சரராசியாகயிருந்தால் ரொம்பவும்கெடுதலாகும் அல்லது ஷை வியத்தானமானது வந்து நிற்கும்கிரகத்திற்கு உச்சவீடாக நின்றால் யாதொரு கெடுதியும் வராமல் நன்றதாகும்.

வியத்தானத்தில் சுபக்கிரகம் நல்லோருடன் கூடியிருந்தால் திரவியத்தை சத்கர்மாதிகளில் செலவுசெய்வான்.

ஷை வியத்தானத்தில் பாவக்கிரகம் பாவர்களோடு கூடியிருந்தால் திரவியத்தை துர்மார்க்கமான காரியங்களிலும் விவகார விஷயங்களிலும் சிலவுசெய்வான்.

வியத்தானத்தில் எந்த காரகக்கிரகங்கள் வந்திருக்கிறதோ அவர்களுடைய திசை பொசிப்பு காலங்களில் அந்த காரகர்களுக்கு திரவியம் நாசமாகும்.

ஆறு எட்டுக்குடையவர்கள் பாவராகி பெலயீனமாய் வியத்தானத்திலிருந்தால் வேளாண்மை விவசாயத்தொழில்களால் திரவியங்கள் நாசமாகும்

வியத்தானத்தில் நாலுகிரகங்கள் கூட்டமாகநின்றாராகில் அடியார்களுக்குச் சிலவுசெய்வதில் திரவியம் நாசமாகும்.

வியத்தானத்தில் வலிமைபெற்று மூன்றுகிரகம் கூடியிருந்தாலும் அல்லது சுபக்கிரகம் விறையமேறிநின்றாலும்திரவியங்கள்அந்தரங்கவிசுவாசமுள்ளவர்களால் சேதமாகும்.

வியத்தானத்தில்சூரியனும் சந்திரனும்கூடிநின்றால்ராஜயோகத்திற்குச் சமானமாக பாக்கியத்தையனுபவித்தாலும் திரவியங்கள் நாசமாகும்.

சந்திரனும் செவ்வாயும் வியத்தானமேற அல்லது பார்க்க வீம்புகளினாலும் நானாவிதத்தினாலும் திரவியநாசம்.

குருவும் சந்திரனும் வியத்தானமேற திரவியத்தை போற்றிவாழ்வன்.

வியத்தானத்தில் சுக்கிரன் சுபருடன்கூடியிருக்க சயனசுகமுண்டாம்.

வியத்தானாதிபதி அதியுச்சபாகத்தில் நின்றால் சயனத்திற்கு சப்ரகூடமஞ்சங்களை விரும்புவான்.

பாக்கியாதிபதியும் அதியுச்சமான வியத்தானாதிபதியை பார்வையிட்டால் அனேக நவரத்ன மணிகளாலே செய்யப்பட்ட பூஷணங்களையும் தேடிவைப்பான்

சனி சுக்கிரன் சந்திரன் இவர்கள் ஆறு ஏழு எட்டு ஒன்பதாமிடங்களில் சேர்ந்தோர்களுக்கெல்லாம் இராஜயோகமாம்.

வியத்தானத்தில் அட்டமாதிபதியும், சனியும், ராகுவும் கூடியிருந்தால் மறுமையில் நரகலோகத்தை யனுபவித்துப்பின்சுகமடைவார்

வியேசன் பாவருடனேகூட அல்லது வியத்திற்பாவிநிற்க பாபக்கிரகம் பார்க்கபாவமூலமாகத் தனம்வரும், சனி குளிகன் ராகு வியத்திலிருக்க வியேசன் கூரூராங்கிசமேறப் பாவிகள் பார்க்கப் பாவமூலத்தினாலேதனக்ஷயம்.

வியத்தானாதிபதி சுபக்கிரகமாக கேந்திர திரிகோணத்திலிருக்க சுபக்கிரகம்பார்க்க கர்னபூஷணம் திடமாயுண்டு, பாவிகளிருக்க இல்லை.

லாபாதிபதியும் வியாதிபதியும் மூன்றில்நிற்க சுபக்கிரகம் பூரணமாய்ப்பார்க்க கர்னபூஷணமுண்டு.

வியாதிபதியும் லாபாதிபதியுங் கூடியிருக்கச் சுபக்கிரகங்கள் பார்க்கத் தீர்க்காயுசும் தனமுமுண்டாம்.

வியாதிபதியைப் பாவிகள் பார்க்கப் பாவிகளுடனேகூட தனநாசம்.

லாபாதிபதியுடனே சுபக்கிரகங் கூடியிருக்கத் தனலாபமுண்டு.

வியேசன் செவ்வாயுடனேகூடச்சகோதரத்தால்தனம்விரயம்புத்திராதிபதியுடனே வியாதிபதிகூட பெலஈனராகயிருக்கக் குரூராங்கிசம் ஏறப் புத்திராள்மூலத்தில் தனச்சேதம் வரும்.

பிதுர்த்தானாதிபதி வியாதிபதியுடனே கூட சத்துருத்தானாதிபதி பார்க்க பிதுர்மூலத்தால் தனச்சேதம், மாதுருத்தானாதிபதி வியாதிபதியுடனேகூடப் பாவர்கள்பார்க்க மாதாவினேதுவால் தனச்சேதம் வரும்.

பன்னிரெண்டாமிடத்தாதிபதி ஆறு எட்டு இடங்களிலிருந்தாலும் அல்லது எட்டுக்குடையவன் பன்னிரெண்டி லிருந்தாலும் பன்னிரண்டாமாதிபதி தனது சேர்க்கையால் பெலம் குறைந்து சத்துரு நீசவீட்டிலிருக்க ஆறுமாதிபதி பன்னிரெண்டிலிருந்தால் தனதான்யமுதலிய சம்பத்துகளெல்லாம் பெற்று சுகஜீவியாயிருப்பான்.

சுந்தரசேகரத்திற் கிரண்டாம்பாகமாகிய
தியாகராஜ சேகரம்.
முற்றிற்று.